புதுமை
ஏப்ரல் 1962
25 காசு

நீடித்து உழைக்கும்

பாத்திரங்கள்

எங்களிடத்தில் அலுமினியம், கண்ணாடி சாமான்கள், பீங்கான், எனமல் தினுசுகள், விளக்குகள், ஊறுகாய் ஜாடி, புட்டி, கார்க்கு, எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் பலவித மான சாமான்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும்.

சு. சந்தோஷ நாடார் & சன்

1/4, ஈவினிங் பஜார், பி.டி. மதருஸ்.

S. SANTHOSA NADAR & SON

1/4, EVENING BAZAR .... P.T. MADRAS.

BAROOL

கிளை ஆபீஸ்: 23. நைனியப்ப நாய்க்கன் தெரு, மதருஸ்-

37, ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.



பரந்த உலகத்தில் வாழும் மக்கள் யாவரும்
பல பழக்கத்தைக் கொண்டவர்களே. புகையிலைப்
பழக்கங்களுக்கு இடம் ஏற்பட்ட அளவு இதர பழக்கங்
களுக்கேற்பட்டதில்லை. நாக்கிலிட்டுச் சுவைத்து ரசிக்
கும் பொருள்கள் யாவற்றிலும் மூக்கிலிட, உணர்ச்சி
தரும் மூக்குத்தூள் N.V.S பட்டணம் பொடியே!
N.V.S. பட்டணம் பொடி
எல்லாவிதத்திலும் நல்லது!
NVS
தந்தி: மூக்குத்தூள்
N.V. ஷண்முகம் கம்பெனியார்
தபால்பெட்டி 555, வண்ணாரப்பேட்டை சென்னை.


கருத்தினையும்
சிந்தனையையும்
தூண்டிடச்செய்யும்
அண்மையில்
அமையப்பெற்ற
கண்கவர் கட்டிட
வேலைகளுக்குக் காரணமாயிருப்பது
சங்கர் பிராண்ட் ஸிமெண்ட்
இந்தியா
ஸிமெண்ட்ஸ்
லிமிடெட்,
மதருஸ்-2.
SANKAR IC BRAND
THE INDIA CEMENTS LIMITED, MADRAS-2
Sold and Distributed by: The Cement Marketing Company of India Limited.

இந்த இதழில்... உங்களுக்கு!

மணி : 5 ஏப்ரல் 1962 ஓசை : 9

பொய்யும், மெய்யும்	3
'கண்மூடி'—தவம்	4
மந்திரிகள் கவனத்திற்கு	5
சரணுகதி!	6
குபேரபுரியில்	8
போருக்குப்பின்...	13
பொய்மான் காடு	17
பொன் வேய்ந்த பெருமாள்	20
ஏழையின் கண்ணீர்	33
மனம் நிறைந்தது	37
நினைவு மயக்கம்	43
நட்சத்திர கிரிக்கெட்	49
என்னை நம்புவீர்களா?	52
பார்மினியோ	62
தெளிவு	67
துயரக் குமிழி	74
பாட்டு பட்ட பாடு	77
என்ன ஆச்சரியம்!	83
சகுனி	88
எதையும் தாங்கும் இதயம்	89
தாய்மை	90
பலகணி	94

இந்த இதழ் குறித்து, உங்கள் கருத்தென்ன? எழுதுங்கள், எழுதுங்கள்!

பொய்யும் மெய்யும் — "தேவிதாசன்"

காலையிலே கடல்நீரிற் குளித்தெழுந்து
கதிர்கிழக்கே தோன்றுகிருன் எனலும் பொய்யே!
மாலையிலே அயர்ந்தவனுய் உறக்கங் கொள்ள
மலையிடையே மறைகின்ருன் எனலும் பொய்யே!

சூரியன்ஏழ் பரிகள்மேற் கிழக்கும் மேற்கும்
சுற்றுகிருன் எனச்சொல்வார் அதுவும் பொய்யே!
காரியங்கள் உலகத்தில் நிகழ்வ தற்குக்
ககனத்தோர் இடமமர்ந்தே ஒளிர்தல் மெய்யே!

கோலத்துத் தண்ணொளியாற் சிறந்த திங்கள்
குறைவதுவும் வளர்வதுவும் பொய்யே யாகும்!
ஞாலத்துச் சுழற்சியினுற் ருேற்றம் மாறி
நலிந்தாலும் பிறவிடத்தில் நிலவாம், மெய்யே!

ஏழ்வண்ணத் தழகாக வளைந்து வானில்
இன்காட்சி யெனவிளங்குந் தனுசு பொய்யே!
கீழ்வான நீர்த்துளிகள் பகலோன் வீசும்
கிழமையொளி யால்வில்லாய்த் தோன்றல் மெய்யே!

பாலையிலே நீர்வேட்கை தீர்த்துக் கொள்ளப்
பதைத்தோடும் மான்காணும் நீரும் பொய்யே!
சோலையிலே சுனைப்புனலைப் பார்த்த கண்கள்
சுடுமணலிற் பேய்த்தேரைக் காணல் மெய்யே!

19-7-59

‘கண்மூடி’ — தவம்!

[உபரி [illegible] தமிழகத்திற்கு இல்லை என கேரள, கர்நாடக, ஆந்[illegible]கள் கைவிரிப்பு! — செய்தி

புதுமை

மந்திரிகள் கவனத்திற்கு!

"அழகு நிலா, முழுமை நிலா
முளைத்தது விண்மேலே!
பழமையிலே புது நினைவு பாய்ந்
தெழுந் காற்றுபோலே!"

என்று நிலவின் உதயத்தைப் பாடுகிறார் புரட்சிக் கவிஞர்.

பழமையின் அனுபவமும் புதுமையின் புத்துணர்வும் கூடிக்கலப்பதிலேதான் சாதனைகள் பிறக்கின்றன. இந்த வகையில் சென்னை அமைச்சரவையின் அமைப்பு பாராட்டுக்குரிய ஒன்றே.

பழைய அமைச்சரவையில் தேர்தலுக்கு நிற்காதவர் ஒருவர்; நின்று தோற்றவர் ஒருவர்; சட்டசபைக்கு வராது பார்லிமெண்டுக்குச் சென்ற ஒருவர்—இம்மூவர் தவிரப் பழையவர்கள் எல்லாம் பழையபடி அமைச்சர்கள் ஆகிவிட்டார்கள்!

புதியவர்களில்—பெண்களின் பிரதிநிதியாய்—சென்னை நகரின் சிறப்பாய்—இடம் பெற்றுள்ளார். திருமதி ஜோதி வெங்கடாசலம். நிர்வாகத்திறனுக்குக் கொஞ்சநாள் மந்திரியாக இருந்தபொழுதே நற்பெயர் ஈட்டிய இந்த அம்மையாரின் தேர்வு, பாராட்டுக்குரியதே.

முஸ்லிம்களுக்கு மந்திரிசபையில் பிரதிநிதித்துவம் கொடுத்தது பற்றி—இரண்டுவிதமான கருத்துக்கள் இருக்க முடியாது.

தமிழ்நாட்டு மந்திரிசபைகளில் நீண்ட நாட்களாக முஸ்லிம் பெருமக்கள் யாரும் இடம்பெறவில்லை. நீதிபதிகளாகவும் உயர்தர அதிகாரிகளாகவும் இஸ்லாமியப் பெருமக்கள் பதவிகள் பெற்றிருந்தாலும்—அமைச்சர் யாரும் இல்லையே' என்ற குறையொன்று அவர்களிடம் இருந்து வந்தது.

மேலும்—வறுமையிலும், பிற்போக்குச்சக்திகளின் பிடியிலும் சிக்கியுள்ள தமிழ்நாட்டு முஸ்லிம் சமுதாயம்—சுயநலம்கொண்ட சந்தர்ப்பவாதத் தலைமையினரால் தவறான பாதைகளில் நடத்தப்பட்டு வந்துள்ளது.

புதிய முஸ்லிம் அமைச்சர் திரு மஜீதின் பதவியேற்பு-தமிழக முஸ்லிம்களின் தலைமையை மாற்றும்; சமுதாயத்தினர் போக்கிலே புதுமையும் நிச்சயம் தோன்றும். இளைஞர் திரு. மஜீதுக்கு நமது பாராட்டுக்கள்.

தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து தேர்வு பெற்று அமைச்சராகிய திரு பூவராகன்—இளைஞர். 'ஆளும் கட்சியிலே ஆணிவேர் விட்டுக்கொண்டுள்ள பழைய தலைமுறையினருக்குத்தான் இடமோ? பதவிகளோ? இளமைக்கு இடமில்லையோ!' என்று மயக்கம் கொள்ளும் இளந்தலைமுறையினர் அச்சம் போக்குவதாக அமைந்துள்ள திரு பூவராகன் தேர்வும் பாராட்டுக்குரிய ஒன்றே.

ஆனால்—மற்ற மாநிலங்களுக்கெல்லாம் இல்லாத பெருமையாக—மிகச்சிறிய மந்திரிசபை அமைந்ததுபற்றிப் பெருமைப்பட வேண்டும் என்பதைப் பூரணமாக ஒத்துக்கொள்ள நம்மால் இயலவில்லை.

நிர்வாகப் பொறுப்பை வேகமாகவும், திறமையாகவும செவ்வனே நடத்துவதற்கு—திட்டங்கள் மூலம் பெரிதும் பெருகிவிட்ட பொறுப்பையேற்று சமாளிப்பதற்கு—மந்திரிகள் இன்னும் ஓரிருவர் அதிகம் இருந்தால்—அதில் லாபம்தானே ஒழியநஷ்டமொன்றுமில்லை. மேலும் மாநிலத்தின் — எல்லாப் பகுதிகளுக்கும் பிரதிநிதித்துவம் தரும் வாய்ப்பும் அதிலே உண்டல்லவா?

*   *

ஆளும்பொறுப்பை ஏற்றுள்ள அமைச்சர்கள் கவனத்திற்குச் சில முக்கிய விஷயங்களைக் கொண்டு வருவது மிகவும் இன்றியமையாத கடமையாகும்.

ஆட்சிப் பொறுப்பு—ஆளும்கட்சியினரால் தரப்பட்டிருப்பதை அமைச்சர்கள் மறக்கக்கூடாது.

பல நல்ல காரியங்களில் நாட்டிற்கு நல்ல முன்மாதிரியாகத் திகழும் தமிழகம—இப்பொழுது பிரிவினைச்சக்திகளால் ஓரளவு பிணிக்கப்பட்டு இருப்பதையும் அமைச்சரவை மறந்துவிடக்கூடாது.

பிரிவினை வாதங்களையும், பிற்போக்குச் சக்திகளையும—எதிர்க்க முறியடிக்க — தேசநல சக்திகள் முழுபலத்தோடு நிற்க வேண்டும்.

விடுதலை பெற்றுவிட்ட ஜனநாயக தேசத்தில் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுள்ள கட்சியினர் பலம்பெற்று விளங்க வேண்டு

சரணாகதி!

'நேருவின் அழகில் மயங்கிப் பெண்கள் காங்கிரஸிற்கு ஓட்டுப் போட்டார்கள்' என்று கூறியதை ராஜாஜி வாபஸ் வாங்கிக்கொண்டார்!— செய்தி

மென்ருல்—அதற்கு நிர்வாகத்தில் நடக்கின்ற சாதனைகள்தான் அஸ்திவாரமாக முடியும்.

இதை 'புதுமை' தோன்றிய காலத்திலிருந்து எத்தனையோ முறை நாம் வலியுறுத்தி வந்திருக்கிறோம்.

நடக்கின்ற ஆட்சி, நல்லாட்சி, ஏழைக்கு நீதி தரும் ஆட்சி—என்பது பொதுமக்களுக்குப் புலனுக வேண்டும். அதற்கு வழி பொது மக்களோடு தொடர்புள்ள அரசாங்க அதிகாரிகளும், அலுவலகங்களும் சீர்பட்டாக வேண்டும்.

பொதுமக்கள் நன்ருக நடத்தப்படுகின்றனரா? அவர்கள் குறைகள் நல்ல முறையில் தீர்க்கப்படுகிறதா? என்பதை அமைச்சர்கள் நேரடியாகக் கண்காணிக்க வேண்டும்.

'வருகிருேம் வருகிருேம்!' என்று விளம்பரப்படுத்திவிட்டு சுற்றுப் பிரயாணம் செய்து—பலன் இல்லை.

திடீரென்று தாலுகாபீஸிலே, ஆஸ்பத்திரி 'அவுட் பேஷண்ட் டிபார்ட்மெண்ட்டிலே சோதனைக்குப் போனுல்—காங்கிரஸிற்கு—மக்கள் தரும் 'அர்ச்சனைகளை'க் கேட்கும் பாக்கியம் மந்திரிகளுக்குக் கிடைக்கும்

அந்த முணுமுணுப்பு ஓயும்வரை—ஆட்சிக்கு பலம் இல்லை

* * *

மற்றென்று—அரசாங்க ஊழியர்கள்—கட்சி அரசியலில் ஈடுபாடு காட்டும் விஷயத்தை—வேறுத்தாக வேண்டும்.

நடந்த தேர்தலில் ஓட்டுக்கள் எண்ணும இடத்தில் (தென் ஆற்காடு மாவட்டத்தில்)ஒரு அதிகாரி 'இரண்டு மந்திரிகள் தோற்றுவிட்டார்கள்!' என்று சர்க்கரைபபொங்கல் சாப்பிட்டதுபோல—உற்சாகமாகக் கத்திஞராம்! எப்படியிருக்கிறது ஜனநாயக லட்சணம்!

அரசாங்க அதிகாரிகளுக்கு—தனிப்பட்ட முறையில்—சிந்தனை சுதந்திரமும், ஓட்டுரிமையும் உண்டு. ஆனல் கட்சி அரசியலில் கால் வைத்தால்—தயவு தாட்சண்யமின்றி நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

ஜனநாயக அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலேயே அரசாங்கத்திற்கு ஊழியர்களை விருப்பமில்லாவிட்டால் போகச் சொல்லவும் உரிமை இருக்கிறது.

நமதுநாட்டில்... அப்படி நடந்தால்—நீதிமன்றங்களை நாடுகிருர்கள் அதற்கு வகைதரும்...சட்டங்களை ரத்து செய்வதில் கூடத் தவறில்லை

சில தனி நபர்களின் அரசியல் வெறிக்காக...நிர்வாக யந்திரத்தை பாழாக விட முடியுமா?

1962–1963 நிகழ்ச்சிகள்!

ஒரு தபால் கார்டில் உங்களுக்கு விருப்பமான மலர் ஒன்றின் பெயரை எழுதுங்கள். 1962–1963-ம் ஆண்டில் உங்களுக்குநிகழவிருக்கும் சம்பவங்களை எழுதி அனுப்புகிறேம் வி. பி. பி. யில் ரூ. 1.25 ந. பை. கெட்ட கிரகங்களின் பலன்களுக்குப் பரிகாரங்களும் தரப்படும்

SHANTI (L-60) HOUSE,
Ambala Cantt. (India).

தேவை!

மின்சார இஸ்திரிப் பெட்டிகளை விற்பனை செய்ய ஸ்டாக்கிஸ்டுகளும், ஏஜெண்டுகளும் தேவை!

ஆங்கிலத்தில் விவரங்களுக்கு எழுதுங்கள்.

SHIVA ELECTRONICS,
702, New Rajinder Nagar.
New Delhi-5

குபேர புரியில்

நியூயார்க்கிலிருந்து-அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தலைநகராகிய வாஷிங்டனுக்குச் சென்றேன்.

வாஷிங்டனில்—நாட்டின் இருதயம் போன்ற தலைநகரிலேயே 'குபேரபுரி'யின் கொடுமை ஒன்றை நான் சந்திக்க நேர்ந்தது. 'ஜனநாயகத்தைப் பாதுகாக்கின்ற வீரர்கள்!' என்று உலகத்திற்குப் பறைசாற்றிக்கொண்டிருக்கும் அமெரிக்கர்களின் கேலிக்கூத்தான நிறவெறி பூதத்தை அங்கே சந்தித்தேன்!

நான் வாஷிங்டனில் தங்கியிருந்த ஓட்டலின்பெயர்'ஹாரிங்டன் ஓட்டல்! சாதாரண ஓட்டலாக இருந்தபோதிலும்—அங்கே நாள்ஒன்றிற்கு வாடகை சுமார் 40 ரூபாய்!(எட்டு டாலர்) அந்த ஓட்டலில் பணி செய்துகொண்டிருக்கும் சுமார் 55 வயதான நீக்ரோ வகுப்பினரான ஒரு அம்மையார் பகட்டுக்கும் படாடோபத்துக்கும் பின்னால் ஒளிந்து கிடக்கிற நிறவெறியின் கொடுமையையும், இரண்டையும் 'கிழித்து'க் காட்டினார்கள்! அந்த அம்மையார் சொன்னார்: "என் மதிப்புக்குரிய இந்திய நாட்டிலிருந்து வந்திருக்கிற விருந்தாளியே! வெள்ளை ஜனநாயகம்' என்றும், 'கறுப்பு ஜனநாயகம்!' என்றும் இரண்டுவகை இந்த நாட்டிலே இருக்கிறது. வெள்ளைத்தோலுடையோர் பேசும் பசப்பு வார்த்தைகளை நம்ப வேண்டாம்! இதோ! இந்த வாஷிங்டன் தலைநகரை எடுத்துக்கொள்ளுங்கள். 100-க்கு 55 முதல் 50 சத விகிதம் வரை கறுப்புத் தோல் மனிதர்கள் வாழ்கிறோம். ஆனால்—எங்களுக்குப் பல உரிமைகள் இல்லை. மிக முக்கியமான வாக்குரிமையும் இல்லை!'

மேலும் அவர், 'உலகத்திலேயே உங்கள் நாட்டுப் பிரதமர் நேருஜி ஒருவர் தான் உண்மையான ஜனநாயகவாதி; அவரை நான் கடவுளுக்கு அடுத்தபடியாகப் போற்றுகிறேன்' என்றும் புகழ்ந்துரைத்தார்.

அந்த மூதாட்டி விஷயங்களை மிகைப்படுத்திச் சொல்லுகிறார் என எண்ணினேன். ஆனால் வாஷிங்டனில் இருந்து அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தென் பகுதி மாகாணங்களுக்குச் சென்றபொழுது, அவர் கூறியது மெய்யே என்பது புலனாயிற்று!

வாஷிங்டனில் தங்கியிருந்த பொழுது-அப்பொழுது நமது நாட்டின் தூதுவராக அங்கே பணியாற்றி வந்த முன்னாள் பம்பாய் ஹைகோர்ட்

பிரதம நீதிபதி ஸ்ரீ சக்ளாவைச் சந்தித்தேன். அமெரிக்காவை விட்டு விரைவில் தாய்நாடு திரும்பத் திட்டமிட்டிருந்த திரு சக்ளாவிடம், நான் அந்நாட்டைப்பற்றி அறிந்ததைவிட, அவர் என்னிடம் நமது நாட்டு அரசியல் போன்றவற்றைப்பற்றிக் கேட்டுத் தெரிந்துகொண்டதுதான் அதிகம்! அரசியலிலும், நமது தேர்தல்களிலும் தனக்கிருந்த ஈடுபாட்டை அவர் சற்று அதிகமாகவே வெளிக் காட்டிக் கொண்டார்!

வாஷிங்டன் நகரில் குறிப்பிடத்தக்க ஓர் இடம்—அந்நாட்டின் முன்னேற்றத்திற்காகத் தியாகங்கள் செய்த தலைவர்களுக்கும், பொதுமக்கள் தொண்டர்களுக்கும் ஏற்படுத்தி இருக்கிற நினைவுச்சின்னங்களின் காட்சிசாலை.

எதிர்காலப்பிரஜைகளாகிய சிறுவர் சிறுமியரைப் பெற்றோரும், ஆசிரியரும் அங்கே கொணர்ந்து தேசப் பற்றை ஊட்டுகிற காட்சி மெய்சிலிர்க்கும் ஒன்று.

வாஷிங்டனிலுள்ள சட்ட மன்றமான செனட்டிற்கும். சென்றிருந்தேன். மிஸ்டர் ரோஸ், மிஸ்டர் அடைர் என்ற இரண்டு காங்கிரஸ் (அமெரிக்க சட்டசபை) அங்கத்தினர்கள் என்னை அங்கே அழைத்துச் சென்று காட்டினார்கள்.

அவர்களுடன் அமெரிக்க அரசாங்கத்தின் வெளிநாட்டிலாகாவிற்குச்சென்றோம். (State Department) மிஸ்டர் லெதர்மன், மிஸ்டர் ப்ளக்ஸ் என்ற இந்தியா பற்றிய நிபுணர்களுடன் சிறு விருந்தொன்றைச் சாப்பிட்டபடியே—உலக அரசியலை விவாதித்தோம்.

அந்த நண்பர்கள் இட்ட அன்புக்கட்டளையால்...மிஸ்டர். மக்ஹார்ன் என்ற உயர்அதிகாரி ஒருவருடன் — வாஷிங்டனிலிருந்து பத்தாவது மைலிலுள்ள அரசாங்க விவசாய ஆராய்ச்சி நிலையம் ஒன்றைப் பார்க்கச் சென்றேன்.

வாஷிங்டன் அரசாங்க விவசாய ஆராய்ச்சிப் பண்ணை மிகப் பெரியதும், அருமையானதுமாகும். ஒருநாள் முழுவதும் அதைச்சுற்றிப் பார்த்த பிறகும்—எனக்குமுழுமனநிறைவு ஏற்படவில்லை.

மனிதச் சமுதாயத்தின் மிக முக்கிய உணவுப் பிரச்னையைச் சமாளிக்கவே இந்த ஆராய்ச்சிகள் பன்றி, மாடு,

போன்ற இறைச்சி தரும் மிருகங்களை எப்படிக்கொழுக்க வைப்பது? கொழுக்க வைக்கும்பொழுதே—கொழுப்பு அதிகம் இல்லாத இறைச்சியைத்தர எந்த முறைகளைக்கையாளவேண்டும்? என்று விரிவாக ஆராய்ச்சி நடத்துகிறார்கள்.

மண், பயிருக்கு ஆதாரம். இது உலகம் அறிந்த உண்மை. ஆனால் மண்ணே இல்லாமல் பயிர், விளைக்க முடியும்.

என்ன, 'ஆகாசப்பந்தல்' போடுகிறேன் என்று நினைக்கிறீர்களா? இல்லை, இல்லை மண்ணே இல்லாமல் கண்ணாடித்தொட்டிகளில் ஒருவகைத் திரவத்தில் மின் அணுக்கதிர்களை பாய்ச்சி வளர்த்துள்ள புகையிலைச்செடிகளை நான் இப்பண்ணையில் பார்த்தேன்! மண்ணில் வளரும் புகையிலையைவிடச் செழிப்பான பாளைகளைத் தருகிறது, இந்தக் 'கண்ணாடிப் புகையிலை'!.

சுண்டைக்காய் அளவுள்ள பூக்கள், காய்கள், பழங்களை—'புட்பால்' அளவு பெருக்க வைக்க ஆராய்ச்சிகள்! அதே போல் ஆலமரம் போன்ற பெரிய பட்டே, பட்டே மரங்களை கண்ணாடித் தொட்டிகளில் சுருங்க வைத்து வளர்த்தல்! இப்படி ஒரே ஆராய்ச்சிமயமாக இருந்தது அப்பண்ணை!

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ மாளிகையான 'வெள்ளை மாளிகை'க்கும் சென்றேன். கட்டிட நேர்த்தியில் பெரும் சிறப்பில்லை என்றாலும், நாட்டின் தலைவர் வாழும் மாளிகை என்பதால் மைல் கணக்கில் 'கியூ'விலே நின்று பார்க்கிறார்கள்.

எனது அமெரிக்கச் சுற்றுப்பிரயாணத்தின் முக்கிய நோக்கமான பத்திரிகை அச்சிடும் இயந்திரம் வாங்குவதை நிறைவேற்ற — நண்பர் ஸாம் பிண்டிகோலாவுடன், அட்லாண்டா சென்றேன்.

அட்லாண்டா நகரில் நிறவெறியை நேருக்கு நேர் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

சிறுநீர் கக்கூசுகள்கூட அங்கே நிறத் திமிர்பிடித்து நிற்கின்றன! வெள்ளையருக்குத் தனிக் கக்கூசுகள்! கறுப்பர்கள் அங்கே நுழையவும் கூடாது!

நான் கறுப்பர்கள் கக்கூசை விலக்கி, வெள்ளையர் பகுதியில் நுழைந்தேன்.

உள்ளே இருந்த ஆசாமிக்கு கோபம் 'நயகாரா!' நீர்வீழ்ச்சிபோல் பொங்கி வந்தது!

"நீங்கள் தவறான இடத்தில் நுழைந்துவிட்டீர்கள்!" என்று சாடினார் அவர்.

"எது தவறான இடம்? ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?" என்று பதில் கேள்வி விடுத்தேன்.

'போர்டைப் பார்க்கவில்லையா?"

'பார்த்தேன்''!

"பின் ஏன் இங்கே வந்தீர்கள்!"

'வேண்டுமென்றுதான்! நான் இந்திய நாட்டிலிருந்து வருகிறேன்! உங்கள் நிறவெறிச் சட்டங்கள் என்னைக்கட்டுப் படுத்த முடியாது! ஆமாம்! நீங்கள் விருந்தினர்களை நடத்தும் முறை இதுதானா?

'நான், இந்தியன்' என்று அறிந்ததாலும்—எனது தைரியமான பேச்சாலும் அந்த ஆசாமி, மிரண்டுபோய் "மன்னியுங்கள், மன்னியுங்கள்!" என்று முணுமுணுத்தபடியே ஓட்டம் பிடித்து விட்டார்!

ஆனால் அட்லாண்டா பகுதி அமெரிக்கர்கள் அனைவருமே நிறவெறி கொண்டவர்கள் என்று சொல்ல முடியாது.

பத்திரிகைக் கடை ஒன்று நடத்தும் ஓர் இளைஞர் மகாத்மா காந்தியைப் பற்றிய நூல் ஒன்றைப் படித்துக்கொண்டிருந்தார். எனக்கு அவசரமாகத் தபாலில் சேர்க்க சில கடிதங்கள் இருந்தன: அவர் மிகவும் பணிவன்புடன் தேவையான தபால் பில்லைகளை வாங்கிக் கொடுத்ததுடன் 'மகாத்மாவின் நாட்டிலிருந்து வருபவர். உங்களை நான் மிகவும் நேசிக்கிறேன்!' என்று உள்ளம் நெகிழ உரைத்தார்.

'நிறவெறியில் மூழ்கி உள்ள இப்பகுதியில் இப்படியும் ஒருவரா? என்று நான் ஆச்சரியப்பட்டு. 'உங்கள் சொந்த மாகாணம் எது!' என்று கேட்டேன்.

'சிகாகோ!' என்று பதில் வந்தது! அதுதானே பார்த்தேன்: தொழிலாளர் நிரம்பிய முன்னேற்றக் கருத்துக்களுடைய வடபகுதி நகரமல்லவா அது!

அட்லாண்டாவில் நேர்ந்த அநுபவம், என்னுடன் வந்த நண்பர் ஸாம் பிண்டிகோலாவிற்குத் தெரிந்ததும், மிகவும் கவலை தெரிவித்தார். அத்துடன் மீண்டும் அந்தச் சம்பவங்கள் நிகழாத முறையில் நாங்கள் தங்கிய இடங்களில் எல்லாம், முதலில், 'மிஸ்டர். கோசல்ராம், இந்தியாவில் சட்டசபை அங்கத்தினர்; பத்திரிகாசிரியர்' என்பதையெல்லாம் 'விளம்பரம்' செய்து வைத்திருக்கிறார். இது எனக்கு பிறகு தான் தெரிந்தது.

அட்லாண்டாவிலிருந்து மிஸிஸிபி போய் அங்கிருந்து விமானத்தில் ஜாக்ஸன் என்ற ஊரை அடைந்தோம்—

வழக்கமான பெரியஹோட்டல்களில் உணவு சாப்பிடுவதைவிட-காபிடேரியா

எனப்படும் சிற்றுண்டிசாலையொன்றிற்குப்போகலாமே என்று சொன்னேன். அங்கேதான் வந்தது ஆபத்து!

'பார்' எனப்படும் உணவு தரப்படும் இடத்திற்கு நான் சென்றதும், அங்குள்ள பணிப்பெண்கள்—திறந்த வாய் மூடாது, கண்களைக் கொட்டாது, கரண்டிகளையும், தட்டையும் போட்டுவிட்டு, ஏதோபேய், பிசாசைப் பார்த்தவர்கள்போல ஓட ஆரம்பித்துவிட்டார்கள்! அதற்குள் 'நண்பர் பிண்டிலோலா–'நான் யார்?' என்ற அறிமுகத்தை மானேஜரிடம் சொல்லி அவரை அழைத்துக்கொண்டு வந்தார். அவர், 'மிஸ்டர்: கோசல்ராம்! இங்கே எங்கள் நாட்டில்,பல காரணங்களுக்காக உள்ள குறைகளை நீங்கள் மிகைப்படுத்தக்கூடாது. எங்களை மன்னிக்க வேண்டும்' என்று பெரிதும் வேண்டினார். பிறகு, ஓட்டலரசிகளை மீண்டும் அழைத்து வந்து உணவு பரிமாறவும் வைத்தார்!

இதிலே மற்றொரு 'விசேஷம்' என்னவென்றால் உணவு தட்டுகளை கொண்டு வைப்பவர்களும் சாப்பிட்ட உணவுத் தட்டுகளை சுத்தம் செய்வதெல்லாம்—கறுப்பர்கள்! என் மனம், இக்காட்சிகளால், மிகவும் கசந்துபோயிற்று.

நான் வேதனைக்காட்சிகளைக் கண்டுகொண்டிருந்த நேரத்திலேதான்—தென் மாகாண நீக்ரோக்கள் பஸ்களிலும், ஓட்டல்களிலும், பள்ளிகளிலும் நிறவேற்றுமை காட்டக்கூடாது என்று சாத்வீகப் போராட்டம் நடத்திக் கொண்டு இருந்தார்கள். எனவே ஒரே அமளியாக இருந்தது.

அதே நேரத்தில்—அங்கே நான் கேள்விப்பட்ட ஒரு செய்தியையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அமெரிக்க ஜனாதிபதி திரு. கென்னடி மத்திய அரசாங்கப் பொறுப்பிலுள்ள இராணுவ வீரர்களை — கிளர்ச்சிகளை அடக்க அனுப்பவேண்டுமா? என்று ஒரு மாகாணகவர்னருக்கு டெலிபோன் செய்தாராம். முதல்முறை ஜனாதிபதியின் செய்தி வந்தபொழுது 'கவர்னர் ஊரில் இல்லை' என்று தகவல் தரப்பட்டதாம்: அடுத்தமுறை கவர்னர் ஜனாதிபதியிடம் 'இது' எங்கள் மாகாணத் தகராறு; இதில் தலையீடு வேண்டாம்!' என்று பதில் அளித்துவிட்டதாகவும் சொல்லிக்கொண்டார்கள்.

நமது நாட்டில்—பெடரேஷனுக்கும் பிரிவினைக்கும் நடுவிலே நின்று 'கான்பெடரேஷன்!' பேசும் அரசியல் வாதிகளை—(பிரிந்து செல்லும் உரிமையோடு உள்ள கூட்டாட்சி) அப்பொழுது நினைத்துக் கொண்டேன். நீக்ரோக்களை மாகாண அரசு அடக்கி, ஒடுக்கும் நிலையிலும் தலையிட அதிகாரமில்லாத மத்திய அரசின் தவிப்பு நிலையை அங்கே கண்டேன்.

மீண்டும் ஜாக்ஸனில் இருந்து மிஸிஸிபி வழியாக அட்லாண்டா வந்து அங்கிருந்து விமானத்திலேயே வாஷிங்டன் வந்து சேர்ந்தோம்.

நூற்றுக்கணக்கான மைல்கள் பிரயாணம் செய்தஅலுப்புத் தீர-சிலமணிகள் மாத்திரமே தங்க என்று அமைக்கப்பட்டுள்ள அறையொன்றில் சிலமணிகளை உறக்கத்தில் கழித்தேன். அந்த மூன்று, நான்கு மணி நேரத் தங்கலுக்கு ஒரு ஆள் மாத்திரம் தங்க வசதியுள்ள அறையின் வாடகை 6 டாலர்!

வாஷிங்டனிலிருந்து நியூயார்க் வந்து குபேரபுரியைவிட்டுப்புறப்பட ஏற்பாடுகள் செய்யலானேன். அடுத்து இலண்டன் செல்லவேண்டும். என்னிடம் இருந்த விமான டிக்கெட் ஸ்விட்ஸர்லாந்து நாட்டின் 'ஸ்விஸ் ஏர்வேஸ்' டிக்கெட், அந்தக் கம்பெனி விமானத்திலே பிரயாணம் செய்தால்—நேரே ஜெனிவா போய், பாரீஸ் வந்து பிறகுதான் இலண்டன் செல்லலாம்.

'சுவிஸ் ஏர்வேஸ்' அதிகாரிகளிடம் நேரே இலண்டன் செல்லும் ஏர் இந்தியா விமானத்திற்கு டிக்கெட்டை மாற்றச் சொன்னதற்கு மறுத்துவிட்டார்கள்.

சர்வதேச விமானக் கம்பெனிகளின் சட்டதிட்டங்களின்படி ஒரு விமானக் கம்பெனியின் டிக்கெட்டை வேறு கம்பெனிக்கு மாற்றிக்கொள்ள அனுமதி உண்டு. என்றாலும்-'சுவிஸ் ஏர்' அதிகாரிகள் மறுத்துவிட்டார்கள்.

நேரே ஏர் இந்தியா ஆபீஸிற்குச் சென்றேன். அங்குள்ளஅலுவலகத்தில் இந்தியக் கம்பெனியின் ஊழியத்திலுள்ள அமெரிக்கர் ஒருவரிடம் இதைக் கூறியதும், உடனே என்னுடன் சுவிஸ் ஏர் ஆபீஸுக்குவந்து–இரண்டு, மணி நேரம் சண்டை போட்டு–டிக்கெட்டை 'ஏர் இந்தியா'விற்கு மாற்றிக் கொடுத்தார்!

ஓர் அமெரிக்கர் தான் ஊழியம் செய்யும் அரசாங்கத்திற்கும் தேசத்திற்கும் காட்டிய விஸ்வாசத்தை நினைக்கும் பொழுது நமது தேசமக்கள் அத்தகைய பருவத்தை எப்பொழுது அடைவார்கள் என்ற எண்ணம் தோன்றிற்று.

கிலோ அளவில் வாங்குங்கள்...

மெட்ரிக் எடைகள்

சுலபமானது ஒரே சீரானது

இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது

DA 61/749

சென்ற இதழ் தொடர்ச்சி

போருக்குப் பின் ?

எல்லை தெரிகிறதா ?

சுதந்திரத்திற்குப் பின்னர் சோஷலிசப் பாதையில்தான் நடைபோட்டோம். அதன் அடிப்படையில்தான் திட்டங்களை உருவாக்கினோம். நிறைவேற்றினோம். லட்சிய எல்லை தென்படுகிறதா?

ஆம், தென்படுகிறது. ஆனால் எல்லையை பூர்ணமாக நெருங்கவில்லை. காரணம்? நெருங்க விரும்பவில்லை என்பதல்ல, நெருங்கிச் செல்லும் வேகத்தை அதிகரிக்க இயலவில்லை என்பதுதான்! ஏன் வேகமாகச் செல்ல முடியவில்லை?

40 கோடி மக்கள் கொண்ட ஒரு நாட்டைப் புனரமைப்பது என்பது அவ்வளவு சுலபமான வேலையல்ல. இருந்தபோதிலும் கடந்த 14 ஆண்டு கால சாதனைகளை முறையாக கணக்கிட்டால் மகத்தான சாதனைகளைப் புரிந்திருக்கிறோம் என்ற உண்மை புலப்படாமல் போகாது.

முடிவு செய்யப்பட்ட விஷயம்

இந்திய சமுதாய வளர்ச்சிக்கு சோஷலிஸ்ட் அமைப்பு முறைதான் சரியானது என்பது விவாதித்து முடிவு செய்யப்பட்ட விஷயம். எனவே வறுமையையும் சமுதாய பொருளாதாரப் பிற்போக்கையும் எதிர்த்துப் போராடி ஒழிக்க வேண்டியதுதான் தேசத்தின் தலையாய கடமை. இதை ஆதர்சமாகக் கொண்டுதான் 1938-ம் ஆண்டு இறுதியில் காங்கிரஸ் 'தேசிய திட்ட கமிட்டி'யை அமைத்தது. சுதந்திரம் பெற்ற பின் காங்கிரஸ் ஆட்சியில் இரண்டு ஐந்தாண்டு திட்டங்களை நிறைவேற்றி மூன்றாவது திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் நிற்கிறோம். இதன் மொத்த முதலீடு ரூ. 10,200 கோடி.

எங்கே சென்றது ?

நாட்டின் செல்வாதாரம், அந்நிய முதலீடு, தேசிய வருமானம், தனி நபர் வருமானம், அந்நியக் கடன், ஜனத்தொகைப் பிரச்னை ஆகியவை ஒன்றுக்கொன்று சங்கிலித் தொடர் போல் பிணைந்துள்ளன. இந்நிலையில் ஒரு இனத்தின் ஏற்றத்தாழ்வு மற்றவைகளையும் பாதித்துவிடுகிறது.

கடந்த பத்து வருடங்களில் தேசிய வருமானம் 42 சதவிகிதமும் தனிநபர் வருமானம் 20 சதவிகிதமும் உயர்ந்திருக்கின்றன. இந்த உயர்வு எங்கே?

உயர்வுக்கு காரணமாக இருந்த சாதாரண இந்தியப் பாமர மகனிடம் சென்றுவிட்டதா? இல்லை! எங்கே சென்றது என்பதைக் கண்டுபிடிக்க சர்க்காரே ஒரு கமிஷனை நியமித்திருக்கிறது.

திட்டங்களை நிறைவேற்ற கடன் வாங்காமல் தீராது. மூன்றும் திட்ட காலத்தில் 2600 கோடி ரூபாய் கடன் வாங்க சர்க்கார் யோசித்துக் கொண்டிருக்கிறது. கடனுக்கும் வட்டிக்கும் வருஷத்திற்குச் சுமார் 100 கோடி செலவாகிறது.

பின்தங்கிய நாடு என்ற தன்மையில் இந்தியா போன்ற ஒரு நாடு அந்நிய மூலதனத்தை வரவேற்காமல் முடியாது. அதே சமயம் ஆரம்பிக்கப்படும் தொழிலில் ஏகபோக ஆதிக்கம் செலுத்தவோ, பெருமளவு லாபத்தைக் கொண்டு செல்லவோ முடியாத நிலையில் சில கட்டுதிட்டங்கள் அவசியம்.

1948ல் 256 கோடியாக இருந்த அந்நிய மூலதனம் 1958ல் 570 கோடியாக உயர்ந்திருக்கிறது. இந்திய முதலாளிகளுடன் கூட்டுச் சேர்ந்தும் பெரும் தொழில்கள் ஆரம்பிக்கப்படுகின்றன.

தனியார் துறையும், பொதுத்துறையும்

தனியார் துறை, பொதுத்துறை இரண்டும் இப்போதைக்கு உற்பத்திப் பெருக்கத்திற்கு அவசியம். ஆனால் தனியார் துறையில் ஏற்படும் வளர்ச்சி சில புதிய சிக்கல்களைத் தோற்றுவிக்கத்தான் செய்யும். தொழில்களில் ஏகபோகம் வளர்ந்து, பொருளாதார சக்தி ஒரே இடத்தில் குவியுமானால் சமுதாயக் கட்டுக்கோப்பு தளரும் அபாயம் ஏற்படலாம். ஆகவே கடுமையான கட்டுப்பாடு, வரி விதிப்புகளின் மூலம் தீர்வு காணவேண்டும்.

தொழிலும் விவசாயமும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையவை என்ற நிலையில் இரண்டின் வளர்ச்சியிலும் பிரதான கவனம் தேவைப்படுகிறது. விவசாய வளர்ச்சியில்தான் தொழில் வளர்ச்சி அடங்கியிருக்கிறது.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பூர்ணமாக ஒழிப்பது என்பது நாடு முற்றிலும் தொழில் மயமாகாத வரையில் சாத்தியமில்லை.

நேரடி வரியை அதிகரித்து மறைமுக வரியை குறைக்கும் தன்மையில் வரி விதிப்பு முறைகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

மொத்தத்தில் திட்டங்கள் மக்களை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்கின்றன.

யாருக்காக கலை?

சோஷலிச சகாப்தத்தில் மக்களுக்காக கலையே ஒழிய கலைக்காக மக்களல்ல. சாமான்ய மக்களுக்கு எட்டாத உயரத்தில் — உல்லாச உப்பரிகைகளிலே சிக்கியிருந்த கலை இப்போது வீதிக்கு வந்துவிட்டது. இரு பக்கமும் கூரான ஆயுதம்போன்ற கலை பிற்போக்கானவர்களின் கையில் சிக்கிவிட்டால் களை இழந்து விடுகிறது.

நிலப்பிரபுத்துவம் மக்களை எப்படிச் சுரண்டி சீரழித்தது? பழமை விரும்பிகள் அதை எப்படிப் பாதுகாக்க முயல்கிறார்கள்? வளர்ந்து வரும் சோஷலிச இயக்கத்தின் கண்ணோட்டமென்ன? சுரண்டல் வர்க்கத்தின் சூழ்ச்சிகளை, விதி மேல் பழியைப் போட்டு வாழ்வைத் வாழ்த்தும் மக்களிடையே எப்படி உணரவைப்பது?

இத்தகைய கருத்துக்களை மையமாகக்கொண்ட திரைப்படங்களும் நாடகங்களும் உருவாக வேண்டும். ஆனால் தமிழகத்தின் இன்றைய நிலை என்ன? வாழ்வை வளமாக்க வழிகாண பயன்படவேண்டிய கலை — மனித வாழ்வை மெருகிட்டு காட்டப் பயன்படும் கூடமாக காட்சி அளிக்க வேண்டிய கலை, மனிதனுக்கு உதவ வேண்டிய கலை ஏன் இன்று சீரழிந்து சீர்குலைந்து நிற்கிறது? மாற்றி அமைத்தாகவேண்டிய உடனடிப் பிரச்னை!

உலக சமாதானம்

உலகெங்கும் காலனி ஆதிக்கம் மறையவேண்டும், ஒவ்வொரு நாடும் தன் நாட்டுக் கலாசாரம், பண்பாடு ஆகியவற்றுக்கேற்ப அமைப்பு முறைகளை ஏற்படுத்தி சுயமாக இயங்கும்படி விட்டு விடவேண்டும். உலக சமாதானம் நிலவ இது ஒன்றே வழி.

மாநிலங்கள் ஒவ்வொன்றும் பொருளாதார கலாசார எழுச்சி பெறுவதோடு தனது தேசிய மரபுகளையும் பாதுகாக்கவேண்டும். ஒன்றின்வளர்ச்சியில் மற்றொன்றின் அழிவு அடங்கியிருக்கவில்லை என்பது உணரப்படவேண்டும். சோஷலிச சமுதாயக் கட்டுக்கோப்பில் இந்திய தேசிய ஒருமைப்பாடு உறுதியுடன் நிலைத்து நிற்கும் என்பதில் சந்தேகமில்லை.

உடனடிப் பிரச்னைகள்

*தேச சுதந்திரம் பாதுகாக்கப்படவேண்டும்.

*சர்க்கார் துறைத்தொழில்கள் விஸ்தரிக்கப்படவேண்டும்.

*தீவிரமான விவசாய சீர்திருத்தங்கள் மூலம் உணவு சுய தேவை பூர்த்தி செய்யப்படவேண்டும்.

*அரசியல், சமூக, பொருளாதார வாழ்க்கையில் ஜனநாயகம் நிலை பெறவேண்டும்.

அவசர அவசியமாக இந்தக் காரியங்களை நாம் சாதித்தாகவேண்டும். இந்தியா முழுவதிலும் ஒருஸ்திர சர்க்கார் இயங்குவதன் மூலமே இது சாத்யமாகும். அத்தகையதொரு சர்க்காரைக் காங்கிரஸ்தான் நிறுவியிருக்கிறது.

சோஷலிச லட்சியத்தைத் தன்னகத்தே கொண்டு ஆட்சி நடத்த எண்ணும் காங்கிரசைப் பிரிவினைசக்திகளும் நிலப்பிரபுத்துவ பிரதிநிதிகளும்தடுத்து நிறுத்த முற்படுகின்றனர். காட்டாற்று வெள்ளம்போல் வளர்ந்து படர்ந்து வரும் ஜன எழுச்சியில் இந்த எதிர்ப்புகள் தவிடுபொடியாகிவிடும்.

நாஜிகளாலும், பாஸிஸ்டு வெறியர்களாலும் சாதிக்க முடியாததை இந்தப் புல்லுருவிகளா சாதித்துவிடுவார்கள்?

நேருவின் அறைகூவல்.

"சோஷலிசம் இன்றி இன்றைய உலகம் இயங்க முடியாது, என்று அறைகூவல் விடுத்துச் சொல்லுகிறேன். இன்றைய சகாப்தம் பத்தாம் பசலி முறையை சகித்துக்கொண்டிருக்காது'' என்று சமீபத்தில் காங்கிரஸ் மாநாட்டில் விஷயாலோசனைக் கமிட்டியில் பேசும்போது பாரதப்பிரதமர் நேருஜி உறுதியான குரலில் பேசினார்.

எல்லோருக்கும் உணவு, உடை, வீடு கிடைக்கச் செய்வது மட்டும் காங்கிரஸ் சோஷலிசமல்ல. வளமான புதிய வாழ்வு காணவேண்டும். இந்திய சமுதாயத்தின் வளர்ந்துவரும் பொருளாதார, ஆன்மீகத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும். தொல்லை துன்பங்களற்ற, வாய்ப்பும் வசதியுமிக்க வாழ்க்கையை இந்தியப் பாமரனும் பெறவேண்டும். கல்வி கேள்விகளில் சிறந்து, பிணியகன்ற இன்ப வாழ்வை எய்தவேண்டும். விஞ்ஞானம், கலை, இலக்கியம் போன்றவைகள் இந்தப் புனித லட்சியங்களை அடைய உதவட்டும். இந்திய ஜனசமுதாயம் தன்சக்திக்கேற்ப உழைத்து இப்போதைக்கு உழைப்பிற்கேற்ற ஊதியத்தைப் பெறட்டும்.

சோஷலிச குடியரசு

நாம் கனவு காணும் இன்பபுரியை அடையவும் சில பல முற்போக்குச் சட்டங்களைத் தொடர்ந்து இயற்றவும் காங்கிரசே மீண்டும்ஆட்சிக்கு வந்திருக்கிறது. வழி காட்ட தன்னலமற்ற தலைவர்களும் கலங்கரை விளக்காக சோஷலிச லட்சியங்களும் துணை நிற்கின்றன.

பாதை தெரிந்தது. சங்கநாதம் கேட்டது; அழைப்பு வந்துவிட்டது. உண்மைப் பதாகையை உயரத் தூக்கிப் பிடிப்போம். பீடு நடை போடுவோம், வெற்றி கோஷம் விண்ணதிர முழங்க சுதந்திர ஜனநாயக சோஷலிச குடியரசை நிறுவுவோம்.

வாழ்க பாரதம்! வளர்க சோஷலிசம்!

''சாமியில்லை பூதமில்லை, நீ ஒரு நாஸ்திகன் என்றும் சொல்லிக்கொள்கிறாயே பின் எதற்காக கற்பூரத் தொழிற்சாலை ஆரம்பித்தாய்?''

''ஆஸ்திகத்தைக் கொளுத்தத்தான்!''

ரூபாய் **608,00,00,000** எல். ஐ. சியின் புதிய வணிகம் கடந்த ஆண்டுகளைக் காட்டிலும், 1961 ஆம் ஆண்டில் வளர்ச்சி அடைந்துள்ளது. வணிகத்தைப் பாதிக்கும் வகையில் தடைகள் பல இருந்தபோதிலும் நிறைந்த அளவில் பலன் கிட்டியிருக்கிறது. நாட்டின் பெரும் பகுதிகளில் இயற்கையன்னையின் சீற்றத்தால் வெள்ளமும், வேதனை தரும் வேறுபல இடையூறுகளும் கள ஊழியருக்குச் சோதனை போல் அமைந்தன. இருப்பினும், இத்துணை இன்னல்களையும், எல். ஐ. சியின் சிறப்புமிக்க கள அலுவலர் வென்றுள்ளனர். இவ்வெற்றியின் சின்னம்: ரூ. 608 கோடி புதிய வணிகம்.

1961 ஆம் ஆண்டு வெற்றிச் சரிதத்தின் சுருக்கம் இது:

புதிய வணிகம் ரூ. 608 கோடி. இது 1960ஆம் ஆண்டைக் காட்டிலும் ரூ. 111 கோடி அதிகம்.

புதிய பாலிசிகளின் எண்ணிக்கை- 14,67,000. 1960ஆம் ஆண்டைக் காட்டிலும் 2,00,000 பாலிசிகள் அதிகம்.

பாலிசிதாரர்களுக்குப் பெருமளவு நன்மைகள் வழங்குவதும், நாட்டின் 5 ஆண்டுத் திட்டங்களுக்கு உதவுவதும்தான் எல். ஐ. சி வணிகத்தின் தலையாய குறிக்கோள். ஆகையால் எல். ஐ. சி வணிக வெற்றியின் பெற்றிகள் அனைத்தும் உங்களையே சாரும்.



“மல்லூரில் மனைவியையும் மகளையும் விட்டுவிட்டு ஏற்காட்டில் வாழும் காஞ்சி மண்டலத்தாரைக் காணவேண்டும்” என்றும் மல்லூரில் மூன்று நாட்களுக்குமேல் தங்கக் கூடாது என்றும் நான் கொண்ட திட்டம் இந்த, “பொய்மான் கரட்டால்” குறித்தபடி முடியவில்லை.

“சீனிவாசனாரே! மல்லூருக்கு வந்தவர்கள் பொய்மான் கரட்டைப் பார்க்காவிட்டால், அது பைத்தியக்காரத்தனம் என்று என் நண்பர்கள் குறைகூறுவார்கள்'' என்றேன் நான். அதற்குள், “பொய்மானைக் கண்டதும், அப்படியே கொல்லிப்பாவையையும் காணலாம் என்று போக வேண்டாம். என்னால் அங்கெல்லாம் அலைய முடியாது. பொய்மானைப் போலவே அங்கும் ஒரு மங்கையின் சிலை இருக்கிறதாம். தூரத்திலிருந்து சிலையைக் கண்டதும், அது ஒரு ‘ரூபவதியின் சிலை’ என்று கருதும் அளவுக்கு அதன் உருவம் அழகாகக் காட்சி அளிக்குமாம். ஆகையால் பொய்மானைக் கண்டவுடனேயே வீட்டுக்குத் திரும்பவேண்டும்'' என்று மனைவியின் சட்டம் பிறந்தது.

பொய்மான்கரட்டின் மலையடிவாரத்திற்கே பஸ் போய் நிற்கிறது. அது சேலம் டவுனிலிருந்து ஏழு மைல் தூரம் இருக்கிறது. பொய்மான் கரட்டுப் பிரயாணம் அப்படி ஒன்றும் கடினமானதில்லை. மங்கையரும், குழந்தைகளும் கஷ்டமின்றிச் சென்று காணலாம். பஸ்ஸைவிட்டு இறங்கியதும், ஒரு பரதேசி வந்து, எங்களை வரவேற்றார். ரஸ்தாவைவிட்டுச் சற்றுக் கிழக்குப் பக்கமாகச் சுமார் முப்பது அடி வரையில் அழைத்துச் சென்று, ஓரிடத்திலே நின்று, “அதோ பாருங்கள்” என்று சுட்டிக்காட்டினார் அவர். நாங்களும் பார்த்தோம். ஒரு மான் தன் காதைத் தூக்கிப்பார்ப்பதுபோல் தெரிந்தது. நான் உடனே ‘பைனாக்குலரை’ எடுத்துப்பார்த்தேன். திருச்சி ரஸ்தாவிலிருந்து இருவர், ‘டக்’கென்று என்னை நோக்கி வருவது தெரிந்தது. பைனாக்குலரை உடனே விலக்கிவிட்டு அவர்களைப் பார்த்தேன்.

“நாங்களும் கொஞ்சம் ‘பைனாக்குலர்’ மூலம் பார்க்கவேண்டும்! தயவுசெய்து தரமுடியுமா?'' என்று அவர்கள் கேட்டார்கள். நாங்களும், திரு. சீனிவாசனும்

பிலோ. இருதயநாத்

மற்றவர்களும் சேர்ந்து பஞ்ச பாண்டவர்களைப்போல் ஆராய்ச்சியில் இறங்கினோம். "நாங்கள் நால்வரும் மேலே அந்தப் பெரிய பாறையின் முனை வரையில் வந்து பார்க்கிறோம். நீ பாறையின் இடுக்கில், "டார்ச்சு அடிக்கவும்" என்று என் மனைவியிடம் கூறிவிட்டு, 'சீனிவாசரே! நீர் தயவு செய்து என் மகள் பிரேமாவைப் பிடித்துக் கொள்ளவும். இல்லாவிட்டால் இவளும் என் பின்னால் மலையின் மேல் வந்துவிடுவாள்" என்று கூறினேன்.

நாங்கள் கூறியதையும், மலையின் மேலும் கீழும் ஓடியதையும் கண்ட ஒரு பெரியவர் நகைத்தார்.

"பெரியவரே! இம்மலையைப்பற்றித் தங்களுடைய அபிப்பிராயத்தையும். குன்றின் கதையையும் தாராளமாகக் கூறலாம். எங்களுக்குத் தாங்கள் கூறும் கதையும் வேண்டும்" என்றேன்.

"என்னுடைய அபிப்பிராயமில்லை. எனக்குப் பெரியவர்கள் கூறிச்சென்றதைத்தான் நான் கூறப் போகிறேன்: இராவணனுக்குத் தக்க ஆள் யாரும் கிடைக்காததால் தன் மாமனாகிய மாரீசனை, மானுருவாகிச் சீதையை ஏமாற்றி வரச்செய்தது எல்லோருக்கும் தெரியும். இராமன் மானைத் துரத்திச் செல்லும்போது அவரால் தொடுக்கப்பட்ட பாணம் பட்டதும், இந்த மலையில் பிளவு ஏற்பட்டதாகவும், அதில் மாரீசன் அபயம் பெற்றதாகவும், அந்த மாயமானே இன்று நமக்கு மாயமாகக் காட்சி அளிக்கிறதாகவும் சொல்லுகிறார்கள். நான் கூறுவது பொய்யோ—மெய்யோ அந்தக் கற்பனையே பிரமாதமாக இல்லையா?" என்றார் பெரியவர்.

"பெரியவரே கற்பனை பொய்யோ—மெய்யோ தள்ளுங்கள். இராமர், லக்ஷ்மணர், சீதை,மான், இராவணன், இவர்கள் கட்டாயம் இருந்திருக்கவேண்டும். அப்படி இல்லாமல், இந்தக் கற்பனை பிறந்திருக்காது என்பதை நாம் எல்லாரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்" என்று கூறியபின் நாங்கள் எங்கள் ஆராய்ச்சியை ஆரம்பித்தோம்.

பல்லாண்டுகளுக்குமுன், ஆடுமாடு மேய்ப்பவர்கள் இருவர் தூரத்திலிருந்து தற்செயலாக இந்தநிழலைக் கண்டிருக்க வேண்டும். அப்படிப் பார்த்த இடையர்கள் அந்த மானைப் பிடிப்பதற்காக

போய்மான் கரடு : அடிவாரத்தில்...



மலையின் மேல் சென்றிருக்கவேண்டும். சென்றவர்கள் ஏமாந்து திரும்பிஇருக்க வேண்டும். கீழே வந்தவர்கள் மறுபடியும் மானின் நிழலைப் பார்த்திருக்க வேண்டும். பலமுறை அப்படிச்செய்து கடைசியில், கீழே ஒருவரும் மேலே ஒருவருமாக இருந்திருக்கவேண்டும்- கீழே இருப்பவன் "இருக்கிறது!" என்றும், மலையின் மேல் இருப்பவர் "இல்லை!" என்றும் மாறி மாறிக் கூறியிருக்கவேண்டும்.

கடைசியில், "இந்த மான் பொய் மானடா!" என்று கூறிப் பக்கத்திலிருக்கும் கிராமவாசிகளிடம் விஷயத்தைக் கூறி இருக்கவேண்டும். தூரத்திலிருந்து பார்த்தால் "மான்" தெரிவதும், அருகில் சென்றால் மறைந்து போவதும் எப்படி? என்று ஒரு கேள்வி பிறக்கிறதல்லவா? மான் ஓடிப்போகாமலிருக்க, ரஸ்தாவிலிருந்து, நான் 'பைனாக்குலரில்' பார்த்துக்கொண்டிருக்தேன். ஐந்து பேரும் அப்பாறையின் இடுக்கில் ஏறிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். என் மனைவியும். திரு. சீனிவாசனும் மற்றவர்களும் பாறையின் இடுக்கிலே பார்த்தார்கள். எல்லோரும் ஒரே நேரத்தில் பார்த்து, டெலிபோன்போல் பேசிக்கொண்டோம். மேலே நின்றவர்கள் ஐவரும், "மான் தெரியவில்லை" என்றனர்.

ரஸ்தாவில் நின்ற நான் ஒருவனே, "மான் தெரிகிறது!" என்று கூறினேன். பிறகு நான் மேலே சென்றேன். சற்று நேரம் பாறையை உற்று நோக்கினேன்.

"மேல்பகுதியிலிருந்து பாறையின் இடுக்கில் இறங்கினால் என்ன?" என்று என் பக்கத்திலிருந்தவர்களிடம் கேட்டேன். என் மனைவியும், என் மகள் பிரேமாவும் தவிர மற்றவர்கள் எனக்குத் தைரியம் கொடுத்தார்கள்.

"ஒன்றும் பயப்படாதே" என்று என் மனைவியிடம் கூறிவிட்டு நானும் மற்றவர்களும், "ஏக் தம்!" என்று கூவிக்கொண்டு மலைப்பாறையின்மேல் ஒரு கூட்டம் தாவினோம். மலையின் மேல் மிக்க சிரமத்துடன் ஏறி, பாறையின் இடுக்கு முடுக்கான சந்தின் வழியில் என் புளிமூட்டை உடலைத் திணித்தேன். மூச்சு விட முடியாத நிலையில் "தம்" பிடித்துக்கொண்டு பாறையின் சந்தில் இறங்கினேன்,

இரண்டு பாறைகளின் இடுக்கில் என் முதுகை ஒரு பாறையிலும். கால்களை எதிர்ப்பாறையிலும், அழுத்திக்கொண்டு, கொஞ்சங்கொஞ்சமாக உள்ளே நகர்ந்து சென்றேன். எனக்குத் துணையாக வந்தவர்களை என்னுடைய ஒரு கையால் பிடித்துக்கொண்டேன். கீழே பார்த்தால் ஒரே சந்து. "புனல்"போல் போகிறது. மேலே பார்த்தால் பெரிய பாறை ஒன்றுகுடையைப்போல் நின்றுகொண்டிருக்கிறது. பாறைக்கு வெளியிலிருந்து, "வெகு தூரம் போகாதீங்கோ? வாங்கோ! பத்திரம்!" என்று என் மனைவி குரல் கொடுத்துக்கொண்டே இருந்தாள். மற்றொரு பக்கத்திலோ, "அப்பா எங்கேம்மா?" என்று என் மகள் கேட்கிக் கொண்டே இருந்த குரல் என் உள்ளத்தை வேதனைப்படச் செய்தது.

"இங்கேதான் இருக்கிறேன்!" என்று ஒரு குரல் கொடுத்துவிட்டுப் பாறையின் இடுக்கில் நின்றுகொண்டு ஆராய்ச்சி செய்தேன்.

பாறையின் இரண்டு இடங்களில் மழை நீர் ஒழுகியதுபோன்ற குறிகள் தெரிந்தன. அது சுமார் ஆறு அங்குலம் ஒழுகி, பிறகு இரண்டும் ஒன்றாகச்சேருகின்றது. ஏன் அப்படிச் சேருகிறதென்றால், அங்கே "முட்டி"போல் பாறை சற்று எழும்பி இருக்கிறது. அதற்குக் கீழ் மழைநீர் அகலமாகக் கீழே பரவி வடிந்திருக்கிறது. அப்படி மேல்பாறையிலிருந்து ஒழுகிய தண்ணீர், எக்காரணம் பற்றியோ, மேல் பாறையின் துவாரத்தை அடைத்து, தண்ணீர் நின்றிருக்கவேண்டும். ஒழுகிய கறையே, நமக்கு இன்று மானின் நிழலைப்போலவும், முயலின் நிழலைப்போலவும் தோன்றுகிறது. என்ற ஒரு முடிவுக்கு வந்தேன். நான் கூறியதை என்னுடன் பாறையின் இடுக்கில் இறங்கியவர்களும் ஆமோதித்தார்கள். "பாறையின் உள்ளே மலைப்பாம்புகள் ஏதாவது இருந்திருந்தால் என்ன செய்வது?" என்ற எண்ணம் என் உள்ளத்தில் தோன்றியதும்சற்றுஅச்சமுண்டானது.

கடைசியில் என் மகளையும், மற்ற நண்பர்களையும் பொய் மான் கரட்டு மலையின் கீழிருக்கும் குகையினுள்ளே உட்காரவைத்து, பொய் மான் கரட்டின் நினைவாக ஒரு புகைப்படம் எடுத்துக்கொண்டேன்.

பொன் வேய்ந்த பெருமாள்

நெல்லூர்த் தலை* நகரை அடைந்த நாள் முதல் நெஞ்சின் உணர்வுகளெல்லாம் கவலைகளாக மாறி அலை மோதும் நிலைக்கு ஆளானான் விசயகண்ட கோபாலன். அவன்தான் என்ன செய்வான்? மத்தளத்தின் நிலை அவனுடைய நிலை! மத்தளமாவஃது இருபுறத்திலும் இடிபட்டு இனிய ஓசையை எழுப்பி லய ஞானத்தில் மூழ்த்துகிறது! ஆனால் கண்டகோபாலன்? பாவம் அவன்? ஒருபுறம் பனையாளின் இடி! இன்னொருபுறம் பத்மினியின் இடி! ஆமாம்; இடியாகத்தான் போய் விட்டது! என்ன செய்வான்?''
லயமார்ந்த இன்னோசை எழுப்புவதற்கு மாறாகத் துயரார்ந்த துன்பியலோசையை அவன் கேட்டான்! அடுத்துக் காத்துக்கொண்டிருக்கும் பெரும் போரில் என்ன ஓசை கேட்க முடியுமோ என்று இரவும் பகலுமாகச் சிந்தித்து ஜீவனைச் சுருக்கிக் கொண்டிருந்தான்! அவன்தான் தலைநகரை எத்துணை ஆசையுடன் அடைந்தான்!

கண்டகோபாலனுடைய ஆசைகளுக்கு ஒரு பெரிய முற்றுப்புள்ளியை வைத்தவள் பத்மினி. இதனைக் கண்டகோபாலனே அறிவான். அறிந்து என்ன பயன்? யாரிடம் சென்று தன்னுடைய குறைபாடுகளைக் கூறிப் பளுவைக் குறைத்துக்கொள்வான்? அன்பு மனையாள்—பட்டத்தரசி ஸ்ரீதேவி இன்முகத்துடன்தான் வரவேற்றாள். அவள் தன்னுடைய கணவனுடன் ஒரு காரிகையையும் சேர்த்து வரவேற்போம் என்று கனவுகூட கண்டதில்லையே! அப்படி இருக்க திடீரென்று அழகே உருவான பத்மினியைக் கண்டு அதிர்ச்சியடைந்ததில் யாருக்குத்தான் ஆச்சரியமிருக்க முடியும்?

ஒழுக்கமுள்ள எந்த மனைவியும் தன்னுடைய கணவனைப் பிறர் அபகரிக்க இசையமாட்டாள். இது அரச மரபுக்கு ஒவ்வாதுதான்! எனினும் அரசமாதேவி என்பவள் ஒழுக்கமுடையவளாக இருப்பது மரபுக்கு உயர்ந்ததல்லவா? கண்டகோபாலன் என்ன ஏனைய அரசர்களைப்போல் தேவிகள்புடை சூழ பஞ்சணையை நெருங்குபவனல்லவே? அவனுக்கு ஸ்ரீதேவி ஒருத்திதான் பட்டத்தரசி. எனவே தான் ஸ்ரீதேவி பழகிவிட்ட அந்தப் பஞ்சணை வாழ்க்கைக்கு இன்னொருத்தி போட்டியாக முளைத்ததில் வேதனையடைந்தாள்; கணவனை வெறுப்புடன் வரவேற்றாள்.

ஸ்ரீதேவியின் அந்த வெறுப்புடன் கூடிய வேதனை வரவேற்பினை பத்மினி அறியமாட்டாளா என்ன? அவளுக்கு அக்கணமே உள் மனத்தில் 'சுருக்'கென்றது. மாவீர கண்ட கோபாலனுடைய காதலி என்ற மதிப்பு, சோழநாட்டு

---

* 'நெல்லூர் நகரே கிருதாபிஷேக'—கண்டகோபாலன் காஞ்சிச் சாசனம்.

30. கண்டகோபாலன் கவலைக

எல்லையுடன் மறைந்துவிட்ட தன்மையை எண்ணி வருந்தினாள். சோழரும், சோழமாதேவியும் தன்னை எப்படியெல்லாம்மதிப்பாக நடத்தினார்கள்! கண்டகோபாலன் காதலி என்று கேள்விப்பட்ட மாத்திரத்தில் சோனாட்டுச் செடிகொடிகள்கூட தலை வணங்கி புஷ்பாஞ்சலி செய்தனவே! இப்போது நெல்லூரில் சிந்துவாரற்றுப் போகும் நிலைமையா கிடைக்க வேண்டும்! அரண்மனையில் தனக்காக மகிழ்பவர் யாருமே இல்லாமை கண்டு பெரிதாக வருந்தினாள் பத்மினி. ஆனால் தனக்காக மகிழவோ, வருந்தவோ கண்டகோபாலர் இருக்கிறார் என்ற எண்ணம் எழும்போதெல்லாம் ஒரு சமாதானம் கிடைக்கும். குறைந்த அளவு அந்த சமாதானம்கூட அவளுக்கு கிடைக்கவில்லை என்றால் நிலைமைதான் என்னாவது?

அழகான ஒரு மாளிகையில்தான் பத்மினியைத் தங்க வைத்திருந்தான் கண்டகோபாலன். ஆனால் அந்த அழகு மாளிகை அரண்மனைக் கோட்டத்துக்குள் அடங்கியதல்ல. தலைநகருள் மேலண்டைப்புறத்தில்ஓர்ஒதுக்குப்புறமான இடத்தில் கட்டிய அமைதி மாளிகை அது. ஆமாம்; அந்த மாளிகைக்குப் பெயரே அமைதி மாளிகைதான் கண்டகோபாலன் தனக்கென்றே தனிக் கவனம் செலுத்திக்கட்டிய மாளிகை அது. மனம் சஞ்சலப்படும்போது நிறைவு வேண்டி அந்த மாளிகைக்கு வருவான். அவனுடைய மன நிறைவுக்கான எல்லா இன்பங்களும்—இயற்கை இன்பங்களும் — அந்த மாளிகையில் உண்டு, ஒன்றை நீக்கி! அதாவது இயற்கை இன்பத்துத் தலையான இன்பமான பெண்ணழகு. அது இப்போது பூரணமாகக் கிடைத்துவிட்டது. எனவேதான் அந்த மாளிகையில் பத்மினியைத் தங்கச் செய்தான் கண்டகோபாலன். இதனைத் தவறாகப் புரிந்துகொண்டாள் பாவை பத்மினி. பெண்களே தவறுதலாகப் புரிந்து தப்புக் கணக்குப் போட்டுக் கொள்பவர்கள்தாமே?

அரண்மனையைவிட்டு அனாதையாக ஒரு தனி மாளிகையில் தன்னையேன் சிறை வைப்பதுபோல் வைக்கவேண்டும்? பட்டத்தரசிக்கும், அரண்மனை அலுவலாளர்களுக்கும் பயந்துதானே? இப்படிப் பயப்படுபவர் தன்னைஎப்படிக் காலம் முழுவதும் வைத்துக் கைவிடாமல் காப்பார்?

பத்மினியின் சின்னச் சிந்தனை இவ்வாறு சுழன்றிருக்கக் காரணமிருந்தது. அதுதான் பட்டத்தரசி ஸ்ரீதேவியின் வெறுப்புணர்ச்சி! ஆனால் கண்டகோபாலன் கண்ணான இடத்தில் தன்னை வைத்து இன்பப் பார்வையில் நோக்குகிறான் என்பதைப் பேதை பத்மினி புரிந்துகொள்ளாமல் போய்விட்டாள். அந்த அவளுடைய புரிந்துகொள்ளமுடியாத பேதமைப் புத்திதான் கண்டகோபாலனுடைய சரித்திரத்தையே மாற்றிவிட்டது!

ஒருவாரகாலம் வரை கவலைகளால் பீடிக்கப்பெற்ற கண்டகோபாலனுடைய நெஞ்சத்துயரத்துக்கு ஓரளவே இல்லை. ஊமையாவே நடித்துச் சில அரசியல் விவகாரங்களைக் கவனிக்கலானான். மந்திரி மண்டலத்தார் முதல் தானை மண்டலத்தார் வரை மனமறுப்பை மறைமுகமாகத் தென்படச்செய்தனர். கவனித்த கண்டகோபாலன் கண்டும் காணாதவனாய்க் காலத்தை நகர்த்தினான். அவனுடைய

கோவி. மணிசேகரன்

கவனம் மட்டும் எதிர்த்து வந்து கொண்டிருக்கும் போர்முகத்துக்கான ஆயத்தங்களைச் சரிபார்ப்பதில் இம்மியும் தவறவில்லை. அவனுடைய அந்த ஆயத்தத்துக்கான முனைப்புகளிலிருந்து ஏனைய மந்திரி, தானை மண்டலத்தவர்களும் மாறுபட்டு நடந்தார்களில்லை. ‘அரசனின் நடத்தை வேறு; ஆட்சியின் பொறுப்பு வேறு’ என்ற நல்லரசியல் நோக்கில் நடுநாயகமாக நின்று நடப்பனவற்றிக்கு உறு துணையாக நின்றனர். அவர்களின் அந்தத் துணைகொண்டு படைகளை ஒருவாறு செம்மைப் படுத்தி விட்டு ஆசுவாசமாக அமைதி மாளிகை நோக்கிச் செல்ல முயன்றான் கண்டகோபாலன். இப்போது ஏனோ அவனுடைய நெஞ்சம் சற்றே தடுத்து நிறுத்தியது. ‘இது நாள்வரை உன்னுடன் உறவு ண்டுபூ நன்மை, தீமைகளில் பங்கு பெற்ற பட்டத்தரசியின் நெஞ்சத்தைக் குளிர வைப்பாய்’ என்றே அவனுடைய நெஞ்சம் சுட்டிக் காட்டியது. அதன்பேரில் அவனுடைய கால்கள் அந்தப்புரம் நோக்கி அமைதிநடை போட்டன. அப்போது இராப்போதின் முதல் பாகம் தான் கழிந்திருந்தது.



அரசபிரான் வந்திருக்கிறார் என்ற செய்தியறிந்த ஸ்ரீதேவி வழக்கம்போல் வெளிவாயிலில் வந்து நின்று வரவேற்றாள். அந்த அரச வழக்கத்திலிருந்து அவள் எப்போதும் தவறியது கிடையாது. இப்போதும் தவறவில்லை. முகத்தையும் கூடியவரை இன்முகமாகவே கொண்டு வரவேற்றாள். கண்டகோபாலன் மெல்ல அவளுடைய தோற்றத்தையும் நடப்புகளையும் கவனித்த வண்ணம் பின்சென்று அலங்கரிக்கப் பெற்றிருந்த பஞ்சணையில் அமர்ந்தான். அவனுடைய முகத்தில் படர்ந்திருந்த கவலைகளின் ரேகைகளைப் பட்டத்தரசி ஸ்ரீதேவி கவனிக்காமலில்லை. ஒரு கவலையா? இரு கவலையா? எத்தனை எத்தனை கவலைகள்? அடடா! அந்தப் போர்முகத்தைப் பற்றிய கவலைகளைத்தான் இவ்வாறு சொல்ல வேண்டியிருக்கிறது! இதற்கிடையில் இரு முகங்களின் வெறுப்புக் கவலைகள் வேறு படர்ந்து விட்டனவே! ஸ்ரீதேவி, பத்மினி ஆகிய இருவருடைய முகங்களை விடப் போர்முகம் எவ்வளவோ தேவலை போல் தெரிகிறதே!

“ஸ்ரீதேவி! உன்னுடைய முகக் கவலையின் காரணம் ஒரு முடிவில்லாப் பைத்தியத்தின் எடுத்துக்காட்டு!”

கண்டகோபாலன் தன்னுடைய தேவியை நோக்கி அலட்சியமாகச் சொன்னான்.

“பிரபோ! நான் குற்றம் செய்யாதவள்; எனக்குப் பைத்தியம் படிக்கக் காரணமே இல்லை!”

ஸ்ரீதேவி பொறுமையாக மறுமொழி தந்தாள்.

“அப்படியென்றால் நான் செய்த குற்றத்துக்கு நானே பைத்தியக்காரன் என்பதைச் சுட்டிக் காட்டுகிறாயா, தேவி?”— கோபாலன் இதனை எத்தனை அமைதியாகச்சிரித்துக் கொண்டே கேட்டான். ஸ்ரீதேவியும் கணவனுடைய அருமையைப் புரிந்து கொள்ளாமல் சற்று வேகமாகவே மறுமொழி கூறினாள்!

“பிரபோ! தங்களைப் பைத்தியம் என்று கூற எனக்கென்ன பைத்தியமா? தங்களுடன் வந்த அந்தப் பத்மினியாளுக்குத்தான் தங்கள் பேரில் பைத்தியப்! அவள்தான் உண்மையில் குற்றம் புரிந்தவள்!”

“யாரும் குற்றம் புரிந்தவர்கள் அல்லர்; யாரும் பைத்தியமும் அல்லர்.

ஸ்ரீதேவி! எதையும் தீர கேட்டு உணர்ந்து தீர்ப்புக்கூறு! உண்மையில் பத்மினியாகவே என்னை விரும்பித் தொடர்ந்தாள். அதற்குப் பெயர் காதல்; பைத்தியமல்ல!''

"காதலுக்கு இன்னொரு பெயர் பைத்தியம்; அது அநாகரிகமான பெயர். நல்ல காதலர்கள் பழுதில்லாப் பைத்தியக்காரர்கள்!''

ஸ்ரீதேவியின் இந்த விளக்கத்தைக் கேட்டு ஒரு பெருமூச்சுப் பறிந்தது கண்டகோபாலனுக்கு அவன் சொன்னான்''

"அந்தமட்டில் பழுதில்லாத என்ற சொல்லைப் போட்டாயே! தப்பினேன்!''

"ஆனால் உங்கள் காதல் பழுதில்லாதது அல்லவே?''

''என்ன?''

''ஆமாம்; காதல் என்பது இருவர் மனம் சங்கமிப்பது! தங்கள் மனம் சங்கமித்ததா?''

ஒரு கணம் கண்டகோபாலன் விழித்தான்; பிறகு சொன்னான்!'' சங்கமித்தது?''

''மாற்றான் காதலி என்று தெரிந்துமா?'

மறுகணம் கண்ட கோபாலன் விழித்தான்; பிறகு சொன்னான்." இல்லை; மாற்றானுடைய காதலி அல்ல என்று அவள் சொன்னபிறகுதான் காதலித்தேன்!''

"எப்படி நம்பினீர்கள்! அந்த மாற்றானையும் விசாரிக்க வேண்டுமல்லவா? அதுவும் தங்களை நம்பிய நண்பன் போன்ற அந்த மாற்றானுக்குத் துரோகம் செய்வதற்குச் சமமானதல்லவா தாங்கள் செய்திருப்பது?''

"இல்லை; நானாகத் துரோகம் செய்யவில்லை!''

"அவளாகத் தங்களைத் துரோகியாக்கி விட்டாளா?''

கண்டகோபாலனுடைய மூளையே கலக்கம் கண்டது.

"ஸ்ரீதேவி! இந்தக் கேள்வியைப் பற்றி முன்னதாகவே சிந்தித்தாய் விட்டது!''

"ஆனால் முடிவு காணாமல் தள்ளி விட்டீர்கள்! இல்லையா பிரபோ?

"..............''

''பிரபோ! காஞ்சிச் சங்கராச்சாரியாரின் ஆசி பெற்ற தாங்கள் இப்படிச் செய்யக்கூடாது. நான் வெட்கப் படுகிறேன்!''

கண்டகோபாலனுடைய மூளைக்கலக்கம் கோபத்தில் குதித்துவிட்டது. அவனுடைய கண்கள் நெருப்பெனச் சிவந்தன. அடுத்த கணம் 'கோ'வென்றலறிவிட்டான். கடைசியாகச் சூடு பறக்கக் கேட்டான்.

'ஸ்ரீதேவி! நடந்தது நடந்தாய்விட்டது! இப்போது போர் முகத்தில் நான் வெற்றி கண்டு நம் பழம் பூமி சோழ நாட்டைக் காக்கவேண்டும்! இன்முகத்



துடன் என்னை வரவேற்றுத் தென்பும், திண்மையும் அளிப்பாயாக!''

''தென்பும் திண்மையும் தங்களுக்கு என்றென்றும் உண்டு. ஆனால் ஒரு நிபந்தனை! ஏற்பீர்களா?''

''சொல் ஸ்ரீதேவி!''

''இந்தப் போர் ஒரு திருப்பமான போர். ஆகவே, இப்போர் முடிவடையும்வரை அந்தப்பரத்தை பத்மினியுடனைத் தீண்டக்கூடாது. அவள் உண்மையிலேயே தங்களைக் காதலித்துப் பின் தொடர்ந்திருந்தால் பாவமில்லை; போரில் வெற்றி நமக்கே! நானும் அவளை அன்புடன் அணைத்துத் தங்கையாக ஏற்பேனாக! நிபந்தனையைக் காப்பீர்களா?''

"காப்பேன் ஸ்ரீதேவீ, காப்பேன்! வெற்றியைப் பற்றி நான் கவலைப்பட வில்லை. பத்மினியைப்பற்றி மட்டும் நான் ஏன் கவலைப்பட வேண்டும்! உன் நிபந்தனைப்படியே போர் முடியும் வரை பத்மினியைத் தொடமாட் டேன்!"

ஸ்ரீதேவி கண்ட கோபாலனை அன்பு டன் அணைத்து ஆசை தீர முத்தங்களை வழங்கினாள். அப் போது தொலைவில் படுத்துறங்கிக் கொண்டிருந்த அவர்கள் ஆசை மகன் சிறுவன் சித்தி 'அம்மா' என்று வாய் பிதற்றினான். அடுத்துத் தேம்பித்தேம்பி அத்தொடங்கினான். அவன் ஏதோ கனவு கண்டிருக்க வேண்டும்!

★

செவ்வொளி பரப்பிக்கொண்டே கிழக்கு முகத்தில் இளம் ஞாயிறு உதய மாயிற்று. கவலைகளை எல்லாம் ஒரு வாறு மறந்தவனாய் உடல் சோர்வை முறித்துக்கொண்டு எழுந்த கண்ட கோபாலன் காலைக்கடன்களைச் செவ் வனவே முடித்தான். அடுத்து மிக அவசரமகாக் காத்துக் கொண்டிருந்த அரசியல் விவகாரங்களைக் கவனிக்க முனைந்தான். அப்போதைய நிலையில் நெல்லூர் அரசியல் அலுவலாளர்கள் தூக்கமில்லாமல் அரசியலைத் தாலாட் டிக்கொண்டிருந்த நேரம். ஆனால் கண்ட கோபாலன் மட்டும் அன்றிரவு ஆனந்தமாகக் கண்ணயரலானான். அவ னுடைய அந்தக் கவலைகளையெல்லாம் போர்ப்பயணக்கவலைகளை யெல்லாம்

31. ஸ்ரீதேவியும் மூதேவியும்

ஒரு வாறு மறக்கச்செய்து மயக்கமுறச் செய்தாள் பட்டத்தரசியும்—ஆந்திர அழகியுமான ஸ்ரீதேவி. அவளுடைய முரட்டுத்தன்மையான இளமையிலும், முந்திரிப்பழம் போன்ற அழகிலும் முகம் புதைத்துச்சுவைத்த கோபாலனுடைய நெஞ்சம் கவலை மறந்து தூங்கிய இரவு அதுதானே! அவனுக்குத்தோல்வியைப பற்றியகவலை இல்லையானாலும்தோல்வி தூபம்போடும் சில கோழைகளைப்பற்றிய கவலைதான் நெஞ்சை அறுத்தது. அத்துடன் மனையாளின் சீற்றம்! அது அடங்கியது. ஒருநாள் இரவுத் தூக்கம் உல்லாசமாகக் கிடைத்தது. ஆனால் பகற்போதின் தொல்லைகள்?

நல்ல ஜோதிடர்களை முளைத்தார்கள்! எடுத்ததற்கெல்லாம் நாள், கோள், நட்சத்திரம்! நாளும், கோளும் செய்வதை நல்லவர்கள் செய்வது கிடையாதாம்! இந்த நாளும், கோளும் என்னதான் சொல்கின்றனவென்றால்,ஸ்ரீதேவியைப் போலவே, பத்மினியைக் கண்டு இவையும் சீறுகின்றன. ஸ்ரீதேவியைத்தான் சமாதானப் படுத்தியாய்விட்டது. இந்த நாளும் கோளையும் என்ன செய்வது? பத்மினியைச் சிறையெடுத்து வந்தது ஆகாதாம்! இராவணன் சீதையை சிறையெடுத்து வந்தது போலவாம்! ஜோதிடர்கள் சொல்கிறார்கள். சிரிப்புத்தான் வருகிறது. அந்தச் சீதாபிராட்டி எங்கே? இந்தப் பத்மினி எங்கே? ஒத்திட்டுப் பார்க்கத்தான் தகுதி 'இருக்கிறதா? ஒருவேளை ஒரு தகுதி வேண்டுமானால் பத்மினிக்கு இருக்கலாம். அது அவளுடைய அழகு. சோழ நாட்டில் கம்பர் எழுதிய இராமாயணகாவிய சீதாபிராட்டி சற்று மிகையாகவே அழகுடன் தோன்றுகிறாள். ஆனால், பத்மினி மிகையல்லவே! நேரில் கண்டுகளிக்கும் உருவமாகக் காட்சி தருகிறாள். கம்பநாடாழ்வார் வருணனைக்கும் மீறி இருக்கிறாள்! அப்படியான ஒரு மகாப்பேரழகிதான்!

அதற்காக இந்த பத்மினி, இராமநாயகி சீதாபிராட்டியாகிவிட முடியுமா? இல்லை, நான்தான் இராவணன் ஆகிவிட முடியுமா? இராவணன் எத்தனை பண்புமிக்க தமிழரையன்! *அரையர்களுக்கெல்லாம் அரையன் ஆயிற்றே அவன்! இராவணன் வேண்டுமானால் பழிவுணர்ச்சியைத் தீர்த்துக்கொள்ள சீதையைச் சிறையெடுத்திருக்கலாம்! என்னுடைய பழிவுணர்ச்சிக்கும் பத்மினிக்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாதே! முதலில் நான் பத்மினியைச் சிறையெடுத்து வரவில்லையே! பத்மினியாகத்தானே என்னை சிறகடித்துத் தொடர்ந்தாள்! இது இந்த ஜோதிடர்களுக்குத்தான் தெரியவில்லையென்றாலும், எல்லாமறிந்த ஜோதிடத்துக்கும் தெரியாமல் போனதென்ன?

நல்ல ஜோதிடம்! பத்மினியைக் கொண்டுவந்தால் நெல்லூருக்கு ஒருவேளை அழிவு வரலாமாம்! இதற்குச் சான்று இலங்கையாம்! எல்லாம் ஒரே அபத்தம்! இதைக்கேட்டு அரண்மனையே அல்லவோ அரண்டு மருண்டு காணப்படுகிறது.இந்தஜோதிடர்களைப் பிடித்துத் தூக்கில் தொங்கவைத்தால் என்ன? அப்போதாவது இப்படியான ஒரு கிரகக்கிலி நீங்குமல்லவா? சே,சே இப்போதைக்கு அவர்களை ஒன்றும் செய்துவிடக்கூடாது.போர்முடியட்டும் பாண்டியர்கள் தோல்வி கண்ட அதே செங்களத்தில் இந்தப் படுபாவி ஜோதிடர்களைக் கழுவேற்றுகிறேன். ஆமாம்; முன்னொரு சமயம் கூன் பாண்டியன் என்பவன் சமணர்களை மதுரையில் கழுவேற்றினானே, அவ்வாறு இந்தச் சண்டாளர்களையும் கழுவேற்றி விடுகிறேன்! இவர்கள் இல்லையென்றால், பத்மினியைச் 'சிவனே' யென்று நெல்லூர் ஆட்சி ஏற்றிருக்கும். அவளும் மனவருத்தமுடன் நெல்லூரில் தங்க நேரிட்டிருக்காது! இவர்கள் இல்லாததையும் பொல்லாததையும்

*அரையர்—அரசர், ராஜா, ராயர்.

சொல்லப்போக, ஸ்ரீதேவிகள் முதல் மூதேவிகள் வரை பத்மினியாளை வெறுக்கத் தொடங்கிவிட்டார்களே!

பத்மினியின் நினைவில் சுழன்று கொண்டிருந்த கண்டகோபாலனுக்கு உண்மையிலேயேஓர் உணர்வுப் பெருக்கான ஆசை கிளம்பியது. உடனே அமைதி 'மாளிகை' நோக்கிச் செல்ல ஆயத்தமானான். அப்போது நெல்லூர் அமைச்சரும், தளபதியும் அங்கே வரக் கண்டு சற்றே திகைப்பு கண்டான் கண்டகோபாலன். எதற்காக அவர்கள் இந்நேரம் பார்த்து அங்கு வர வேண்டும்?

மந்திரியாரும், தளபதியும் வணங்கினர்.

கண்டகோபாலனும் அவர்களை அமரும்படிக் கைகாட்டினான், பிறகு கேட்டான்:

"ஏதேனும் முக்கிய விசேஷம் உண்டோ மந்திரியாரே?'

"ஆம், பிரபோ! உண்டு. காலையில் தான் சோணாட்டிலிருப்து நமது ஒற்றன் சலபதி வந்தான். அவன் கொண்டு வந்த செய்தி குலை நடுக்கமுடையதாய் இருக்கிறது''

"என்ன? முதலில் செய்தியைக் கூறுங்கள்!'

"அரசே! நமது இராஜேந்திர சோழரைப் பாண்டியன் சிறையடைத்து விட்டான்!''

அவ்வளவுதான்; அடுத்த கணம் கண்டகோபாலன் அலறல் கண்டவனாய் உதடுகள் துடி துடிக்கக் கண்ணீர் விட்டான். அந்தக் கண்ணீர் கரையு முன்பு நெல்லூர் மந்திரியார் நடந்த விவரங்களைக் கூறினார். சஞ்சீவிராயன் இறப்பைப்பற்றி விளக்கினார். கடைசியாகச் சோழ அரசர் அரசியல் விலங்கு பூட்டப் பெற்றவராகிவிட்டார் என்பதுபற்றியும் விளக்கினார். முடிவாக ஒரு லட்சம் படைகள் நெல்லுரை நெருங்கிக்கொண்டிருக்கின்றனஎன்ற செய்தியையும் அறிவித்தார்.

எல்லாவற்றையும் கேட்டு முடித்த கண்டகோபாலன் ஒன்றும் பேச முடியாதவனாய்த் தவிப்பு கண்டான். ஜோதிடர்கள் சொன்னது ஒருவேளை சரியாகத்தான் இருக்குமோ என்ற சபலம்கூட அவனுடைய நெஞ்சை ஒரு கணம் தொட்டுப்பார்த்தது. என்றாலும் அசைக்க இயலவில்லை.

சில, பல கணங்கள் அமைதிக்குப் பிறகு பற்களை மெல்ல 'நறநற'வென்று கடித்துக்கொண்டான் கண்டகோபாலன். அகத்தில் கடல் கொந்தளிப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது சோழர் இராஜேந்திரர் சிறை வைக்கப்பட்டார் என்ற செய்தி கண்டகோபாலனைச் சித்திரவதைக்கு ஆளாக்கிவிட்டது. அடிக்கடி வலக்கரத்தால் தொடையைப் பிசைந்துகொண்டான். அவனுடைய திண்ணியதோள்கள் துடியாய்த் துடித்துக்கொண்டன. இத்தருணம்பார்த்துத் தளபதி வாய் திறந்தான்.

"அரசே! படைக்குத் தலைமை தாங்கும் பொறுப்பைப் பற்றிப் பிறகு சொல்கிறேன் என்று மந்திராலோசனையின்போது சொன்னீர்கள்! இப்போது உத்தரவு கோருகிறேன்!''

தளபதி இவ்வாறு கூறி முடித்ததும் பாண்டியத் தளபதி குமாரகூத்தன் கவனத்துக்கு வந்தான். அடுத்து 'கட கட'வென்று நகைத்தான் கண்டகோபாலன். அந்த நகைப்புக்கான காரணத்தை அவன்தான் அறிவான்! ஆகவே உடனடியாக மறுமொழி பகன்ருன்.

"தளபதி! படைக்கு நானே தலைமை தாங்கப் போகிறேன். நீ எனக்கு உதவியாளனுக அமர்ந்து போரை நடத்துவாயாக!''

கண்டகோபாலன் அதற்கு மேல்

அங்குக் கணமும் தாமதியாமல் நேரே எழுந்து நடையை வேகமாகச் செலுத்திஞன். அரசன் போகும் அந்த நிலையைக் கண்டு மந்திரியும் தளபதியும் ஒருவரையொருவர் உற்று நோக்கித் தோளசைத்துக் கொண்டனர். அது என்ன நடக்குமோ என்பதை எடுத்துக்காட்டியது.

* * *

வேகமாக நடையைக் கட்டிய வேங்கைநிகர் கண்டகோபாலன் நேரே எங்கு செல்வதென்று ஒரு கணம் சிந்தித்தான். எங்கு செல்வது? மன அமைதிக்குச் சற்று மருந்தாக அமைய மாட்டாளா பத்மினி? ஆமாம்; ஸ்ரீதேவியின் வாக்குறுதி நினைவில் இல்லாமல் இல்லை. இருந்தாலும் பத்மினியின் பேரழகே ஒரு தனி மருந்தாயிற்றே! அதனை ரசிப்பதில் என்ன குற்றமிருக்க முடியும்?

பேயறைபட்டதுபோன்றமுகத்துடன் மாளிகையுள் நுழைந்த விசய கண்டகோபாலனை புரியாத மருண்ட நோக்குடன் வரவேற்ருள் பத்மினி. அவளுக்கும் ஒரு விதத்தில் சில தினங்களாகவே இந்நிலைதான். என்ருலும் அதனை வெளியில் காட்டிக்கொள்ளாதவளாய் காதலனுடைய நிலைக்கும் பரிகாரம் தேட முனைந்தாள், என்ன இருந்தாலும் அவள் அவனை இதயத்தோடு நேசித்தாள்— நேசிக்கிருன் அல்லவா?

குளிர்ந்த பானம் தயாரித்துக் கொண்டு வந்த பத்மினியை உற்று நோக்கிஞன் கண்டகோபாலன். இரு முகத்து நான்கு கண்களுள்ளும் இருந்த மருண்டநிலை காவியக் காட்சியாகவே காணப்பட்டது. குளிர்ந்த பானம் கண்ட கோபாலன் நெஞ்சை நனைத்தது. உள்ளத்தை மெல்லக் குளிரச் செய்தது, தேவையில்லாத ஒரு மெல்லிய புன்னகை மிதந்தது.

தன்னை ஒருவாறு சரிபார்த்துக் கொண்டு காதலனுடைய பக்கலில் அமர முயன்ருள் பத்மினி.

"பத்மினி! சற்று தள்ளியே உட்கார்''

"என்ன! கண்டகோபாலரா இவ்வாறு கூறுகிருர்? அதுவும் என்னையா தள்ளியமரச் சொல்கிருர்? என்ன

விந்தையான வேடிக்கை!' —பத்மினியின் நெஞ்சில் 'கடகட'வென்று இவ்வாறான எண்ணங்கள் மிதந்து ஓடின!

"ஏன்? என்ன நடந்துவிட்டது? எதற்காக என்னைத் தள்ளியமரச் சொல்கிறீர்கள்?" — பத்மினி பக்குவமாகவே கேட்டாள். என்றாலும் அவளுடைய மனத்துள் பெரும் கிளர்ச்சிகள் முட்டி மோதித் தலை தூக்கின.

பத்மினியின் இந்தக் கேள்விக்குக் கண்டகோபாலன் என்ன மறுமொழி தருவது என்று ஒருகணம் சிந்தித்தான். என்ன மறுமொழி தருவது? பட்டத்தரசு ஸ்ரீ தேவியின் வாக்குறுதியைக் கூற வேண்டியது தான். ஆனாலும் ஜோதிடத்தின் வாய்த்துடுக்கைக் கூறக் கூடாது. அது பத்மினியின் மனத்தைப் பாழ்படுத்திவிடும்! ஆமாம்; பாழ்படுத்தி விடும்...

கண்டகோபாலன் சிந்தனை இவ்வாறு படர்ந்துகொண்டிருக்கும்போதே பத்மினி குறுக்கிட்டு மேலும் கேட்டாள்:

"பிரபோ! நான் எதைப் பற்றி அதிகமாக மகிழ்ச்சி கொண்டிருந்தேனோ அதைப் பற்றித்தான் தாங்கள் அதிகமாகக் கவலைகொண்டிருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். ஆமாம்; நான்தங்கள் தலைநகரை அடைந்ததும் பெற்ற பிறவிஇன்பத்திலும்பேரின்பம் காண்பேன் என்று எதிர்பார்த்தேன்; ஆனால், பெற்ற கவலையினும் பெரும் கவலையே கொள்ள நேரிட்டிருக்கிறது என்பதை நான் அறியாமலில்லை. என்றாலும் ஒன்றைக் கூறுவேன்: தாங்கள் என் பொருட்டு ஏதேதும் சிரமம் கொள்ள நேரிடுமானால் சொல்லிவிடுங்கள். நான் என் வழியே சென்று எப்படியோ தொலைந்து போகிறேன்! இதைத்தவிர என்னால் இப்போது வேறு என்ன சொல்ல இயலும்?"

பத்மினியின் இந்தப் பேச்சுத் தோரணை அவ்வளவு பிடித்தமில்லாததானாலும், கண்டகோபாலன் மேலும் துடிப்பே கண்டான். அந்தத் துடிப்பு அவனைப் பேசவைத்தது:

"பத்மினி! நீ தவறுதலாக எதையோ புரிந்துகொண்டிருக்கிறாய்; உண்மையில் உன்னை நான் வெறுப்பவன் அல்லன். நான் மட்டும் அல்ல; யாருமே உன்னை வெறுப்பவர்களுமல்லர். சில பல காரணங்களை முன்னிட்டுச் சில, பல குழப்பங்களும், முனகல்களும் ஏற்பட்டிருக்கின்றன. எல்லாம் இந்தப் போரால் வந்த வினை! பட்டத்தரசி ஸ்ரீ தேவி உன்னைப் பரிபூர்ணமாக நேசிக்கிறாள்! இந்தப் போரில் வெற்றி காண்பது உன்னுடைய வருகையைப் பொறுத்திருக்கிறதென்பது அவளுடைய நாடி! உன் வருகையின் மூலம் வெற்றி நெல்லூருக்குக் கிடைத்துவிடுமானால். நீ இரண்டாம் அரசமாதேவியாவாய்...'

அதுவரை......''

'அதுவரை! பிரபோ! தயக்கமில்லாமல் சொல்லுங்கள்...''

''அதுவரை நாம் ஊடலையோ, கூடலையோ உள்ளத்தால் கூட விரும்பக் கூடாது; இது ஸ்ரீ தேவியின் எதிர்பார்ப்பு!''

"அப்படியா''

"ஆம்; பத்மினி!''

"பிரபோ! எனக்கு எல்லாம் இப்போது புரிந்துவிட்டது; நான் வந்ததால்தான் போர் மூண்டதாக பட்டத்தரசியார் எண்ணுகிறாரோ?''

'சே! சே! நீ வராமல்போனாலும் போர் நிச்சயமாக உண்டு என்பதை ஸ்ரீ தேவி நன்றாக அறிவாள்!''

"ஆனால் வெற்றி கிடைப்பது என்னைப் பொறுத்திருக்கிறது; இல்லையா?"

கண்டகோபாலன் தலையசைத்தான். பத்மினி 'கலகல' வென்று சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய் பத்மினி?"

"ஒன்றுமில்லை; நான் வந்தாலும் வராவிட்டாலும் வெற்றியோ தோல்வியோ ஏதோ ஒன்றுண்டு என்பதை உங்கள் பட்டத்தரசியார் ஏன் நிச்சயமாக நம்பக்கூடாது?"

கண்டகோபாலன் விழித்தான். அந்த விழிப்பினூடே சொன்னான்: "பத்மினி! என் மனத்தை மேலும் நோகடிக்கச் செய்ய வேண்டும் என்பது உன்னுடைய ஆசையா?"

"அப்படி ஒருபோதும் நான் எண்ணியது கிடையாது. இப்பவும் சொல்வேன்; பட்டத்தரசியாரையும் நான் குறைகூறவில்லை. அவர்கள் அதிர்ஷ்டத்தையும், நேரம் காலத்தையும் நம்பி என்னை வெறுக்கிறார்கள் என்பதை நான் 'அறிவேன்!' ஆமாம்; பட்டத்தரசியார் எப்படித் தம்மை ஸ்ரீதேவி என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்களோ, அப்படியே மற்றவரை மூதேவி என்றும் எண்ணுகிறார்கள் போலும்! ஆனால் நான் மூதேவியல்ல; ஸ்ரீதேவியாக இல்லாவிட்டாலும் அழகுதேவி! இதனை யாரும் மறுக்க முடியாது; அல்லவா?"

பத்மினி 'கலகல'வென்று கண்ணீர் உகுத்தாள். அவளுடைய அந்தக் கண்ணீர் கண்டகோபாலனை வெகுவாகக் கலங்கவைத்துவிட்டது. அந்தக் கலக்கத்தால் அவன் சொல்லவிருந்த நாகினியின் மரணம் பற்றிய செய்தியை மறந்தேபோனான்!



32. இரண்டில் ஒன்று

மச்சக்கொடி சுமந்த மதுரைவாழ் தமிழ்ப் படைகள் நெல்லூரை பெரும்பாலும் நெருங்கிவிட்டன என்ற செய்தி நாலுதிசைகளிலும் முட்டி மோதி எதிரொலித்துக் கிடுகிடுக்கச் செய்தது. கரி சுமந்த களிறுபோல் மத்தகத் தோள்களைத் தடவிவிட்ட வண்ணம் வந்துகொண்டிருந்தார். மாமன்னர் சுந்தரபாண்டியர். விஜய கண்டகோபாலனுடைய மண்ணை மிதித்ததுமே ஒரு மதங்கொண்ட வெறித்தன்மை பிளிற்றிய உணர்ச்சியொலி பாண்டியருடைய வாயிலிருந்து புறப்படாவிட்டாலும் கையூன்றியிருந்த வாளிலிருந்து புறப்பட்டது. அது வெறிக்குரலாக மட்டுமல்லாமல் வெற்றிக்குரலாகவும் ஒலிப்பதாக உணர்ந்தார் சுந்தரபாண்டியத் தேவர். உள் மனம் மட்டும் அடிக்கடி தில்லையம்பலவனை வேண்டிக்கொண்டது: 'தில்லைப் பொன்னம்பலவா! உனக்குப் பொன்வேய்ந்து பெருமைகொண்டேன் அந்தப்பெருமை இந்த நெல்லூர் வெற்றியின்மூலம் மேலும் பெருகுவதாக! வேண்டுதல் சுயநலமாகவே இருந்தது. இருக்காதா! வழிவழியாகச் சோழர்களுடைய பெருமைகளைத் தாங்கிய தில்லையம்பலம் இப்போது பாண்டியருடைய பெருமையையும் முதன் முறையாகத் தாங்கிகொண்டதே? வெற்றியளிக்கும்படி வேண்டிய வேண்டுதல் சுயநலமாகத்தான் இருந்துவிட்டுப் போகட்டுமே? கண்டகோபாலன் வேண்டவில்லையா? குலதெய்வம் ரங்கநாதரை வேண்டத்தானே செய்தான்? அதுவும் எவ்வாறு வேண்டினான்? வெற்றியளித்தால் பொன் வேய்ந்து பெருமை தேடிக்கொள்வதாக அல்லவோ வேண்டிக்கொண்டான்? இது 'கையூட்டு'ச் சுயநலமாயிற்றே!

தார்வேந்தர் சுந்தரபாண்டியரைப் போலவே தளபதி குமாரகூத்தனும் சிந்தனையின் மெல்லிய ரேகைகளைப் படரவிட்டவண்ணம் போர்ப்பயணம் செய்துகொண்டிருந்தான். அவனுடைய சிந்தனையும் முதலில் போரைப்பற்றியதாகவும், கண்டகோபாலனைப் பற்றியதாகவும் இருந்தது. நெல்லூரைப் நெருங்க நெருங்கத்தான் கண்ட

கோபாலனுடன் இப்போது, சம்பந்தப்பட்டிருந்த, பத்மினியாளைப்பற்றிய சிந்தனை பலமாகப்படரத் தொடங்கியது: 'அவள் உண்மையில் தன்னை வஞ்சித்திருப்பாளா, இல்லை, கண்டகோபாலன்தான் துரோகம் செய்தானு?'

நிரந்தரமாகவே மனத்துள் முகிழ்த்துத் தலைதூக்கிவிட்ட இந்த கேள்விகளுக்கான விடைகளை அறியாமல், வீரம் விழித்துத் தலைதூக்கி வெற்றி காணமுடியாது என்ற நிலைமைக்கு இப்போது வந்துவிட்டான் மாவீரன் குமாரகூத்தன்.

கண்டகோபாலனை எவ்வாறு பழி வாங்குவது என்பதுபற்றிப் பலவாறு சிந்தித்ததன் பயனுகவே இப்படியான ஒரு முடிவுக்கு வரநேர்ந்தது குமாரகூத்தனுல். பத்மினியை மட்டும் அவனுகவே சிறையெடுத்துச் சென்றிருப்பானேயானுல்......

* * *

நெல்லூரின் ஒருகூருக விளங்கிய *முடுகூரைப் பாண்டியப்படைகள் அடையும்போது இரவு நட்ட நடுநிசி. எங்கும் கூடாரங்கள் விரிந்தன. தீப்பந்தங்கள் செவ்விய ஒளியைத் துப்பி இரவைக் கேவலப்படுத்தின. அது கண்டகோபாலன் ஆளும் மண்ணைக் கேவலப்படுத்துவது போலிருந்தது.

அன்றிரவே சுந்தரபாண்டியர் படையின் அணிவகுப்புக்கான எல்லா முறைமைகளையும் தளபதி குமாரகூத்தன் மூலம் அறிவித்துவிட்டார். எல்லாச் சிறு திறத்துத் தளபதிகளும் கட்டளைகளைச் சிரமேல் ஏற்றனர். பாண்டிய மாமன்னருடைய படைமுறைகளைக்கண்ட எல்லாத் தளபதிகளும் வியந்தனர். ஆனுல், குமாரகூத்தன்மட்டும் வியக்கவில்லை. அவன் இந்தத் திட்டத்தை அவ்வளவாக ஆதரிக்கவில்லை. காரணம், கண்டகோபாலனுடைய இருப்பை அறியத்திட்டம் இது. இதன்படிச் செயலாற்றினுல் வெற்றி கிடைப்பது நிச்சயம்தான்! ஆனுல், பாண்டியப்படைகள் அதிகமாகச் சேதமாகும் எனவே காலாட்படைகளின் அணிவகுப்பில் ஒருதிருத்தம்செய்ய எண்ணிஇருந்தான் குமாரகூத்தன். அது நல்ல திருத்தமும்கூட. அதனை அப்போதைக்கு மன்னர்பிரானிடம்கூற அவன் இசையவில்லை. அவனுடைய முழுச்சிந்தனையும்தான் பத்மினியைச்சுற்றி வட்டமிட்டதே! போரின் தீவிரத்தைக் கவனித்து வேண்டுமானுல் தன்னுடைய புதிய திட்டத்தை அறிவிக்கலாம் என்றிருந்துவிட்டான் குமாரகூத்தன்.

ஒருவிதத்தில் குமாரகூத்தனுடைய ஊகம் சரியாகவே இருந்தது. கண்டகோபாலனுடைய படைபலத்து எடையறியாமல் முன்கூட்டி எந்த அணிவகுப்பையும் ஏற்றுவிட முடியாதுதான். காரணம் கண்டகோபாலனுக்கு 'வடதிசை அரசர்கள் பலர் உதவ முன்வந்திருந்தனர். ஆரிய அரசர்களும், தெலுங்கு அரசர்களும் உறுதுணையாகநின்றனர். போதாக்குறைக்கு காகதியப் பேரரசரான கணபதி ராஜனும் பக்கபலமாக நின்ருர் என்ருல் கண்டகோபாலன் பலத்தைபற்றி என்னென்பது? இத்தனையும் பாண்டியர்க்கும் தெரியும். ஆனுல் அவர் அரசதந்திரமுறையில் சில அணிவகுப்புகளைப் பின்பற்றி வெற்றிகாண முயன்ருர்; இது குமாரகூத்தனுக்குப் பிடிக்கவில்லை; அவ்வளவே!

பொழுதுவடிதற்குள் செய்தி கண்டகோபாலனுக்கு எட்டிவிட்டது. ஆகவே உடன் கொஞ்சமும் தாமதியாமல் படைகளைத் திரட்டிக் கொண்டு அண்மையாக இருந்த முடுகூரை நாடி விரைந்தான். அவனுடைய எண்ணம் முடுகூரிலேயே பாண்டியரை முறியடிக்கவேண்டும் என்பதே!

வைகரை வருவதற்கும் படைகள் கலப்பதற்கும் சரியாக இருந்தது. அண்மையிலிருந்த கிராமவாசிகள் அரண்டுமுரண்டுஅகப்பட்டதைச்சுருட்டிக்கொண்டு எட்டிய தொலைவிற்கு ஓட்டம்பிடிக்கலாயினர். எங்கிருந்தோ ஒரு சேவல் மிகத்துணிவாக 'கொக்கரக்கோ வென குரல் கொடுத்தது. அந்தக்குரலைச் செவிமடுக்கக் காத்துக்கொண்டிருப்பவன்போல் கதிரவன் கீழ்த்திசையில் உதயமானுன்.

* * *

அந்த ஒருநாள் போரே 'போதும் போதும்' என்ருய்விட்டது. வளைத்துக் கூட்டி வகுத்த வியூகம் கலையாமல்தான் கண்டகோபாலன் போரிட்டான். என்ருலும் பாண்டியப்படைகளின் சுழிப்பான அந்தவேகம் பலத்த வியூகத்தை பாழ்படுத்திவிட்டது. பாண்டியப் படைத்தளபதி குமாரகூத்தனுடைய படை நடத்தும் முறையை அப்போதுதான் நேரில் கண்டு வியந்தான் கண்ட

* 'தென்னுட்டுப் போர்க்களங்கள்—' அப்பாதுரையார்.

கோபாலன்! ஆகா! எத்தனை வேகம்? என்ன சுறுசுறுப்பு! எவ்வளவு பலம் பொருந்திய வாள்வீச்சு!

பாண்டியத் தளபதி இப்படி முதன் முதலாகக் குதிரைப்படையைச் செலுத்துவான் என்று கண்டகோபாலன் எதிர்பார்க்கவில்லை. வழக்கமாக எல்லாரையும்போல் முன்பு காலாட் படைகளையே செலுத்துவான் என்று தான் யாரும் எதிர்பார்ப்பார்கள்! ஆனால் சில சமயங்களில் படைமுறைகள் மாறுபடுவதுண்டு. நிலைமையைப் பொறுத்தும், ஊகத்தைப் பொறுத்தும் மாறுபடக்கூடியது. அப்படித் தான் பாண்டியப்படை வகுப்பும் மாறிவிட்டது. இதனால் குதிரைப் படைக்குத் தலைமைபூண்டு படை நடத்திய காகதீய மாமன்னன் கணபதி ராஜன் அரண்டு மருண்டு போய்விட்டான். அவனை ஓடஓட விரட்டி அடித்தான் குமாரகூத்தன். அந்த உணர்ச்சி மிகுந்த வீரச்செயலை நேரில்கண்ட விசய கண்டகோபாலன் 'இப்போரில் நாம் விஜயம் காண்போமா?' என்ற ஐயத்தைப் பெரிதாக எழுப்பிக்கொண்டான். என்ன எழுந்து என்னபயன்? விதியெழுப்பி இருந்த கேள்விக்குறியை அக்கணம் வரை யாரும் அறியமாட்டார்களே!

இருபது நாழிப் போதில் அன்றைய போர்க்களம் ஓய்ந்தது. இருதிறத்துப் படைவீரர்களும் நன்கு போரிட்டனர். எனினும் கண்டகோபாலனுடைய வீரர்கள்தாம் அதிகமாக இழப்புக் கண்டனர். அந்திச் சூரியன் மேலைவானைப் போர்க்களமாக்கிக் கொண்டிருந்தான்! ஒரே செந்நிறம்—ரத்தப் பிரவாகம்!

கயலுரு பொறித்த கொடிக்கும், துந்துபிக்கும் எக்காளம் கண்டும், கயல் தளபதி குமாரகூத்தனுடைய நெஞ்சு மட்டும் துக்கக்கோலம் பூண்டு விளங்கியது. கண்டகோபாலனைக் களத்தில் கண்டதுமுதல் அவனுடைய நெஞ்சு மட்டும் பொறுக்கவே இல்லை. அது விம்மி விம்மிப் புடைத்தவண்ணமிருந்தது.

இப்பேர்ப்பட்ட கண்டகோபாலனா துரோக சிந்தைக்கு ஆளானான்? எத்தனை தூய வீரனாக இருக்கிறான்? கடல் போன்ற பாண்டியப் படைக்குத் தலை வணங்கியவர்கள் ஏராளம்! ஆனால் இவன் மட்டும் வீரத்துக்குக் களங்கம் கற்பிக்கமாட்டேன் என்று துணிந்து தொடை தட்டுகிறானே! இன்றைய போரில் பலத்த இழப்பு கண்டும் நாளைய போர்முனைக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறானே! நாளைய போரில் வெற்றி காண்போம் என்ற நம்பிக்கை அவனுக்கிருப்பின் அது வியப்புக்குரியதல்ல! இப்பேர்ப்பட்டவன் ஒரு சாதாரணப் பெண்விஷயத்தில் கடமை தவறி இருப்பானா? இருக்காதென்றால், பத்மினியின்பேரில்தான் குற்றம் சுமத்திச் சிந்திக்க வேண்டியதாயிருக்கிறது! ஆகா! பத்மினி தன்னிடம் நடந்து கொண்ட விதத்திலிருந்து பார்க்கப் போனால், அவள் இப்படி ஓடுகாலியாக நடக்கக் காரணமே இல்லை! பின்?

குற்றம் யாருடையது?

யாருடையது என்பதை விசாரிக்காமல் மனம் நிம்மதியடையாது. அப்படியென்றால் ஒரு வழி தேவை! அது... ஆம்; கண்டகோபாலனையே நேர்முகமாகச் சந்தித்து இரண்டில் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும்! அவன் தூய வீரனானால் என்னுடைய தனிமை வருகையைப் பயன்படுத்திச் சிறைப்படுத்த மாட்டான். இந்தத் தனிமைச் சந்திப்பு வீரத்தைப் பற்றியதாக இல்லாவிட்டாலும் காதலைப்பற்றியதாகவாவது அமையட்டும்! ஆனால் பாண்டிய மன்னர்க்குத் தெரிந்தால்?

எப்படித் தெரியப் போகிறது?

எல்லாவற்றுக்கும் ஒரு வழி வகுத்துக் கொண்டுதான் இன்றிரவு நடுநிசியில் கண்டகோபாலன் துகின்மனை நோக்கிச் செல்லவேண்டும்! அப்படி ஏதேனும் கேட்டால்?

'தில்லையம்பலவா! குமாரகூத்தன் பாண்டிய வரலாற்றுக்குச் செய்த பெரிய துரோகமாய்விடும்! தோல்வியின் மூலம் என்னைத் துரோகியாக்க வேண்டாம் சிவபிரானே! என்னைக் காத்து அருள்பாலிக்க மறந்தாலும் பாண்டிய குலத்தைக் காத்து வெற்றி அளிக்க மறந்துவிட வேண்டாம்!'

குமாரகூத்தன் கண்ணீருடன் கரம் கூப்பி வேண்டிக்கொண்டான். அவனுடைய மனநோய் தீர இதுவே சிறந்த மார்க்கமாகத் தெரிந்தது. 'இன்றிரவு இரண்டில் ஒன்று' தெரிந்தே ஆக வேண்டும்!

முடிவை இறைவனுக்கு விட்டுவிட்ட குமாரகூத்தன் இரு கண்களையும் இறுக மூடி ஒரு பெருமூச்செறிந்தான். தொலை தூரத்திலிருந்து பிணம் பிடுங்கிக் கழுகுகளின் கனத்த குரல் காற்றில் மிதந்து வந்து அவனுடைய காதுகளில் மோதியது. மற்றொரு மூலையில் இரவு வருகிறது என்பதை இரண்டொரு குள்ளநரிகள் ஊளையிட்டு அறிவித்தன.

(தொடரும்)

— வண்ணதாசன் —

கல்யாணி அச்சகம். கம்பாஸிடர் கணபதி தீவிரமாக அச்சுக் கோப்பதில் முனைந்திருந்தார். அவர்தான் அந்தப் பிரஸ்ஸின் கம்பாஸிடர், பிரிண்டர், எடிடர் எல்லாம். முதலாளி மாத்திரம்தான் வேறு ஒருவர். கம்பாஸிடர் கணபதியைச் சுற்றி அவருடைய சிந்தனையைப் போலவே அச்சுக்களும் சிதறுண்டு கிடந்தன. இருண்ட தலையின் இடையே ஒளி வீசும் நரை முடிகள். வயதிற்கு மிஞ்சிய தோற்றம், அருடைய வாழ்க்கையில் வரவுக்கு மிஞ்சிய வறுமையைப் போல.

"என்ன கணவதியா புள்ள. இருட்டீட்டுதேய்யா. வௌக்கு வெக்கிற நேரமாயிருக்கிறதே''

"......'' கணபதியாபிள்ளை கவனிக்கவே இல்லே.

"என்னய்யா! நான் பாத்துக் கொண்டிருக்கிற பொஸ்தகத்தோட டைடில் என்னதுய்யா?"

"ஏழையின் கண்ணீர் சார்''

"ஏழையின் கண்ணீர்! எப்பம்யா முடியும்?''

"அது எப்படி சார் முடியும். ஏழையின் கண்ணீர் அவ்வளவு சீக்கிரத்தில் முடிஞ்சிடுமா? கொஞ்ச நாளிலே புருப் காபி தயார் செஞ்சிருதேன் சார்''

"சரி. சரி. பிரஸ்ஸைப் பூட்டிக் சாவியை வீட்ல கொடுத்திரும். நான் இந்தப் பேப்பர் கடை வரைக்கும் கொஞ்சம் போய்ட்டு வந்திருதேன்''

பிரஸ்ஸில் ஒரு சிமினி லைட்டை ஏற்றி வீட்டுக் கடையைப் பூட்டினார். 'யப்பா... காப்பாத்துப்பா!'' என்று கூறியவாறே நீண்ட சாலையில் இறங்கினார் கம்பாஸிடர் கணபதியாபிள்ளை.

"சுப்பம்மா.. சுப்பம்மா... எங்க போய்த் தொலஞ்சா. பயலக்கூடக் காணுமே...'' இடை இடையே கம்பாஸிடர் கணபதியாபிள்ளையை இருமல் வருத்திற்று.

"மாமி... சினிமாவுக்குப் போயிருக்கு மாமா... மணியும்கூடப் போயிருக்கான்'' இது வீட்டுக்கார ஐயரின் மகளுடையது.

"இந்தாங்க மாமா... சாவி...''

'டொடக்' பூட்டுத் திறந்து கொண்டது. 'கிரீச்'... கதவு உள்பக்கமாக ஓலமிட்டுக் கொண்டு ஓடியது. வீட்டில் அமைதியாகச் சுடர் விட்டு ஒரு குத்து விளக்கு தனியாக ஒளியை உமிழ்ந்து கொண்டிருக்கிறது. அதைப் பார்த்ததும் ஒரு முறை விரக்தியாகச் சிரித்துக் கொண்டார் கணபதியா பிள்ளை. வறுமையின் வடிவத்தையே உருவமாகக் கொண்டு வந்தது போலிருந்தது, அச்சிரிப்பு.

வாசலில் குடியிருந்த மாதர்கள் எல்லோரும் வம்பர் மகாநாடு நடத்திக் கொண்டிருந்தனர். பேச்சு ஒவ்வொரு வீடாக நுழைந்து முடிந்து, கடைசியில் கம்பாஸிடர் வீட்டு முறை வந்தது.



"பாரேன், இந்த வீட்டுக்கு குடி வந்து ரெண்டு வாரங்கூடச் சரியா ஆகலே. அதுக்குள்ளே எத்தனை சினிமாப் பாத்துட்டா அவ...

"அவ மாத்திரமா போனு. அவளோட செல்ல மகன் சீமந்தப் புத்திர பாக்கியத்தையுமில்லா இழுத்துக்கிட்டு அலையரு."

"உடுத்த ஒரு நல்ல ஒரு மொழத் துணி உண்டா? தினம் அவளுக்குச் சினிமா ஒரு கேடாக்கும்'' முகத்தை வெட்டிக் கொண்டது ஒரு உருவம்.

இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டே 'ஹூம்' என்றொரு பெருமூச்சை வெளியிட்டார் கணபதியா பிள்ளை.

நிமிடத் தாய் மணிக் குழந்தைகளைப் பெற்றெடுத்துக் கொண்டே இருந்தாள். சுப்பம்மாவும் அவள் மகனும் வந்தனர். சுப்பம்மாவை ஒரு முறை பார்த்துவிட்டு ஒன்றுமே பேசாமல் சுருண்டு கொண்டார் கணபதியாபிள்ளை.

நாட்கள் பல பறந்தன. மாதம் ஒன்று உருண்டோடி விட்டது ஆனல் சுப்பம்மாள் மட்டும் சினிமாவுக்குச் செல்வதை நிறுத்தவே இல்லை.

* * *

"சேச்சே! அடுத்த வீட்டுக்குக் கணபதியா புள்ள குடி வந்த நாளிலேயிருந்து அவரோட மனைவி இந்த வாசலையே நரகக் காடாக்கிட்டா. அவதான் பொம்பளையா? என்ன? புருசன் கஷ்டப்படறதைப் பார்த்து தானுச் செலவக் கொறச்சுக்க வேண்டாம்? என்ன சென்மமோப்பா இது? சினிமாப் பைத்தியம், தெருவுக்கு நாலு பேரு இவளை மாதிரி இருந்தால் போதும். வேறு வினையே வேண்டாம். அவளாலே இப்ப நம்ம வீடுகளிலேயும் போக ஆரம்பிச்சுட்டாங்க''

'ஆமாம் சார் என் வீட்டிலே என்ன சொல்லுது தெரியுமில்ல...அன்றாடம் காய்ச்சிக் குடிக்கிற அவளே சினிமாக்குப் போருளே. அவளுக்கென்ன வந்துடுத்து...அவளும் நல்லாத்தானே இருக்கா. இருநூறுரூபா சம்பளக்காரர் வீட்டில் நான் போனுக் கொறஞ்சா போயிடும்னு ஒப்பாரி வைக்காளுகய்யா. ஹூம். எல்லாம் நம்ம தலைவிதி சார்'' என்று முடித்தார்.

அப்போது வீட்டுக்குள்ளே சினிமாப் பைத்தியம் சுப்பம்மாவின் குரல் கேட்டது. 'அக்கா, வீட்ல கால்காசு இல்ல. வெளியே போயிட்டு வர்ர ஆம்பிள்ளைக்கு வெறுஞ்சோத்த வெச்சா நல்லா இருக்காதுல்ல. ஒரு நாலணுக்கொடுங்க. பொறவு திருப்பிக் கொடுத்துடறேன்'' என்றாள்.

"பாருங்களேன். இண்ணிலே இருந்து இது வேற ஆரம்பிச்சாச்சு'' என்றவாறு புறப்பட்டனர்.

கல்யாணி அச்சகம் என்ற போர்டைத் தட்டித் துடைத்து விட்டார் முதலாளி.

“சொடக்டி..சொடக்” என்ற பழைய தேய்ந்த செருப்பின் ஒலி கேட்டது. இதுதான் கணபதியா பிள்ளையின் வருகைக்கு அறிகுறி...

“வணக்கமய்யா......” என்றவாறே படியேறினார் கம்பாஸிட்டர் கணபதியாபிள்ளை.

“என்னய்யா நேத்து எங்கே ஆளைக் கண்ணில காண முடியல. வேலைக்கு வரலியே”

“ஆமாம் சார்...உடம்புக்கு இலேசாக் காயலா இருந்தது சார்...அதான்” இழுத்தார் கணபதியாபிள்ளை.

“சரி, சரி...இண்ணிக்காவது வந்து சேர்ந்திரே...போரும்...போரும்... போயி வேலையைக் கவனியும் ...... எல்லாம் அப்படி அப்படியே கெடக்குது”

“முருகா... காப்பாத்துப்பா” என்றவாறே உட்காரப் போனவர் ‘என்னய்யா.. ஏழையின் கண்ணீர் என்னிக்குய்யா முடியும்? முதல்லே அதை முடிக்க ஆரம்பிச்சுடும்”

“ஏழையின் கண்ணீரா...ஆமாம் ஸார்...முடிச்சுடரேன் கூடிய சீக்கிரத்தில்...” என்று திக்கித் திணறிச்சொல்லி முடித்தார். அவரின் அந்த ஏழையின் கண்ணீர் வழிந்து கொண்டேஇருந்தது.முடியவே இல்லை.

“மறுபடியும் சுப்பம்மாள் வந்தாள். அம்மா...அவருக்கு பிரஸ்ஸிலே பணம் கொடுக்கலே...மாசா மாசம் செலவுக்கு இல்லைன்னு கேட்டா ஏதாவது அஞ்சு பத்து அட்வான்சாக் கொடுப்பாங்க. இந்தத் தடவை பணமில்லைன்னுட்டாராம்...ஒரு பத்து ரூபா இருந்தாக் கைமாத்தாக் கொடுங்க. அவரு சம்பளம் வாங்கினதும் முதல் ஜோலியா ஒங்ககிட்டப் பணத்தைத் திருப்பி ஒப்பிச்சிருதேன்”

“இப்ப எங்ககிட்ட ஏது பணம்”

“தயவுசெய்து கொடுங்கம்மா. எந்நேரமுமா ஒங்கக்கிட்டக் கேட்கிறேன். இந்த ஒரு தடவைதானே”

“சனியன், நம்மளை வந்து பிடுச்சுக்கிட்டு விடமாட்டேங்கிறாளே,” என்றவாறே ஐந்து ரூபாய் கொடுத்தாள் வீட்டுக்கார அம்மாள்.

“கடவுள் காப்பாத்திருரு! ரூவா கெடச்சுட்டுது...” என்று சந்தோஷத்துடன் சென்றாள் சுப்பம்மாள்.

மாலை வந்தது. சுப்பம்மாள் அவசரம் அவசரமாகச் சேலை மாத்திக்கொண்டிருந்தாள்.

“எங்க சுப்பம்மா, புறப்பட்டாச்சு?”

“புதுப் படம் ஒண்ணு வந்திருக்கு அக்கா. வீட்டிலே இருக்க ரொம்ப மனசுக் கஷ்டமா இருக்கு. சினிமாவுக்காவது போயி கொஞ்ச நேரம் நிம்மதியா இருக்கலாம்” என்றாள் சுப்பம்மா! சுப்பம்மாவும் அவள் மகனும் புறப்பட்டனர்.

“பாரேண்டியம்மா. இன்னிக்கு முழுவதும் ஒரு பருக்கைக் கூட வாயில போடல. எங்கிட்ட அஞ்சு ரூவா கடன் வாங்கி சினிமாவுக்குப் போறா” என்று பெருமூச்சு விட்டுக் கூறினாள் வீட்டுக்கார அம்மாள்.

சும்பம்மாளும் பையனும் மறைந்தே விட்டனர்.

இரவு வந்தது. சுப்பம்மாள் மகனுடன் வந்துவிட்டாள். ஆனால் கணபதியா பிள்ளை இன்னும் பிரஸ்ஸிலிருந்து வரவில்லை. நிலா முற்றத்தில் எல்லோரும் பேசிக்கொண்டிருந்தனர். நாளைக்குக் கணபதியா பிள்ளையிடம் சொல்லி அவர் மனைவி சுப்பும்மாளைக் கண்டிக்கும்படி சொல்ல வேண்டுமெனத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

* * *

காலை வந்தது. விடிந்ததும் விடியாததுமாக எல்லோரும் கணபதியா பிள்ளையை அழைத்து விஷயத்தைக் கூறினர். எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டுக்கொண்டே இருந்தார். கண்களிலிருந்து கண்ணீர் சுருங்கிய கன்னத்தின் வழியாக ஓடிக் கீழே விழுந்துக்கொண்டிருந்தது, விரக்தியாகச் சிரித்தார்.

"வீட்டுக்கார ஸார் எங்க கதையைக் கொஞ்சம் கேளுங்கள். எம் மனைவி சுப்பம்மா ஒரு சினிமாப் பைத்தியம் என்பதை நான் ஒத்துக்கறேன். ஆனா அவ ஒரு சினிமாக்கூட பார்த்த தில்லை. ஓங்ககிட்டே யெல் லாம் சினிமாவுக்குப் போகி றேன் என்று சொல்லிட்டுப் போறதெல்லாம் கதர் வஸ் திராலயத்திற்குத்தான். ஆச்சரியப்படுவீங்க நீங்க.

அங்கே போயிக் கொட்டைப் பஞ்சு வாங்கி நூல் நூத்து சிட்டம் போட்டு வித்துட்டு சினிமா விடுகிற நேரத்திலே வீட்டுக்கு வந்திடுவா. வீட்ல பட்டினி யா இருந்துட்டு சாயங்காலம் சினிமாப் பார்க்கப் போறுளேன்னு நெனச்சிருப் பீங்க. ஓங்க கிட்டக் காசு வாங்கிட்டுப் போயி நூல் நூற்றுளே தவிர சினிமா விற்குப்போகவே மாட்டா. நான் எத்தி னியோ தடவை காசு கொடுத்து அவளை சினிமாவுக்கு அனுப்பியிருக்கேன் ஆனால் அவள் நூத்திட்டுதான் வரு வாள்" என்று எதையோ தன் தலையி லே இருந்து இறக்கி விட் டது போன்று பெருமூச்சு டன் கூறிவிட்டு பிரஸ்ஸை நோக்கி நடந்தார்.

'என்ன கணவதியா புள்ள 'ஏழையின் கண்ணீர்' வேலை முடிஞ்சிடுத்தா?

"ஆமா ஸார். ஏழையின் கண்ணீர் தீர்ந்திடுத்து"

"கணவதியா புள்ள...... ஓங்க கண்ணீரும் இனிமே தீர்ந்திடும். ஓங்களை நியூஸ் பேப்பர் பிரஸ் ஒண்ணுக்கு கம்பாஸிடர் வேலைக்குச் சிபார்சு செஞ் சிருக்கேன் நல்ல சம்பளம் தருவாங்க. அடுத்த மாசம் வேலையை ஒப்புக் கொள்ள வேண்டியதுதான் பாக்கி. அதுக்குள்ள நீங்க 'புது வாழ்வு' என்ற புக்கை மாத்திரம் முடிச்சுக் கொடுத்தி ரணும்" என்ருர் முதலாளி.

"சரிகட்டும் சார்... புது வாழ்வை இன்றைக்கே தொடங்கிடுதேன்" என் றவாறே ஸ்கிரிப்ட் பேப்பரைத் தூக் கிக்கொண்டு கம்போஸ் செய்வதற் காக நுழைந்தார் கம்பாஸிட்டர் கண பதியாபிள்ளை.



பகல் பனிரெண்டாவது மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. கடியாரம் வெய்யிலில் நின்று நிதானமாகப் 'பளீர்' என அடித்துக்கொண்டிருந்தது. வெளியே அதிக ஜன நடமாட்டம் இல்லை. தூரத்தில் ஐஸ்கிரீம், சாத்துக்குடிப்பழம் விற்பனைக் குரல்மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது.

ஜெயா துப்பறியும் நவீனத்தை விறுவிறுப்போடு படித்துக் கொண்டிருந்தாள். கையிலெடுத்து சற்று நேரமே ஆகி இருந்தது என்றாலும் 'கிடுகிடு' என்று பாதிவரையில் படித்துவிட்டாள். நல்ல விறுவிறுப்பான கதை. சுவாரஸ்ய கட்டம். மேலே என்ன ஆகுமோ; என்ன ஆகுமோ என்ற ஆவல் அடித்துக் கொள்ள பார்வை வழுக்கிவழுக்கி ஓட வார்த்தைகள் மறைந்தன.

“ஜெயா...ஜெயா”

அடடா! நல்ல இடம். கதாநாயகி நள்ளிரவில் தந்தை யறியாவண்ணம் கதாநாயகனைச் சந்திக்கச் செல்கிறாள். எதிரே ஒரு முகமூடி உருவம் வருகிறது. அது யார்? கதாநாயகனா? அவள் தந்தையேவா? அல்லது வில்லனா?

“ஜெயா...ஏ...ஜெயம்”

“சட்! என்ன அம்மா இது! நல்ல சுவாரஸ்யமான சமயத்தில் போய்க் கூப்பிடுகிறாளே!”

ஜெயா புத்தகத்தை நிராசையோடு மூடி ஒரு சின்ன தாளை அடையாளமாகச் செருகினாள். கைகளை உயரத் தூக்கி உடலை ஒயிலாக வளைத்துச் சோம்பல் முறித்தாள்.

‘என்னம்மா?”

“மணி பன்னிரெண்டாகிறதே! அடைக்கு அரைத்துத் தட்ட வேண்டாமா? நீ போய் கல்லுரலில் அரிசியைக் களைந்துபோடு. நான் தேங்காயைத் துருவிவிட்டு வருகிறேன்”

ஜெயத்துக்கு அலுப்பாக இருந்தது. இருக்காதா பின்னே? காலையில் எழுந்து காபி போடுவதிலிருந்து அவளுக்குச் சரியான வேலை. இப்போதுதான் போய் ஓய்வாக உட்கார்ந்தாள். அதற்குள் அம்மா கூப்பிட்டு விட்டாளே! அதுவும் எந்தச் சமயத்தில்? பொங்கி வரும் ஆவலோடு புத்தகத்தில் அமிழ்ந்திருக்கும்போது,

மனத்துக்குள்ளேயே சலித்தவளாய் ஜெயா அரிசியையும், பருப்பையும் எடுத்துக்கொண்டு குழாயடிக்குச் சென்றாள். அவைகளைச் சுத்தம் செய்து கொண்டு அவள் அரைக்க வருவதற்குள் அம்மாவும், அவளுக்கு உதவ வந்துவிட்டாள்.

ஜெயா அமைதியாக தன் பணியில் ஈடுபட்டிருந்தாள். அம்மாவும் அவள் எண்ணத்தை அறிந்தவள்போல் அவளிடம் ஏதும் பேசவில்லை.

ஆனால் அம்மாவின் உள்ளத்தின் மூலையில் மட்டும் ஒரு அரிப்பு. பாவம்! மூன்று வருடங்களாக வீட்டிலேயே உட்கார்ந்திருக்கும் பெண்ணுக்கு இன்னும் ஒரு வழி பிறக்கவில்லையே' அவள் அப்பா மட்டும் என்ன செய்வார்? அவள் ஜாதகத்தில் செவ்வாய் தோஷம் நிறைந்திருந்தது. நல்ல வரனுக்காக அவரும் தேடித் தேடித்தான் அலைந்துகொண்டிருக்கிறாரே!

அலுவல்கள் முடிந்ததும், முகம் கழுவிப் பொட்டிட்டுக் கொண்டு வாசலுக்கு வந்தாள் ஜெயா. அப்போது பக்கத்து வீட்டு ரஜனி காலேஜிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தாள். நைலான் புடவை காற்றில் படபடக்க அவள் ஒய்யாரமாகச் சைக்கிளில் வந்து இறங்கிய நேர்த்தியும், ஜெயாவை நோக்கி உலகையே அடிமைகொண்டுவிட்ட மந்தகாசத்துடன் வீசிய புன்னகையும் அவளை என்னவோ செய்தன.

ரஜனியும், ஜெயாவும் ஒன்ருகத் தான் படித்துத் தேறிஞர்கள். ஒரே பெண்ணுக இருப்பவர்கள் தான். ஆனுல் ரஜனி அதிர்ஷ்டசாலி! அவள் அப்பா ,கல்யாண மார்க்கெட்'டில் நல்ல மவுசு ஏற்படுவதற்காக காலேஜில் படிக்க அனுமதித்துள்ளார். ஆனுல் ஜெயா வின் நிலைமை அப்படியா? அப்பாவுக் கும், அம்மாவுக்கும் ஒரேயடியாக அவள் கல்லூரிக்குச் செல்வது பிடிக்க வில்லை. இத்தனைக்கும் ஜெயாவைவிட ரஜனி மட்டமான மதிப்பெண்கள் தான் வாங்கி இருந்தாள். எப்படி யாஞல் என்ன? ரஜனி கொடுத்து

வைத்தவள்.

"ஜெயா சாமிக்கு விளக்கேற்று"

அம்மா தான் கூப்பிட்டாள். ஜெயா தன் சிந்தனைகளை ஒதுக்கிவிட்டு, கடவுளுக்கெதிரே குத்து விளக்கை ஏற்றிஞள். அந்தத் தூயசுடரொளியின் லயிப்பிலே ஒரு விஞடி தன்னை மறந்து நின்ருள். அவள் வாய் 'சியாமளா தண்டகத்தை' அமைதியாகவும், அழகாகவும் முணுமுணுத்தது. நிலத்தில் நெற்றி தோய அவள் வணங்கி எழுந்த போது அப்பா வந்துவிட்டார்.

ஊஞ்சலில் அப்பா உட்கார்ந்ததும் அம்மா காபியைக் கொண்டு அவரருகில் வைத்தாள். அவர் "கடிதம் ஏதாவது இருக்கிறதா?" என்று கேட்டுக் கொண்டே காபியைக் குடித்தார். ஜெயா அன்று வந்த கடிதங்களைக் கொண்டு வந்துக் கொடுத்தாள். இது தினமும் நடக்கும் விவகாரம் தான்.

அப்பா ஒவ்வொரு கடிதமாகப் படித்துக் கொண்டே வந்தார். ஒரு கடிதம் அவரது சோர்வும், சிந்தனையும் கவிந்த முகத்தைச் சற்றே மலரச் செய்தது

"என்ன?" என்று கேட்டாள் அம்மா.

ஜெயா மௌனமாக அம்மாவையும், அப்பாவையும் மாறிமாறிப்பார்த்தாள். என்னவாக இருக்கும் என்று அவளால் ஊகிக்க முடியவில்லை.

"மதுரைக்காரர் தான் எழுதி இருக்கா. ஜாதகம் பொருந்தியிருக்காம். வர வெள்ளிக் கிழமை பெண் பார்க்க வராளாம்" என்ருர் அப்பா, அம்மாவுக்கு மகிழ்ச்சி முகம் நிறைந்து குலுங்க, சாமி படத்தைப் பார்த்து கைகளைக் கூட்பி வணங்கிஞள், "எல்லாம் அம்பாள் கிருபை வெள்ளிக்கிழமையும் அதுவுமா நல்ல கடுதாசு வந்திருக்கு அவாளும் வெள்ளிக்கிழமை வரா. எல்லாம் நல்லபடியா நடக்கணும் தாயே" என்று மனமுருக வேண்டிக் கொண்டாள்

* * *

"மாமி மாமி" என்று அழைத்தவாறே வந்தாள் ரஜனி. அவளது அற்புத அலங்காரங்களை வியந்து நோக்கிய ஜெயாவின் தாய், "வாம்மா ரஜனி" என்று வரவேற்ருள்.

"மாமி. நான் இன்னைக்கு சினிமாவுக்குப் போகப் போறேன். ஜெயாவையும் அனுப்புங்களேன்" என்று குழைவோடு கேட்டாள்.

அப்போதுதான் அங்கு வந்த ஜெயா ரஜனியின் வேண்டுகோளைக் கேட்டாள். அம்மா என்ன பதில் சொல்லப் போகிருள்?

"சினிமாவுக்கா?" அம்மா.

"ஆமாம் மாமி"

"ஜெயத்துக்கு வேலை இருக்கேம்மா. வீட்டில் ஒரு மணி காபிக்கொட்டை கூட இல்லை. வறுக்கணுமே?"

ஜெயத்துக்கு தொண்டையை அடைத்தது. என்ன அம்மா இவள்? எப்பப் பார்த்தாலும் வேலை; வேலை;

வேலைதானு? ஒரு நாள் உல்லாசமாக உடன் ஒத்த தோழியுடன் வெளியே செல்ல அனுமதிக்க மறுக்கிறுளே. ரஜனிக்கும் என்னவோ மாதிரி ஆகி விட்டது?

'ஏன் மாமி? எப்போது பார்த்தாலும் வேலை வேலை என்று ஜெயாவின் உயிரை வாங்குகிறீர்கள்?'' என்ருள் ஆத்திரமாக. அம்மா அதைக் கேட்டு கோபிக்கவில்லை. மாருக ஒரு மெல்லிய அழுத்தமான புன்னகை அவள் வதனத்தில் நிழலாடியது.

''வேலை செய்தால் உயிர் போய் விடுமா அம்மா''

ரஜனி போய் விட்டாள்.

காபிக் கொட்டையின் புகைச்சலும், சீறலும், வெடிப்புக்கும் இடையே ஜெயத்தின் மனமும் புகைந்தது, குமைத்தது; சீறியது. 'அம்மா ஏன் இப்படி இருக்கிருள்?'' அவளுடைய மெல்லிய உணர்வுகளுக்கு ஏன் முக்யத்வம் தர மறுக்கிருள். காலமெல்லாம் வேலை செய்ய வாய்த்தது தானே பெண் ஜன்மம்? பெற்ற தாயே இப்படி இரக்கமற்று இருந்தால், புகுந்த இடம் எப்படி அமையுமோ?

* * *

''ஏன்னு. ஜெயத்தை அழைத்துக் கொண்டு திருவல்லிக்கேணியில் என் சிநேகிதி வீட்டுக்குப் போய் வருகிறேன். வரவில்லை வரவில்லை என்று குறைபட்டுக் கொள்கிருள், இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை. நீங்களும் வீட்டில் இருக்கிறீர்கள். சாயங்காலமாக வந்து விடுகிறேன்'' என்று சொல்லிவிட்டு ஜெயாவோடு கிளம்பினுள்.

ஜெயாவுக்கு வெறுப்பாக இருந்தது. 'அம்மாவோட சிநேகிதி வீட்டில் எனக்கென்ன வேலை. அம்மாவும், அவளும் பேசிக் கொண்டிருக்கும்போது நான் வெறுமே வாயைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்' என்று எண்ணி வெதும்பினுள்.

அம்மா பஸ் நிலையத்தை நோக்கிப் போகாமல் வேறு திசையில் சென்றது. அவளுக்கு வியப்பாக இருந்தது. அதுவும் ஒரு சினிமாத் தியேட்டரை அடைந்தும் அவள் வியப்பு பன்மடங்காகியது.

''அம்மா!'' என்று ஆச்சரியத்தோடு ஏதோ கேட்க எண்ணினுள். அதற்குள் அம்மா இரண்டு ஒரு ரூபாய்த் தாள்களை அவளிடம் நீட்டி, ''போய் இரண்டு டிக்கட் வாங்கிவா'' என்ருள்.

ஜெயத்தின் மருட்சி மாறவில்லை, ''என்னம்மா இது'' என்ருள் தடுமாற்றத்துடன்.

''வாங்கி வா சொல்கிறேன்'' ஜெயா போய் இரண்டு டிக்கட் வாங்கி வந்தாள். உள்ளே சௌகர்யமான இடமாகப் பார்த்து இருவரும் அமர்ந்து

கொண்டனர். ஜெயா அம்மாவையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்ன ஜெயா! அப்படிப் பார்க்கிருய்? உங்கப்பாவுக்கோ சினிமா என்ருலே பிடிக்காது. அதுக்காகத்தான் சிநேகிதி வீடுன்னு பொய் சொன்னேன். நேத்திக்கே உனக்கு ரஜனியோடே போகல்லியேன்னு மனக்குறை. நாளைக்கே உன்னைப் பெண் பார்க்க வரப்போரு. சின்னஞ்சிறுசுகளான உங்க ரெண்டு பேரையும் எப்படி தனியா அனுப்ப முடியும்? அப்படி

அனுப்பிச்சுட்டு நிம்மதியா இருக்க முடியுமா?'' அம்மா கூறி முடித்தாள்.

அம்மாவின் தெளிந்த உள்ளமும், ஆழமான அன்பும் ஜெயத்தை மெய் சிலிர்க்க வைத்தன.

* * *

ஜெயத்தின் கல்யாணம் 'ஜாம் ஜாம்' மென்று சிறப்பாக நடந்து முடிந்தது. அவள் பெற்றோர்கள் தங்கள் செல்வ மகளுக்கு எந்தவித குறையுமின்றி அமோகமாக நடத்தினர்.

ஜெயத்தைதங்களுடனேயே அழைத்துப் போவதாக மாப்பிள்ளை வீட்டார் கூறிவிட்டனர். பிரயாண ஏற்பாடுகள் எல்லாம் முடிந்துவிட்டன. ஜெயம் பெற்றோரை வணங்கி விடைபெற்றாள்.

"தீர்க்க சுமங்கலியா இரம்மா'' என்று பாசம் பெருக்கோட உள்ள நெகிழ்வுடன் வாழ்த்தினார் தந்தை.

"ஜெயம். உன் புக்ககம் பெரிய குடும்பம். நிறைய மனிதர்கள் இருக்கிறார்கள். நீயோ மூத்த நாட்டுப்பெண். வேலைகள் நிரம்ப இருக்கும், சோம்பலோ, சிடுசிடுப்போ இல்லாமல் அவைகளை கவனித்து நல்ல பெயர் எடுக்கவேண்டும். கணவன், மாமனார், மாமியார் எல்லாரிடமும் மரியாதையாக நடந்து நல்ல பெயர் எடுக்க வேண்டும். நீ சமர்த்துப்பெண் உனக்கு நான் அதிகம்சொல்ல வேண்டியதில்லை'' என்று உணர்ச்சி பொங்கக் கூறினாள். அவள் நெற்றியில் விபூதியும், குங்குமமும் இட்டாள்.

ஜெயத்திற்கு தொண்டையை அடைத்தது. இத்தனை நாட்களாக வாழ்ந்து வீடு, அம்மா, அப்பா எல்லாரையும் விட்டுப்பிரிந்து எப்படிச் செல்வது? அவள் பளிங்குக் கன்னத்தில் வழிந்த நீரை அம்மா புடவைத் தலைப்பால் துடைத்தாள்.

வண்டியில் புதுக்கணவருடன் அமர்ந்து பிரயாணம் செய்கையில் ஏதோ நூதன இன்பம், புதிய மன நிம்மதி இருப்பதுபோல் பட்டது அவளுக்கு. அதே இன்பம் வாழ்நாள் பூராவும் அமையவேண்டும் என்று அவள் இறைவனை பிரார்த்தித்துக் கொண்டாள்.

"ஜெயம் வாசலில் காய்கறிக்காரி வந்திருக்காள். பார்த்து வாங்கு" இது மாமியார்.

"ஜெயா வண்ணான் என் வெள்ளைச் சட்டையைக்கொண்டு வரவில்லையா?" இது கணவன்.

'மன்னி ப்ளீஸ் ரெண்டு டம்ளர் காபி! என் சிநேகிதி வந்திருக்கா" இது நாத்தனார்.

"ஜெயா மன்னி தலை பின்னி விடுங்கோ" இது குட்டி நாத்தனார்.

"மன்னி சமையலாச்சா! மணி எய்ட் பார்டி" இது மைத்துனன்.

ஜெயா சிரித்த முகத்துடன் எல்லாப் பணிகளுக்கும் ஈடுகொடுத்தாள். மலர்ந்த முகத்துடன் சோர்வின்றி தன் தோளில் ஏற்றப்பட்டச் சுமையைச் சுமந்தாள்.

அம்மா வீட்டில் இருக்கும் போசாவது எப்போதாவது வேலைசெய்ய அவளுக்கு அலுப்போ, சலிப்போ ஏற்படும். இங்கேயோ வேலை செய்வது அவளுக்குக் கஷ்டமாக இல்லை.

"இன்றைக்குச் சினிமாவுக்கு போகலாமா ஜெயா?" என்று கேட்டான் ஜகதீசன்—அவள் கணவன்.

"இன்றைக்கா" என்று இழுத்தவாறே கேட்டாள் ஜெயா.

"இன்றைச்கென்ன"

"இல்லை காப்பிக்கொட்டை தீர்ந்துவிட்டது வறுக்கணும். தவிர நாளைக்கு அமாவாசையல்லவா? இட்லிக்கு அரைக்கணும்" என்று மெதுவாகக் கூறினாள் ஜெயா, எங்கே தான் கூப்பிட்டதற்கு வரவில்லை என்று அவன் கோபித்துக்குக்கொள்ளப்போகிறானோ என்று உள்ளூரப் பயந்தாள்.

ஆனால் ஜகதீசன் முகம் மாறாமல், "அப்படியானால் அடுத்த வாரம் போய்க்கொள்ளலாம்" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

ஜெயம் காபிக் கொட்டையை வறுத்துக் கொண்டிருந்தாள். அன்றைய நிகழ்ச்சி அவளுக்கே சிரிப்பை வரவழைத்தது. பழைய சம்பவத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தது. அவள்தான் எவ்வளவு மாறிவிட்டாள்! அவள் மனம் எவ்வளவு பக்குவப்பட்டுவிட்டது.

கூடத்தில் அவள் மாமியாரோடு யாரோ பேசிக் கொண்டிருக்கும் பேச்சு அவள் காதில் விழுந்தது. "நீங்கள் கொடுத்து வைத்தவர்கள் மாமி! தங்கம் மாதிரி மாட்டுப் பெண் வாய்த்திருக்கிறாள்" என்றாள் வந்தவள். "எங்கள் ஜெயம் கெட்டிக்காரி. காரியக்கப்பல் பட்டிணத்துப் பெண்ணாயிற்றே அதுவும் ஒற்றைப் பெண் செல்லப்



"ஏண்டா! சினிமாவுக்குப் போகக் கூடாதுன்னு சொல்லியிருக்கும்போது சினிமாவுக்குத்தானே போயிட்டு வர்றே?"

"இல்லேப்பா! சினிமாவுக்குப் போகாதேன்னு நீ சொல்லியிருக்கும் போது நான் போவேனா! இப்ப நான் நாடகத்துக்குன்னு போயிட்டு வரேன்!"

பெண்ணாயிற்றே என்று முதலில் எண்ணினேன். என் எண்ணத்தையே மாற்றி விட்டாள் எங்கள் ஜெயம்"

மாமியாரின் இந்தப் புகழ்மொழிகள் ஜெயாவைப்புளகாங்கிதமடையச் செய்தன. இத்தனைப் பெருமையும் யாருக்கு உரியது? அம்மாவுக்கன்றோ? அம்மா மட்டும் அவளை ஒரே பெண் என்று செல்லம் கொடுத்திருந்தால்? அம்மா தான் எவ்வளவு அநுபவசாலி. தீர்க்க தரிசி! எத்தனை அழகாகத்தன் பெண்ணை வேலைகளுக்குப் பக்குவப்படுத்தினாள்.'

ஜெயத்தின் நெஞ்சத்தில அம்மாவைப் பற்றிய நினைவுகள் பொங்கிப் பொங்கி மலர்ந்தன. அம்மாவைக் காண வேண்டும் என்ற எண்ணமும் அடிக்கடி எழும்.

அந்த எண்ணம் நிறைவேறும் நாளும் நெருங்கி விட்டது. ஜெயத்துக்கு ஐந்தாவது மாதம். வளைகாப்புக்கு அழைத்துச் செல்ல அவள் தந்தை வந்துவிட்டார். ஜெயம் எல்லாரிடமும் விடை பெற்றுக்கொண்டாள். "உடம்பை கவனிச்சுக் கோடியம்மா. நீ இல்லாமல் வீடு வெறிச்சுனு போயிடும்" என்று பரிவோடு கூறி அவள் தலையில் வேப்பிலையைச் செருகினாள் மாமியார். குட்டி நாத்தனார் அடம் பிடிக்க, பெரிய நாத்தனார் கண்கலங்க, அன்பு மைத்துனன் பிரியா விடைகூற, காதல் கணவன் தாபத்துடன் நோக்க, ஏங்கும் பார்வையுடனும், அன்புச் சுமை நிறைந்த உள்ளத்துடனும் வண்டியில் ஏறி அமர்ந்து கொண்டாள் ஜெயா. முடியவில்லையே!

"அம்மா" என்று அன்பு பொங்க அழைத்தவாறே வந்த மகளை ஆதரவுடன் அழைத்துச் சென்றாள் அம்மா.

மகள் கணவன் வீட்டில் மன நிறைவோடு வாழ்கிறாள் என்ற எண்ணமே தாய்க்கு பூரணமகிழ்ச்சியை அளித்தது. 'ஏன் ஜெயா! அவ்வளவு பெரிய குடும்பத்தில் எல்லாக் காரியத்தையும் நீயேவா செய்கிறாய்?" தாய்மைக்கு உரிய கவலை அவள் குரலில் ஒலித்தது.

"அதனால் எனக்கு எந்தவித சிரமமும் இல்லையம்மா" என்றாள் ஜெயா பிறகு ஏதோ நினைவுக்கு வந்தவளாய், 'ஏனம்மா ரஜனிக்குக் கல்யாணமாகி விட்டதா?" என்றாள்.

அம்மா நீண்ட பெருமூச்செறிந்தாள்.

"அதையேன் கேட்கிறாய்? பி. ஏ. படிச்சவளுக்கு ஏற்ற வரன் அமையறதே கஷ்டமாக இருந்தது. அப்படி எம். ஏ, ஐ. ஏ. எஸ், ஸானு அமைஞ்சாலும் ஏகப்பட்டது கேட்டா. கடைசியிலே ஒரு பி.ஏ. வரனுக்கு. பேசி முடிச்சுட்டா அவள் புக்ககமும் பெரிய குடும்பம். மாமியார் ஒரு முசுடு, கணவன் ஒரு அப்பாவி. சமதையா படிச்சிருக்கிற கர்வம் வேறே இவளுக்கு. ஒரு காரியம் செய்யத் தெரியாது. தினமும் வீட்டிலே சண்டை, பூசல், ரகளைதான் மன நிம்மதியே இல்லை" நீண்ட பிரசங்கம் போல் அம்மா பேசி நிறுத்தினாள்.

அரும்பி மலரும் இளங்கொடி போல் துவண்ட நிலையில் தூணில் சாய்ந்திருந்தாள் ஜெயா. அவள் வயிற்றைப்போல் அவள் மனமும் நிறைந்திருந்தது. அவளுக்குதான் எத்தனை நல்ல அம்மா கிடைத்திருக்கிறாள்? —

நினைவு மயக்கம்

எஸ். சேதுராமகிருஷ்ணன்

"உண்மையைச் சொல்லுங்கோ!"

"உண்மையே தான் நான் இதுவரை சொல்லி வந்தது. இனியும் நான் உண்மையையே பேசுவேன், நான் முன்பே உன்னிடம் சொல்லியுள்ளபடி, என்னிடம் இல்லாத நல்ல குணங்களை எவனிடம் நீ காண வேண்டாம். ஆனால் என்னிடம் இருக்கும் நல்ல குணங்களை 'டும் மறுத்தால் அதை எவ்வாறு நான் சகிப்பேன்!"

அவளுக்கு அவனது பேச்சு ரஸிக்க வில்லை அவன் சொல்வதை அவளால் நம்பமுடியவில்லை. அவன் ஓர் எழுத்தாளன். அவள் அவனது மனைவி. ரஸிகையாக இல்லாமல் அவனது கதைகளின் மூலப்பொருள்களை ஆராய்வதில் வீணே நேரத்தைச் செலவழித்தாள் எல்லாப் பெண்களையும் போலவே தனது கணவனின் முதலும் முடிவுமான ஆசைநாயகி தானே என்று அறிய ஆசைப்பட்டாள். அவனை விரும்பி மணந்துகொண்ட அவள் விதி வசத்தால், அவனைத் துன்புறுத்த மனமில்லாதிருந்தும், தனது கேள்விகளால் அவனது உள்ளத்தை அம்புபோல் துளைத்தாள்.

"உங்க கதையிலே வர சீதா யாரு?"

"கற்பனையில் வந்த பெயருக்குக் காரணம் ஏது!",

"விதையில்லாமல் மரம் ஏது! வாழ்வில் துளியாவது அனுபவமில்லாமல் கற்பனை எது!" என்றாள். அவளது புத்திசாலித்தனமும் அறிவும் அவனை மிகவும் கவர்ந்தாலும், அவளது கேள்விகளின் உள்ளர்த்தங்கள், அவளது கேள்விகளாலும் அதற்கு தான் தரும் பதிலாலும் ஏற்படப் போகும் புயல் இவற்றை நினைத்து அவன் மனக்குழப்பத்தையே அடைந்தான்.

அவ வெகு நாட்கள் கழித்து மனதுக்குப் பிடித்த மனைவியையே அடைந்தான். எழுத்து ஒரு வரப்பிரசாதம். மனிதனின் எண்ணங்களுக்கு மதிப்பு கொடுக்கும் எழுத்துக்கலையில் மனம் லயித்து அதிலேயே இன்பந் தரும் எழுத்துக்கள் பல எழுதினான். வாழ்வில் தன் அனுபவங்களையும், பிறர் வாயிலாக பிறர் வாழ்க்கையில் பட்ட இன்பதுன்பங்களையும் மதித்து அவற்றைத் தன் சொந்த வாழ்க்கையில் ஏற்பட்டதாகப் பாவித்து, கற்பனையுடன், உன்னத கலா தீக்ஷண்யத்துடன் பல கதைகள் எழுதினான். தான் செய்யாத, செய்யத் துணியாத, தன்னிடம் இல்லாத பலகுணங்களை, காரியங்களைத் தான் செய்ததாகப் பல கதைகள் எழுதினான். "நான்" என்று

ஆரம்பித்தே பல கதைகள் எழுதினான். கற்பனைக்கும் வாழ்வுக்கும் உள்ள உன்னத தொடர்பை, வேற்றுமையை முழுதும் அறியாத அந்தப் பெண் அவனை அவனது எழுத்துக்களைக் கொண்டு மதிப்பிட ஆரம்பித்தாள்.

அவனது நல்ல குணங்களையோ, அன்பையோ, மற்றைய மாதர்களை நஞ்செ்ன வெறுக்கும் மறக்குணத்தையோ, வைத்து அவனை மதிப்பிடாமல் அவனது எழுத்துக்களின் வேகத்தைக் கொண்டும் அவற்றில் காணப்பட்ட அனுராக மயக்கத்தைக் கொண்டும், இன்னும் பற்பல பலஹீனங்களை வைத்தும் அவனை மதிப்பிட்டாள்.

கல்யாணமாகி இரண்டே மாதங்கள் கூட ஆகாத நிலையில் அவர்கள் வாழ்வு இரண்டு கிளைகளாகப் பிரிந்தது. அவளது நினைவு, அவளது இந்தப் பேச்சுக்களினால், சந்தேகமும் விரஸமும் கொண்ட பேச்சுக்களினால், அவனுக்கு இன்பத்தைத் தருவது குறைந்தது. நாளடைவில் அவன் அவளையே மறக்கக்கற்றுக் கொள்வதே அவசியம் எனத் தேர்ந்தான். "முதல் கோணல் முற்றும் கோணல்" என்பதை அறியாத அந்தப் பேதை, அவனது வாழ்வை நகரத்தின் வாயிலிலேயே படிப்படியாகக் கொண்டு செல்வதை உணர்ந்தான்.

இரவின் மோனத்திலே, நிசப்தத்திலே. அனுராக நினைவினால் உலகமே மயங்கித்தன் நிலையை இழக்கும் உன்னத நேரத்திலே, இவ்விளம் தம்பதிகளிருவரும் விரோதிகள் போன்று ஒரே படுக்கையில் இருந்தும் காத தூரம் உள்ளவர்களாய் இருந்தனர்.

இவளை நினைந்து உருகின நாட்களை நினைத்து வேதனைப்பட்டான் அவன். மற்றைய மாதர்களுக்கு இவன் தனது மார்பை காட்டியதாக நினைத்த அவள் இவனது அணைப்பு களங்கம் நிறைந்தது என்று எண்ணினாள், அக்கினிசாட்சியாக ஒருவரை ஒருவர் விரும்பிக் காமுற்றுக் கல்யாணம் செய்து கொண்டு, இருமாதங்களுக்குள்ளேயே இவ்வளவு மனவேற்றுமை கொண்டது இருவருக்கும் துரதிருஷ்டமேயாகும். இவனது கதைகளுள் வரும் ஒவ்வொரு பெண்ணைப் பற்றியும்: பெண்ணைப் பற்றிய சம்பவங்களையும் அப்படி அப்படியே அவள் நம்பாவிட்டாலும் அதில் சிறிதாவது உண்மையிருக்காதா என்று தன்னையே குழப்பிக் கொண்டாள். உறுதியற்ற குணமும் சபலசித்தமும் கொண்ட மனிதன் இவன் என்றே அவள் இவனை நினைத்தாள். கல்யாணத்துக்கு முன்பு கனவு கண்ட அவனினின்று வேறுபட்ட மனிதனாகவே நிதர்சன வாழ்வில் அவன் அவளுக்குக் காட்சியளித்தான்.

முதன் முதலில் தனது கணவன் எழுத்தாளன் என்று பெருமைப்பட்ட அவளுக்கு, அவனது கதைகளை ஆழ்ந்து படித்த பின்பு அவனிடம் வெறுப்பே வளர்ந்தது. ஜகமெங்கும் காணக் கிடைக்காத கணவன் என்று தன் சிநேகிதிகளிடம் பெருமையடித்துக் கொண்ட அவளுக்கு உண்மை வாழ்வு அது ஒரு மாயா ஜாலக்கனவு என்றே விளங்கலாயிற்று.



விதியின் பயனால் அவர்களின் பாந்தத்வம் அறுந்து போகும் நிலைமையே வந்தது. அவளைச் சந்திக்கவே அவன் பயந்தான். அவள் திடுமென்று ஒரு நாள் அவன் எழுதிய ஒரு கதையை ஆணிவேராகப் பிடித்துக் கொண்டு அதிலுள்ள வாக்கியங்களை அலசி அலசி அதில் உள்ளர்த்தங்களையும் வெளி அர்த்தங்களையும் விவரித்து அவனிடம் பேசி உண்மையைப் பெறும் முயற்சி என்று நினைத்துக் கொண்டு முட்டாளாக உருவம் எடுத்தாள். அவனுக்கு

இவையெல்லாம் நாராசமாக இருந்தது. தனது எழுத்துக்களை எரித்து விடுவோமா என்றுகூட நினைத்து விட்டான். ஆனால் இலக்கியத்தில் உள்ள அவனது மோகம் அவளிடமுள்ள மோகத்திற்கு எந்த விதத்திலும் இளை குறைந்ததல்ல. இவளது முட்டாள்தனமான கொள்கைக்குத் தனது இலக்கிய சிருஷ்டிகளை பலி கொடுக்க எண்ணவில்லை அவன்.

அவளிடம் வேறு எந்த விஷயத்தைப் பற்றிப் பேசும் முயற்சியில் அவன் தோல்வியே காணலாயிற்று, அவனது பயமுறுத்தலோ, அன்புப் பேச்சோ, அலட்சியமோ எதுவும் அவளிடம் எந்த எதிரொலியையும் எழுப்பவில்லை. மாறாக அவன் எதையோ மறைப்பதாக எண்ணி எண்ணி மனம் புண்ணானாள்.

வெளியில் அவனுடன் கூட வர மறுத்தாள். சினிமாவுக்கு வர மறுத்தாள் அவனுடன். பேசுவதையும் குறைத்தாள். யாராவது அவர்களது உறவினர்கள் அவர்களுடைய வீட்டுக்கு வரும் பொழுதுமட்டும், அவர்கள் தங்கள் சௌஜன்யமாக இருக்கிறார்கள் என்று நினைக்கவேணுமென்று அவனுடன் அவர்கள் முன்னிலையில் மிக அன்பாகவும் நெருக்கமாகவும் உரிமையுடனும் பழகினாள். அவர்கள் மாடிப்படி கூட இறங்கியிருக்கமாட்டார்கள். மறுபடி பழைய கதையே.

ஒரு நாள் இருவரும் பஸ்ஸில் பிரயாணம் பண்ணிக் கொண்டிருந்தனர். அவனது ஆபீஸில் வேலை பார்க்கும் பெண் இவர்களது ஸீட்டுக்குப் பின்புறம் உட்கார்ந்திருந்தாள். யாரோ தன்னைப் பின்புறமிருந்து உற்றுப் பார்ப்பதுபோல் படவே, மிகுந்த சிரிப்புடன் அவனது ஸெக்‌ஷனில் வேலை பார்க்கும் எப்பொழுதும் சிரித்த முகத்துடன் கூடிய ராதை 'நமஸ்தே!'' என்று சொல்வதைப் பார்த்து அவனும் ''நமஸ்தே'' என்றான். தன் மனைவியிடம் இவள்தான் என் ஆபீஸில் வேலை பார்க்கும் ராதை!'' என்று சொன்னான்.

''எனக்கு ஒன்றும் தெரியவேண்டியதில்லை!'' என்றாள். சிறிதும் இரக்கமற்று. பின் ஸீட்டிலுள்ள அவளது காதில் அந்த வார்த்தை விழுந்திருக்

குமே என்று பல நாட்கள் அதை நினைத்து அவன் அவஸ்தைப் பட்டான். அடுத்த ஸ்டாப்பிலேயே இறங்க வேண்டிய அவன் அவளைக்கூட்டிக்கொண்டு, அதே ஸ்டாப்பிலேயே இறங்கினான்.

''நம் கல்யாணத்துக்கு வந்து பரிசு கொடுத்து ஒரு வாய் காபிகூட குடிக்காமல் போனாள் இவள். இவளுக்கு நாம் தரும் கைம்மாறு இதுதான்!'' என்று உணர்ச்சி வசப்பட்டுச் சொன்னான். அவள் தன் தவறுதலுக்கு மன்னிப்புக் கேட்டாள்.

ஆனாலும் பழைய கதையே, வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது. இந்த 'இவளை'ப் பற்றிக் கேள்விகள் கேட்க ஆரம்பித்தாள். அவள் எப்படிச் சிரிக்கலாம்? அவள் எப்படி உங்கள் ஸெக்‌ஷனில் வேலை செய்யலாம்? அவளை எப்படி நீங்கள் பார்க்கலாம்? நாளை ஆபீஸ் போனால் என்ன பேசிக் கொள்வீர்கள்? பைத்தியத்தின் கேள்விகளுக்குக் கணக்கு உண்டா?

மிகவும் சாதுவாகயிருந்த அவள், இந்தப் பேச்சுக்களைப் பேசும்பொழுது உக்கிர தேவதையாகவே மாறினாள். மனங்கசந்தபின், வெறும் அணைப்பு என்ன சுகத்தைத் தரும்!

இவளுடன் கூடி வாழ்வது அவனுக்கு அசாத்தியமாகவே பட்டது. ஆனால், அவளோ இவனைக் கேள்விக் கேட்டு

"எதற்காகப் பாவம், இந்த வீட்டின் முன் ஒற்றைக் காலில் நின்று கொண்டு தவம் செய்கிறீர்கள்?''

"எனக்குத் தரவேண்டிய குரு தட்சணையை வசூல் பண்ணத்தான்!''

ஒரு முடிவிக்கு வந்தபின் ஒரு 'புது வாழ்வைத் தொடரலாம் என்று நினைத்தாள். ஒரு நாள் இரவு அவர்களது பேச்சு ராஸிக்யத்தில் குறைந்ததாக ஆயிற்று.

"முருகன் கோவிலில் வந்து சத்தியம் பண்ணுங்கோ!''

"என்ன சத்தியம்?''

"உங்களுக்கு யாரும் கிடையாது என்று!''

"என்னது?''

"நீங்க யாரையும்— யாரையும்—''

"என்னது?'

"உங்களுக்கு யாரிடமும் தொடர்பு கிடையாது என்று கந்தசாமி கோயிலில் சத்தியம் செய்து கொடுங்கள்!'' என்றாள்.

சத்தியம்! கந்தசாமி கோயில்! சென்னையிலுள்ள ஒவ்வொரு முருகன் கோயிலுக்கும் இவளைக் கூட்டிக்கொண்டு போனதன் பலன் இன்று தெரிந்து விட்டது! சத்தியம்! சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் சத்தியம் செய்து அந்தச் சத்தியத்தை மீறி அவ்வூரின் எல்லையை விட்டு ஒரு காலை வைத்ததும் ஒரு கண் மறைந்தது. மற்றொரு காலை வைத்ததும் மற்றொரு கண்ணும் போயிற்று! முழுக் குருடர் ஆரூர் தம்பிரான் தோழர். சத்தியம். யாரிடம் சத்தியம்? எதற்காக? அதுவும் முருகன் கோவிலில். நினைக்கவே பயங்கரமானது, குடும்பத்துக்கே நல்லதல்ல இந்த சத்தியம்! வம்சத்துக்கே நல்லதல்ல இது!

ஆனால் அவள் பிடிவாதமாகவே இருந்தாள். சரி என்று கந்தஸ்வாமி கோவிலுக்கு அவளுடன் அடுத்த நாளே சென்றான். கொடிமரத்தின் பக்கத்தில் வந்ததும் "சத்தியம்'' என்று பேச்சை எடுத்தாள்.

உலகமெலாம் வியக்கும் முருகக் கடவுளின் முன்னால் அவன் சத்தியம் பண்ணத் தயாராக இல்லை. இவளிடமிருந்து என்றுமே விலகியிருக்கவே தயாரானான். கோவிலில் வந்ததும் அவளுக்கு அவனின் புனிதத் தன்மையை விளக்க சத்தியம் அவசியம். அவனுக்கோ அவளிடமிருந்து என்றுமே பிரிவதே நல்லது என்பதை அந்தக் கொடிமரத்தின் கீழே தீவிரமாக உணர்ந்தான். ஒரு கணத்தில் தன்னை மறந்தான். சட்டைப் பையிலுள்ள கற்பூரத்தை எடுத்துக் கொளுத்தினான்.

"நீ இன்று முதல் என் மனைவியல்ல. உன்னுடன் என்றும் இனி வாழேன்! இது சத்தியம்!'' என்று சொல்லியவாறு கற்பூரத்தை அணைத்தான்.

கொடிமரம் ஆடியது. அவள் நடுங்கினாள். அவன் உடலும் நடுங்கியது. இருவரும் மிகுந்த நடுக்கத்துடன் ஒருவரை ஒருவர் தொடவும் பயந்து கோவிலை விட்டு வெளியேறினர். வெளியே வந்தும் இருவர் உடல்களும் நடுங்கிக் கொண்டிருந்தன.

அவளுக்கு பலத்த அதிர்ச்சியையே தந்தது இது, கிணறுவெட்ட பூதம் புறப்பட்டது. அவனுக்கும் இது மிகுந்த அதிர்ச்சியையே தந்தது. தான் ஏன் இவ்வாறு முட்டாள் தனமாக சத்தியம் செய்தோம் என்று தன்னையே நொந்து கொண்டான். அவளுக்கு அவளது கேள்விகளெல்லாம் மறைந்தன.

ஆயினும் என்ன பயன்? வாழ்வு இனி இருவருக்கும் வெவ்வேறு தன்மையதே ஆகிவிட்டது. அக்கினி சேர்த்து வைத்த பிணைப்பு அதே அக்கினியால் மறைந்துவிட்டது. குழம்பிய மனத்தினர்களாய், இருவரும் வீடு திரும்பினர்.



* * *

அடுத்த நாளே அவளை ஊருக்கு அனுப்பச் செய்வதில் முயன்றான். அவள் அழுதாள், காலில் விழுந்தாள். அவன் உள்ளம் அவளை நினைத்து உருகினாலும், இனி அவனாலேயே ஒன்றும் முடியாது, அவனுக்கு கைவிலங்கை அவளே பூட்டினாள். இல்லை, அவனே பூட்டிக் கொண்டான். இனி அதை உடைத்தெறியும் சக்தி யாருக்கே உண்டு! சுந்தரமூர்த்தி சுவாமிகளையே—சிவபெருமானின் தோழரையே—சத்தியம் அந்தப் பாடு படுத்தியபோது தன்னை என்ன பாடுபடுத்தாது?

அவள் அழுததும் துடித்ததும் வியர்த்தமேயாயிற்று. எப்படித்தான் கல்நெஞ்சு கொண்ட அவன் அவளை என்றுமே புறக்கணிக்கத் துணிந்தானோ? மனிதனது நன்மைக்காக ஏற்பட்ட சத்தியம் மனிதனது அழிவுக்காகப் பயன்பட எப்படித்தான் அவனது விதிக்கு மனம் வந்ததோ? அவன் திருநீலகண்டனா? அவருக்காவது சிவபெருமான் நேரே தோன்றி தம்பதிகளை ஒன்று சேர்த்து வைத்தார். இனி இவர்களது வாழ்வு? இனி இவளைப்போல ஒரு மனைவி எவ்வாறு கிடைக்கும்! மனதினால் வெந்து நீறாகவேண்டும்! சத்தியத்தை உடைத்தெறிய தெம்பு ஏது? அக்கிரமமான சத்தியம்! அநியாயம்!

ரயில் புறப்படப்போகிறது. அவளது பெற்றோர்களின் ஊருக்கு அவள் செல்லப் போகிறாள். அவள் அங்கு போய் என்ன பதில் சொல்வாள்? இவன் தனது நண்பர்களிடம் என்ன சொல்லுவான்?

ஊர் கூடித் திரண்டு வந்ததே கல்யாணத்துக்கு! அவ்வளவு ஆசிகளும் பொய்யாயினவே! ரயில் புறப்படுகிறது! அவளது கண்களில் கண்ணீர். அவனும் கர்சீபை வாயில் அடக்கிக்கொண்டு அழுகிறான். அவளை இறங்கச் சொல்லலாமா என்று கூட நினைத்தான். அவள் வேறு ஒன்றும் சொல்லத் தோன்றாமல் "அடிக்கடி லெட்டர் போடுங்கோ!" என்றாள். அவளது கையை முத்தமிடக் குனிந்தான். பிறகு என்ன தோன்றிற்றோ? நீ போய் விட்டுவா!'' என்றான். போய் விட்டு வர? எப்போது? அவளுக்குத் தெரியுமா? இல்லை. அவனுக்காவது தெரியுமா?

ரயில் போய் வெகு நேரமாகியும் அவன் அங்கேயே கற்சிலைபோல நின்று கொண்டிருந்தான்.

(கடையில் இருந்த அத்தனை புடவைகளையும் பிரித்துப் போட்டு......)

"ஏனம்மா! இவைகளில் ஏதுவுமேவா உங்களுக்குப் பிடிக்கவில்லை?''

"அவர் ஆபீசுக்குப் போன பின் வீட்டில் 'போர்' அடிக்கிறதேயென்று தான் இவைகளைப் பார்வையிட்டேன்! தாங்க்ஸ்...!"

மோட்டார் சைக்கிளில் போகும் மனிதர்

[illegible] வெற்றியும் திகழ, மக்களின் மனத்தைக் [illegible]
எங்கு போனாலும் சரி இவர் மக்களின் கவனத்தைக்
கவருகிறார். கம்பீரத்துடன் எல்லோரையும் [illegible]
முன்னேறுகிறார். இவர் போன்றவர்க்கே வெற்றி
[illegible] காத்திருக்கிறது

ராயல் என்பீல்ட்

[illegible]

[illegible]

நடிகர்திலகம்
நடிப்பின் சிகரம்
நட்சத்திர கிரிக்கெட்
மட்டையடி மன்னர் கோபிநாத்
தமிழ் திரை மன்மதர் கணேஷ்!
தயார்! போடுங்கள் பந்தை
தேவிகாவும்
ரமணமூர்த்தியு
ஜமுனா

மோட்டார் சைக்கிளில் போகும் மனிதர்

ஆண்மையும் வெற்றியும் திகழ, மக்களின் மனத்தைக் கவருகிறார் எங்கு போனாலும் சரி இவர் மக்களின் கவனத்தைக் கவருகிறார். கம்பீரத்துடன் எல்லோரையும் தாண்டி முன்னேறுகிறார். இவர் போன்றவர்க்கே வெற்றி நிச்சயமாகக் காத்திருக்கிறது

ராயல் என்பீல்ட்

[illegible]
[illegible] இந்தியா லிமிடெட்
[illegible]

[illegible]
[illegible] மோட்டார்ஸ் [illegible]
[illegible] லிமிடெட்
[illegible]

நடிகர்திலகம்
நடிப்பின் சிகரம்
நட்சத்திர
கிரிக்கெட்
மட்டையடி
மன்னர்
கோபிநாத்
தமிழ் திரை
மன்மதர்
கணேஷ்!
தயார்!
போடுங்கள் பந்தை
தேவிகாவும்
ரமணமோகதியும்

சாவித்திரி
நந்தா
வகிதா –
ரஹ்மான்
சந்திர –
காந்தா
நிருபாராய்
சந்திரபாபு
ஷியாமா
ஜானி
வாக்கர்
ராஜ் –
திராவிடத்தின் புரட்சியாரும்
வடநாட்டு திலீப்குமாரும்.
தீவிரமான பயிற்சி
ராகினி
Mali

திட்டத்தினல் நமக்கு என்ன பலன்

197854
சென்னை-600 008

ஒவ்வொரு வருக்கும் போதுமான உணவு

உணவு தானியங்கள் உற்பத்தியை 7.6 கோடி டன்னிலிருந்து 10 கோடி டன்னுக அதிகரிப்பது மூன்ருவது திட்டத்தின் குறிக்கோள். இதனுல் ஒரு நபரின் சராசரி தின உணவு 16 அவுன்ஸிலிருந்து 17.5 அவுன்ஸாக உயரும்.

திட்டத்தின் குறிக்கோள்களை அடைய உதவுவோம்

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் | நாட்டினருக்கெல்லாம் நல் வாழ்வு

DA-61/748

என்னை நம்புவீர்களா?

14 குறிஞ்சிமலையில்.....

குறிஞ்சிமலை என்பது பெயரளவில் மலையேயொழிய ஏறக்குறைய நூற்றைம்பது அடி உயரமுள்ள குன்றமேயாகும்.

மொட்டைப் பாறைகளும், சிறு சிறு குத்துச் செடிகளுமாக நிறைந்திருந்த அந்தக் குன்றின் உச்சியில் அறுபத்திநாலு கால் உள்ள மண்டபம் ஒன்று இருந்தது. அழகான கல் மண்டபம் அது.

அந்தக் குன்றின் உள்ளே குடையப்பட்ட விசாலமான ரகசிய நிலவறைக் கூடம் ஒன்றிருப்பதாகவும், அந்தக் கூடத்திற்கு போகும் வழியாகிய மர்ம சுரங்க வழி மண்டபத்தின் மேல் உள்ள தூண்களில் ஒன்றில் பதுங்கியிருப்பதாகவும் எல்லோரும் சொல்லிக்கொண்டார்கள். அதுமட்டுமல்ல; நிலவறைக்கூடத்திலிருந்து உதயகிரி வரையிலும் ரகசியச் சுரங்கம் இருப்பதாகவும் வதந்தி. ஆனால் யாரும்போய்ப் பார்த்ததில்லை. அந்த மண்டபத்தின் தூண்களின் சிற்பவேலைப்பாடு எவரையுமே கவரக்கூடியது. ஆதலால் அந்த இடம் ஒரு காட்சி ஸ்தலமாகிவிட்டது.

புரொபஸரும் விஜயமும் ராஜாவுடன் அங்குவந்து சேருகையில் மாலை மணி ஐந்தரை இருக்கும். நல்ல கோடைக்காலமாதலால் வெயிலின் பிரகாசம் மங்கவில்லை.

மண்டபத்தில் ஒவ்வொரு தூணும் ஒவ்வொரு அழகு. அவற்றின் சிற்ப நயத்தை கவனித்த புரொபஸர் அதிலேயே மனத்தை லயிக்கவிட்டார். அவருடைய ஆராய்ச்சிக் கண்களுக்கு அது ஒரு விருந்தாயிற்று.

விஜயமும் ராஜாவும் கொஞ்சநேரம் தூண்களைச் சுற்றிவத்தனர். அவர்களுக்கு அதில் விசேஷமாக ஒன்றும் புலப்படவில்லை.

''அப்பா...சுரங்க வாசல் எங்கேயப்பா இருக்கிறது?...என்று ஆவலுடன் கேட்டான் ராஜா.

“அதெல்லாம் அந்தக்காலத்து ராஜாக்கள் ரகசியமாகவே வைத்திருப்பார்கள்...பொது மக்களுக்கு அது எப்படித் தெரியும்?”

“உண்மையாகவா அப்பா?”

“ஆமாம்...எதிரிகள் படையெடுத்து வந்தால், வெளியே போய்வர ரகசிய வழிகள் வேண்டாமா? மந்திராலோசனை செய்ய ரகசிய அறை வேண்டாமா? அதுமட்டுமா? ஆகாரங்களை பதுக்கிவைக்கவும் கிடங்குகள் வேண்டும்’...

புரொபஸர் ஏதேதோ சொன்னார். ஆனால் ராஜாவின் கவனம் மாறிவிட்டது. வண்ணவண்ண இறகுகளை விரித்துக்கொண்டு பறந்துவந்த பெரிய பட்டாம்பூச்சி ஒன்றை அவன் இமை கொட்டாது பார்த்தான். விஜயத்தின் கையைப் பிடித்து இழுத்து மண்டபத்திற்கு வெளியே கூட்டிக்கொண்டு வந்தான்.

"அம்மா அம்மா! அதோ பார்த்தாயா! பட்டர்'ப்ளை' என்ன அழகாயிருக்கிறது... பாரம்மா... அதை நான் மெள்ளப் பிடிக்கட்டுமா?..." என்று ஆவலுடன் கேட்டான்.

"கூடாது ராஜா!... நீ அதை இங்கிருந்தே பார்... அழகாய் மலருக்கு மலர் போய் உட்காருகிறது பார்த்தாயா?" என்ற விஜயத்தின் பார்வை அந்த வண்ணாத்திப் பூச்சியை தொடர்ந்து சென்று ஓரிடத்தில் லயித்தது. பூச்சி அங்கிருந்து பறந்த பின்பும் விஜயம் தன் பார்வையை மீட்டுக் கொள்ளவில்லை. பெரிதாக வளர்ந்திருந்த அந்தச் செடிக்கப்பால் ஒரு சிறு சமவெளி. அங்கே தனித்து நின்ற ஒரு மொட்டைப் பாறை மேல் ஒரு மனித உருவம் உட்கார்ந்திருந்தது விஜயத்திற்கு நன்கு தெரிந்தது.

குன்றின் உச்சிக்கு வந்த உடனேயே விஜயத்தின் உடல் அந்த வெட்ட வெளியில் சிலிர்த்தது. குன்றின்மேலிருந்து ஊர் முழுவதும் சுற்றிப் பார்த்த அவள் விழிகளில் ஆனந்தம் ததும்பியது. குமாரகோவில் கோபுரம் கம்பீரமாகத் தெரிய, வாரண தடாகமும் அதைச் சார்ந்த சிறு குன்றுகளும், பசுமையான மரங்களும் தீட்டப்பட்ட சித்திரம்போல் அழகாகக் காட்சியளித்தன. சிற்பங்களில் பொதிந்து கிடந்த அழகைவிட இந்த இயற்கையின் ரமணீயத்திலே அதிகம் அழகிருப்பதாக அவள் கருதினாள். மெய்மறந்தாள் அவள். அந்த நிலையில் அந்த மனிதனைக் கண்டதும் அவள் உற்சாகம் பொங்கி நின்றது. அவன் இருக்கும் இடம் நோக்கி அவள் கால்கள் தாமாகவே நகர்ந்தன.

"என்ன இது? நீங்களா?"... என்ற வியப்பும் மகிழ்வும் பொங்கிய குரல் ராகவனை திடுக்கிட வைத்தது. நிமிர்ந்து பார்த்த அவன் பிரமித்தான். எவளைப் பார்க்கக்கூடாது, எவளுடைய பெயரையும் கேட்கக்கூடாது என்று நினைத்தானோ அவளே எதிரில் வந்து நிற்கிறாளே!...

"நீயா விஜி? நீயேதானா?...

"ஆமாம், நானேதான்... நீங்கள் எப்படி இங்கு வந்தீர்கள்? உங்களை நான் இங்கு பார்ப்பேன் என்று சொப்பனத்தில்கூட நினைக்கவில்லை..." என்று குதூகலத்துடன் கூவினாள் விஜயம். சொல்லி விட்டு, அருகாமையில் தரையில் கைக்குட்டையை விரித்து உட்கார்ந்து கொண்டாள்.

ராகவன் ஒரு செடியிலிருந்த மலரை "வெடுக்"கென்று பறித்து வெறுப்புடன் வீசியெறிந்தான்.

"நீ சொப்பனம் நிறையக் கண்டிருயாக்கும்... நன்றாகத் தூங்கியிருப்பாய், அப்படித்தானே..." என்று குத்தலாகக் கேட்டவாறே ராகவன் அவளருகில் எழுந்துவந்துஉட்கார்ந்துகொண்டான்.

கிருஷ்ணா

"நீ தூங்கினாய், நானோ தூங்கவேயில்லை. ஏனென்றால் என்னால் தூங்கவே முடியவில்லை..." என்று தனக்குள் சொல்வதுபோல முணுமுணுத்துக்கொண்டான்.

விஜயம் அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். அன்றொரு நாள் அவன் சொன்னது 'பளிச்'சென்று ஞாபகத்துக்கு வந்தது. 'மருந்து என்று நீ நினைப்பது 'விஷம்' என்றானே? இப்பொழுது பேசுகிற பேச்சின் அர்த்தம்? ராகவன் விஷமாகிக்கொண்டு வருகிறானா? அல்லது தன்னால் விஷமாக்கப் பட்டுவிட்டானா? விஜயம் பேச்சை மாற்ற விரும்பினாள்.

"நான் கேட்டதற்கு நீங்கள் பதில் சொல்லவேயில்லையே? நீங்கள் இங்கு எப்பொழுது வந்தீர்கள்?"

"நானா? இந்த ஊருக்கு வந்ததைக் கேட்கிறாயா? அல்லது இந்தக் குன்றுக்கு வந்ததை கேட்கிறாயா?" என்றான் வேண்டுமென்றே.

"இந்த ஊருக்கு வந்ததை. திடீரென்று மெட்ராஸைவிட்டுப்புறப்பட்டு விட்டீர்களாக்கும்?"



விஜயத்திற்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது. 'நாம் இங்கு வந்திருப்பது தெரிந்துதான் ராகவனும் இங்கு வந்திருக்கிறானோ?...'

"திடீரென்று புறப்பட வேண்டி வந்துவிட்டது. உனக்கு ஊர் நிலவரம் ஒன்றும் தெரியாது போலிருக்கிறது... என் மாமா காலமாகிவிட்டாரே. நீ கேள்விப்படவில்லையா?"

"அடடா" என்றாள் விஜயம். தொடர்ந்து "என்றால் இப்பொழுது ஒன்றையுமே கவனிக்கமுடிவதில்லை. என்னைச் சுற்றி என்ன நடக்கிறதென்பதே எனக்குத் தெரிவதில்லை. நான் ரொம்ப ரொம்ப மோசமாகிவிட்டேன்..." என்றாள்.

"ஏன் அப்படி ஆகிவிட்டாய்?" என்று ஆர்வமுடன் கேட்டான் ராகவன். எதையோ விரும்பி அவன் மனத்தில் துடிப்பு ஏற்பட்டது.

"எனக்கே தெரியவில்லை ராகவன். சில சமயம் நான் மிகவும் கோபக்காரியாகிவிடுகிறேன். சில சமயம் நான் கொடூரமானவளாகக்கூட மாறிவிடுகிறேன். ஆனால், என் குறைகளெல்லாம் எப்பொழுது நான் நல்லவளாக இருக்கிறேனோ அப்பொழுதுதான் எனக்குத் தெரிகிறது..." என்றாள் விஜயம்.

ராகவன் ஒரு பெருமூச்சுவிட்டான்.

"எனக்குத் தெரியும் விஜயம். நாம் இருவருமே வாழ்க்கையில் ஏமாந்துவிட்டோம், பால் பாலாக இருக்கும் வரையில்தான் நன்றாக இருக்கும். பாலோடு பால் சேர்ந்தால்தான் இனிமையாகவும் இருக்கும். பாலில் ஒரு துளி மோர் விழுந்தாலும் அது முறிந்துவிடும்..."

"நல்ல தயிராக மணக்கக் கூடாதா ராகவன்?"

"பாலின் தன்மையே வேறாயிற்றே விஜி? தயிர் என்ன நினைத்தாலும் மீண்டும் பாலாகி விடமுடியுமா விஜி?"

"முடியாதுதான்"

"அதுவும் நமக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது, இல்லையா விஜி..." என்ற ராகவன் வெறுப்புடன் சிரித்தான்.

விஜயத்தால் சிரிக்க முடியவில்லை. அவளையறியாமலேயே பெருமூச்சு விட்டாள்.

கலகலப்பும் சிரிப்பும், வேடிக்கையும் விநோதமுமாக மனம் ஒன்றி மணத்திருக்க வேண்டியதல்லவா அவளுடைய வாழ்வு?

உணர்ச்சிகளை விழுங்கிக்கொண்டாள் அவள். அவளது விரல், தரையில் தாறுமாறாக கோடுகளைக் கிழிப்பதும் அழிப்பதுமாக இருந்தது

"அதிருக்கட்டும்... நீ இங்கு ஏன் வந்தாய்?' என்றான் ராகவன். அந்த மௌனச் சூழ்நிலை அவனுக்கும் பிடித்தவில்லை.

"ராஜாவுக்காக நானும் அவருமாய் இந்த ஊருக்கு வந்திருக்கிறோம். இங்கே வந்திருந்தால் ராஜாவுக்கு உடம்பு தேறும் என்று டாக்டர் சொன்னார்... ஆமாம் ராகவன்; நானும் இங்கு வந்து பதினைந்து நாட்களாயிற்று. இதுவரையிலும் உங்களைப் பார்க்காதது ஆச்சரியமாயில்லை?..." என்ற விஜயம் ராகவனை ஏறிட்டு நோக்கினாள்.

மாலை மயக்கத்தின் மஞ்சள் ஒளியில், ஒரு பொற்சிலை அசைந்து பேசுவது போலிருந்தது அந்தக் காட்சி. ராகவன் ஒருவித மயக்கத்தோடு அவளருகில் நெருங்கி உட்கார்ந்துகொண்டான்.

"விஜி..." என்று அவன் உணர்வு பொங்க அழைக்கையில் அந்த மூச்சின் வேகம் அவள்மேல் பட்டது.

"இந்தக் குன்றின் உச்சியில் மறையும் ஆதவன் செவ்வானத் திரையில்

வண்ணக்கோலம் தீட்ட, இந்த அந்தி மாலையின் மயக்கத்தில் நாமிருவரும் சந்தித்துக்கொள்ள வேண்டுமென்றிருக்கிறதே; அப்படியிருக்க...'' ராகவன் முடிக்கவில்லை ..

''ஐயோ!... அம்மா... என்ற அந்த ஒலி விஜயத்தைத் துடித்து எழச் செய்தது. நரம்புகளெல்லாம்'' 'விண்விண்' என்று சுண்டியது. அடி வயிற்றில் குடல் எழும்பி இதயத்தை அடைத்தது. 'ஐயோ தெய்வமே' என்று அலறினாள் அவள். ஆனால் அந்த ஒலி அவளுக்கே கேட்கவில்லை. கால்கள் இழுக்க அவள் அவைகளையும் இழுத்துக்கொண்டு முன்னுக்கு ஓடினாள். எதிரே புரொபஸரும் வந்தார். அவர் முகத்திலும் பீதியும் கலக்கமும் போட்டியிட்டன.

'என்ன ?...என்ன ?'... என்ற கேள்விகள் எல்லோருடைய மனத்திலும் எழுந்தது, எல்லோருக்கும் ஏதோ விபரீதம் நேர்ந்துவிட்டது என்பதை உள்ளுணர்வு உணர்த்திவிட்டது. ஆனால் என்ன நடந்தது? எப்படி நடந்தது என்று கேட்க எவருக்குமே வாயெழவில்லை. மௌனமே அந்த சமயத்தில் அவர்களுக்கு இன்றியமையாத பேச்சுக் கருவியாக துணை செய்தது. மூவரும் குரல் வந்த திசையை நோக்கி வேகமாக ஓடினர்.

''ஸார்...இந்தப் பக்கம் பெரும்பள்ளமல்லவா இருக்கிறது...'' என்று ராகவன் தன்னை மீறி அலறிவிட்ட வேளையில் மூவரும் அந்தப் பள்ளத்தின் விளிம்புக்கே வந்துவிட்டனர்.

'ராஜா ராஜா' என்று ஒலித்த உள்ளங்களின் பார்வைகள் ஒரேசமயத்தில் பள்ளத்தினுள் பாய்ந்தன. கீழே... வெள்ளை வெளேரென்ற துணிக்குவியலில் ஒன்று நெளிவதுபோன்ற அந்தத் தோற்றம்... சிவப்பாக அந்த மாலை வேளையிலும் தெரிகிறதே. அது என்ன ரத்தமா?...

''ராஜா'' என்று! விஜயம் அலறிய அலறல், அந்த வேதனைக் குரல் அந்த பாழாய்ப் போன எமனுக்குக் கேட்டிருக்கக்கூடாதோ?...

மயங்கிச் சாய்ந்த விஜயத்தை அப்படியே தாங்கி தரையில் கிடத்தினார் புரொபஸர். அவருடைய அடிவயிற்றுத் தீயின் உஷ்ணத்தை அலறவோ அழவோ செய்து அவரால் வெளியிட முடியவில்லை. உள்ளிருந்து பொங்கிய அது அவரையே எரித்தது.

ராகவன் வலதுபுறமாகச் சுற்றி வளைத்துக் கீழே இறங்கும் பாதை வழியாக இறங்கி ராஜா விழுந்து கிடந்த இடத்திற்கு விரைந்தான்.



நைந்து கிடந்த அந்தச் சடலத்தில் இன்னும் அசைவு இருந்தது. மூச்சு இழைந்துகொண்டிருந்தது... ரத்தத்தால் நனைந்தும், காயங்களுடனும் கிடந்த அந்தச் சிறு உடலை பூப்போல தூக்கிக்கொண்டு மேலே ஏறி வந்தான் அவன்.

விஜயத்தை எப்படியோ பிடித்து அழைத்துக் காரில் போட்டார் புரொபஸர். ராகவனும் வந்து ஏறிக்கொண்டான். டிரைவர் டாக்டரின் வீட்டை

இவ்விதழ் முகப்பு:

குறிஞ்சிமலையில் ராகவன், விஜயா.

நோக்கி காரைச் செலுத்தினுன். ஆனுல் அதுவரைக்கும் ராஜா காத்திருக்க வில்லை. அவனுக்கு என்ன அவசரமோ? ஒருவேளை வண்ணுத்திப் பூச்சியைத் தேடிக்கொண்டுபோய்விட்டானே?

கார் வீட்டை நோக்கித் திரும்பியது.

தன்முன் நீண்டு நிமிர்ந்து கிடந்த அந்த மெல்லிய உடலை—சிதைவுகண்ட அந்தப்பொன்னுடலை — வெறித்துப் பார்த்தபடியே பிரமை பிடித்தவள் போல் உட்கார்ந்திருந்தாள் விஜயம். அவளுக்குக் கண்ணீர்கூட வற்றிவிட்டது.

15. அக்கா வரச்சொன்னுள்

நாம் விரும்புகிருேமோ வெறுக்கிருேமோ நம் அபிப்பிராயத்துக்கு காலம் மதிப்புக்கொடுப்பதில்லை. நடந்துவிட்ட பயங்கர துக்க நிகழ்ச்சிக்காக புரொபஸர் யாரையும் நொந்து கொள்ளவில்லை. தன்னிடத்தில் மூண்ட நெருப்பை தானுகவே விழுங்கித் தொலைத்தார் அவர் . விஜயத்தால் அப்படி இருக்கமுடியவில்லை. இழப்பின் துக்கத்துடன், அந்த இழப்புக்குக் காரணமும் தானே என்ற எண்ணம் அவளை அணு, அணுவாக அக்கினித் திராவகம்போல் எரித்துக் கரைத்துக் கொண்டிருந்தது

சென்னைக்கு வந்து ஒரு மாதமாகியும் விஜயத்தின் நிலையில் மாறுதல் ஏதும் ஏற்படவில்லை. மாடியைவிட்டு இறங்காமல் அவள் பித்துப் பிடித்தவள் போல் எப்பொழுதும் உட்கார்ந்திருப்பதால் வீட்டுப் பொறுப்பெல்லாம் சீதா தலையில்தான் விடிந்தது.

சீதா வெகுளிப் பெண்ணே தவிர குடும்பப் பொறுப்பில் நல்ல கெட்டிக்காரி. இன்னும் சொல்லப்போனுல் விஜயத்தைவிட அவள்தான் கெட்டிக்காரி. விஜயத்தைப்போல் அவளுக்கு சலன சித்தமோ, மாறுபடும் குணமோ ஒன்றும் கிடையாது. அவளுக்கு எவ்வளவு தெரியுமோ, எவ்வளவு உணர முடியுமோ, அந்த அளவில் திருப்தியடைவதுடன் பிறரையும் திருப்தி செய்பவள். அவள் தன்னையும் வருத்திக் கொள்ளமாட்டாள், தன்னுல் பிறருக்கு துன்பம் வரும்படி நடந்துகொள்ளவும் மாட்டாள்.

ராஜாவின் காரியங்கள் எல்லாம் முடிந்தபிறகு விஜயமும் விஸ்வநாதமும் சென்னைக்கு வந்து சேர்ந்தார்கள். விஜயத்தைப் பார்த்தவுடன் உடன் பிறந்த பாசத்தால் வயிற்றில் 'குபுக்' கென்று சங்கடம் பொங்கியது. விஜயம் அந்தச் சில நாட்களுக்குள் அவ்வளவு கேவலமாகிவிட்டிருந்தாள்.! கண்களின் கீழே படிந்திருந்த கருவட்டம் அவளுடைய துன்பத்தின் சுமையைக் காட்டினுலும்கூட, அதுவும் அந்த முகத்திற்கு ஓர் அழகாகத்தான் இருந்தது.

"அக்கா..." என்று கூவிய அவள் பாசம் பொங்க ஓடிவந்து விஜயத்தின் கரங்களைப் பற்றிக்கொண்டாள், விஜயம் அவற்றை உதறிவிட்டு 'விடுவிடு' வென மாடிக்குப் போய்விட்டாள்.

சீதாவின் பொங்கிய பாசம் அப்படியே அடங்கிவிட்டது. தமக்கையின் துயரத்தைப் பகிர்ந்துகொண்டு அவளுக்கு ஆறுதல் கூற விழைந்த அவளுடைய மனம் இந்தச் செய்கையினுல் சுருங்கிவிட்டது. தன் தமக்கையின் அஜாக்கிரதையான—சலனப்பட்ட சுபாவத்தினுல்தான் இந்த விபத்து நேர்ந்தது என்பதை உள்வாங்கிக் கொண்டிருந்தாலும், தன் தமக்கைக்கு இந்தமாதிரி ஒரு அடாத பழி வந்துவிட்டதே என்று வருந்திய மனம் இப்பொழுது தானுகவே கசந்தது. சீ! இப்படியும் ஒரு பெண்ணு? இவள் பெண்ணு? பேயா? என்ற எண்ணமே தோன்றியது. களங்கமற்ற சகோதர பாசத்தையும் மீறி அந்த பயங்கர எண்ணமே சீதாவின் உள்ளத்தில் தலை விரித்தாடியது.

'வெண்ணெய் திரண்டு வருகையில் தாழி உடைந்தாற்போல்' என்று பழமொழி சொல்லுவார்கள். ஆனுல் இங்கு ஆயிரம் பாடுபட்டு கடைந்தெடுத்த வெண்ணெயை சட்டியில் போட்டு உறியில் மாட்டிய பின்பு, வேண்டுமென்றே தடிகொண்டு அடித்து உடைத்தாற்போலல்லவா விதி செய்திருக்கிறது? ராஜா ஜுரமாகப் படுத்திருக்கையில் போயிருக்கக்

கூடாதா? ஆயிரம் பாடுபட்டு அவனை ஆளாக்கிப்பின் இப்படி அநியாயமாகப் போய்விட்டானே, ஒரு பழியையும் சுமத்திவிட்டு? 'தான் பெற்ற குழந்தையாயிருந்தால் இப்படி விட்டிருப்பாளா?' என்றுதானே உலகம் சொல்லும்! கல்யாணமாவதற்கு முன்னால் ஒருவிதமான பழி! இப்பொழுது ஒரு பயங்கரப்பழி!...

விஜயம் உண்மையில் பரிதாபத்துக்குரியவள்தான். சீதாவின் மனம் பாசத்துக்கும் பகைக்குமாக மாறி மாறித்தத்தளித்தது. என்ன இருந்தாலும் விஜயத்தோடு மனமொத்து முன்போல் பேசமுடியவில்லை; அந்த வீட்டில் இருக்கவும் பிடிக்கவில்லை...

அவளுக்கு மற்றவருடன் பேசவும் பிடிக்கவில்லை. அலுக்கும்வரை புத்தகங்கள் படிப்பாள். ராஜாவின் நினைவு பீறிட்டு எழுந்தால் புத்தகத்தை மூடிவிட்டு இரு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு குனிந்துவிடுவாள். எங்கிருந்தோ—அதல பாதாளத்திலிருந்து 'ஐயோ! அம்மா...' என்ற குரல் கேட்கையில் உடம்பு பதறும் அவளுக்கு. மிரள மிரள விழிப்பாள்.

புரொபஸரோ வெளிப் பார்வைக்கு அமைதியாக இருப்பதைப்போல காட்டிக்கொண்டாரே தவிர உள்ளூர அவர் மனமும் குமுறும் எரிமலையை ஒத்துத்தானிருந்தது. 'என் மகனைக் கொன்றுவிட்டீர்கள்' என்று கல்யாணி குற்றம் சாட்டினாள். எவளோ ஒரு வஞ்சகியிடம் என் குழந்தையை ஒப்படைத்துவிட்டீர்கள்! அவனை அவள் அநியாயமாகக்கொன்றுவிட்டாள். இனி உமக்குப் பிள்ளையில்லை. ... சந்ததியில்லை; வாழ்வு இல்லை!...

'கல்யாணீ!' என்று அவர் மனம் அலறும். துடிக்கும். துவளும். ஆனால் வெளியே அவரைப் பார்த்தால் சிலைபோல் இருப்பார். துன்பத்தை மென்று தின்பவர் அவர்.

விஜயத்திடம் கோபிப்பதாலோ ஆத்திரப்படுவதாலோ என்ன பயன்? அவளுடைய மனம் பேதலித்த சமயத்தில் அவர் மட்டும் என்ன செய்துகொண்டிருந்தார்! கல் வெட்டுக்களும் சிற்ப ஆராய்ச்சிகளும் அவர் கண்களையுமே கட்டி விடவில்லையா?

உள்ளூரக்குமைந்து நீருகிக்கொண்டு வந்தார் அவர். உடம்பின் தேய்வை அவர் பொருட்படுத்தவில்லை.

அன்று ஞாயிற்றுக்கிழமை. வழக்கம் போலக் காலையில் குளித்துவிட்டு தன் அறையில் அமர்ந்து ஏதோ புத்தகத்தைப்படித்துக்கொண்டிருந்தார் புரொபஸர்.

வாசலில் டாக்ஸி வந்து நின்றது. ராகவன்தான் இறங்கினான். இடையில் விட்டுப்போன வேலையை மீண்டும் தொடரவேண்டாமா? யார் போனாலும்

விஜயமும்அப்படித்தான் இருந்தாள். ஒடுங்கிவிட்ட உள்ளத்தின் பரிதாபம் அவளை ஜடமாக்கியிருந்தது. தனக்கும் தன் கணவருக்கும் இடையே தடித்த இரும்புச் சுவர் ஒன்று எழுப்பப்பட்டு விட்டதாக விஜயம் கற்பனை செய்து கொண்டாள். உலகமே தன்னை ஒதுக்கி விட்ட நிலையில், கேவலம் ஒரு பிணத்திற்கு இருக்கும் மதிப்புக்கூட தனக்கு இனி இருக்காது என்ற நினைவில் உழன்று மயங்கிய அவளை, புரொபஸரின் ஒன்றிரண்டு ஆறுதல் வார்த்தைகளோ பராமரிப்போ காப்பாற்றவில்லை. அவளுடைய மனத்தை பிறரால் மாற்ற முடியவில்லை. அவளாலும் மாற்றிக்கொள்ள முடியவில்லை.

யார் வாழ்ந்தாலும் உலகத்தின் அன்றாடக் காரியங்கள் நடந்துதானே ஆக வேண்டும்!...

''வா ராகவா!...'' என்று புத்தகத்தை மூடி மேஜைமேல் வைத்தார் புரொபஸர்.

மௌனமாக வந்த ராகவன் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டான். முதலில் சில விநாடிகள் இருவரும் பேசவில்லை...

''விஜயம் எப்படி இருக்கிறாள்?'' என்று அவனாகவே ஆரம்பித்தான்.

''இருக்கிறாள்...'' என்று இழுத்தாற்போல சொன்னார் அவர். வேதனை மிகுந்திருந்தது அவருடைய குரலில்.

''உம்...'' என்று பெருமூச்சுவிட்டான் ராகவன். மீண்டும் சில விநாடிகள் மௌனமாகவே சென்றன.

''நீ இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறாய்? என்றார் புரொபஸர்.

'அதற்காகத்தான் உங்களிடம் வந்திருக்கிறேன். போன தடவை பல்லவ ராஜ்யத்தைப்பற்றி...

''ஓ!...'' என்று ஞாபகப்படுத்திக் கொண்டார் புரொபஸர். ''பார்த்தாயா ராகவன். நான் எல்லாவற்றையும் மறந்துவிட்டேன். நீ ஏதேதோ ஆராய்ச்சிக்குறிப்புக்கள் வேண்டுமென்று கேட்டாய் அல்லவா?...'' என்றார் அவர்.

ராகவன் தலையை அசைத்தான்.

அதற்குள் அங்கே வந்த சீதா, புரொபஸரை நோக்கி, ''அக்கா இவரை மாடிக்கு வரச் சொல்லும்படி உங்களிடம் சொல்லச் சொன்னாள்'' என்று சொல்லிவிட்டு ராகவனையும் ஒருமுறை வெறுத்தாற்போல பார்த்து விட்டு அப்பால் சென்றுவிட்டாள்.

புரொபஸர் எழுந்துவந்து திகைத்து உட்கார்ந்திருந்த ராகவனின் முதுகில் அன்புடன் தட்டினார்.

''நீ போய் முதலில் விஜயத்தைப் பார் ராகவா. உன்னால் அவளைச் சமாதானப்படுத்த முடிந்தால்...''

''என்னாலா?''-ராகவன் வியப்புடன் கூவினான்.

''ஆம் ராகவன். விஜயத்தின் மனம் எனக்குத் தெரியும். எந்த ஒரு நிகழ்ச்சி அவள் மனத்தில் ஆழமாக பதிந்திருக்கிறதோ அதை அறவே கிள்ளி எறிந்து

விட உன் ஒருவனால்தான் முடியும். மறுக்காதே...''

''நான்...நான்...''

''எனக்கு எல்லாம் தெரியும், ராகவன். விஜயம் நல்ல பெண். உன்னை விட அவளைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். நீ போய் மாடியில் அவளைப் பார்த்துப் பேசு. முடிந்தால் இன்று மாலை அவளை இப்படி எங்கேயாவது வெளியே கூட்டிப் போய்விட்டுவா...''

புரொபஸர், ராகவனை கையைப் பிடித்து அழைத்து மாடிப் படிகளில் ஏற்றிச் சென்றார்.

தான் வந்ததை மாடியிலிருந்தே கவனித்து, தன்னை வந்து சந்திக்கும்படி தங்கையிடம் சொல்லியனுப்பிய விஜயத்தின் துணிச்சலைக்கண்டு ஆச்சரியப்பட்டவாறே ராகவன் மாடியறைக்குள் நுழைந்தாள்.

நாற்காலி ஒன்றில் உட்கார்ந்திருந்தாள் விஜயம். யானைக்கலரில் அவள் உடுத்தியிருந்த பட்டுப் புடவையும், வெள்ளை ரவிக்கையும் அவளுடையதற்போதைய மனோபாவத்தை நன்கு வெளிப்படுத்தின. அவளுடைய மெலிந்த உடலுக்கு அவை பொருத்தமாகவும் இருந்தன. துயரத்தினால் வெளுத்திருந்த அந்த முகம் காலைச் சந்திரனைப்போலிருந்தது. எல்லாவற்றையும் கவனித்த ராகவனின் மனத்தில் குப்பென்று ஏதோ ஓர் உணர்ச்சி பொங்கி வடிந்தது.

(தொடரும்)

புதுமை

சந்தா விகிதம்

தனிப்பிரதி	... ...	25 ந.பை.
6-மாதச் சந்தா	... ...	ரூ. 1-50
வருடச் சந்தா	... ...	ரூ. 3-00

வெளி நாடுகளில் (இலங்கை, மலேயா) தனிப்பிரதி 30 ந.பை.

விளம்பர விகிதம்

மேலட்டை :	பின் பக்கம் மூன்று கலர்	...ரூ 250
,,	உட்பக்கம்	...ரூ. 150

உட்பக்கங்கள் :

முழுப் பக்கம்	...ரூ. 100
½ ,,	...ரூ. 60
¼ ,,	...ரூ. 30
1 கலம் 1 அங்குலம்	...ரூ. 10

ஏஜெண்டுகள் இல்லாத ஊர்களுக்கு முன்பணம் கட்டக் கூடிய ஏஜெண்டுகள் தேவை.

—நிர்வாகி.

"ஏடு தூக்கிப் பள்ளியில் இன்று பயிலும் பையனே
நாடு காக்கும் தலைவனாய் நாளை விளங்கப்போகிறான் !

—அழ. வள்ளியப்பா.

★

எதிர்கால இன்ப இந்தியாவைச்
சமைப்பதில் எங்கள் பங்கு
மகத்தானது !

★

கலைவாணி பப்ளிகேஷன்ஸ்,

(புத்தக வியாபாரிகள்)

சென்னை-10.

பார்மினியோ

"அய்க்கன்"

"பிலிப்! நீ செய்திருக்கும் முடிவு எவ்வளவு ஆபத்தானது என்பதை உணர்ந்தாயா?"

"அலெக்ஸாந்தர் உயிருக்குத் தற்செயலாக ஏதாவது தீங்கு ஏற்பட்டால் கூட, மாஸிடோனிய மக்கள் உன் உடலைக் கிழித்தெறிந்து விடுவார்கள் தெரியுமா?"

"எவ்வளவோ அனுபவமுள்ள வைத்தியர்களெல்லாம் பின்வாங்கிவிட்ட வேலையில், உன் கற்றுக்குட்டி வேலையைக் காட்டப்போகிறாயா?



—இதைப்போல் பலருடைய எதிர்ப்புகளுக்கும் அஞ்சாது, ஒரு துணிவுடனிருந்தான் பிலிப்.

"என்னுடைய வைத்தியத்தால் மன்னனுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால், என் உயிர் என்னவாகும் என்பது எனக்குத் தெரிந்ததுதான். ஆனால் என்னுடைய உயிருக்காக அஞ்சி, கிரேக்கத்திற்கு பெருவெற்றி தேடித்தரப் போகும் வீரனை, என் ஆருயிர் நண்பனை-நோய்க்குப் பலி கொடுக்கச் சொல்கிறீர்களா?" என்ற பிலிப்பின் கேள்விக்கு, மற்றவர்களால் பதில் கூற முடியவில்லை!

பாரசீக மன்னன் மூன்றும் டேரயஸை, கிரானிகஸ் நதிக்கரையில் தோற்கடித்து, மேலும் பாரசீகக் கடற்கரையோரமாக முன்னேறிக் கொண்டிருந்த அலெக்ஸாந்தருக்கு, திடீரென புதுநோய் ஒன்று கண்டது. குளிர் காய்ச்சலுடனும் ஜுரத்துடனும் போராடிய அலெக்ஸாந்தர், ஸைரீஷியாவில் தங்கினான். கிரேக்க வைத்தியர்கள் எவ்வளவோ பாடுபட்டும் நோயைக்குணப்படுத்த முடியவில்லை. நாளுக்கு நாள் மன்னனின் தேகநிலை மோசமாகிக் கொண்டிருந்தது. கடைசியில் வைத்தியர்களெல்லாம், மன்னனின்

உயிரை விதியிடம் ஒப்படைத்து விட்டு, மருந்துப்பெட்டிகளை மூடி விட்டனர்.

அவர்கள் கைவிரித்ததற்கு இன்னொரு காரணமும் உண்டு. அவர்கள் வைத்தியம் செய்து கொண்டிருக்கையில், அலெக்ஸாந்தர் இறந்துவிட்டால், அவனிடம் பேரன்பு கொண்ட மாஸிடோனிய வீரர்கள், வைத்தியரையே சந்தேகித்துக் கொன்று விடுவார்கள்!

இந்நிலையில்தான், அலெக்ஸாந்தரின் நண்பன் பிலிப்-மருத்துவத்துறையில் புதிதாக ஈடுபட்டவன்-மன்னனின் நோய் தீர்க்க முன் வந்தான்.

வைத்தியம் தொடங்கி இரண்டு நாட்கள் கழித்து, பிலிப் சில மூலிகைகளைத்தேடி, அருகிலிருந்த மலைக்குச் சென்றான்.

அங்கு திடீரென, சில பாரசீக வீரர்கள் தோன்றி, அவனைத் தூக்கிச் சென்றனர். இஸ்ஸஸ் என்னுமிடத்தில் தங்கியிருந்த பாரசீகச் சக்கரவர்த்தி டேரயஸின் முன் பிலிப் நிறுத்தப்பட்டான்.

டேரயஸின் பக்கத்திலிருந்த ஏதோ ஓர் 'ஒளிப்பிழம்பு' பிலிப்பின் கண்களை விரியச் செய்தது. செதுக்கிய பதுமைபோல், ஓர் அழகு மங்கை அங்கே வீற்றிருந்தாள்.

தலைசிறந்த சிற்பி, தந்தத்திலே செதுக்கி, நிலவின் ஒளியைப் பூசியிருக்கிறானோ என்று அதிசயித்துத் தன்னை மறந்து நின்ற கிரேக்க இளைஞனை, "வாருங்கள், கிரேக்க வைத்தியரே!" என்ற மன்னனின் குரல், திகைக்க வைத்தது. வெகு சிரமப்பட்டு, அழகியிடமிருந்து தன் கண்களைத் திருப்பி, அரசனின் முகத்தில் தேக்கினான்.

"ஆச்சரியப் படாதீர்! நீங்கள் வைத்தியர் மட்டுமல்ல, அலெக்ஸாந்தரின் நண்பர் என்பதும் எனக்குத் தெரியும்!"

"இங்கே, என்னைத் தூக்கி வந்த காரணம்?" —பசி கொண்டு, பாவையிடம் ஓடிய கண்களை அடக்கிக் கொண்டான் பிலிப்.

"இதோ, இந்தப்பெட்டியைப் பாருங்கள்!" என்று டேரயஸ், பக்கத்திலிருந்த பெட்டியைத் திறந்து, அதில் நிரம்பி தங்க நாணயங்களைக் காட்டினான்.

"ஆயிரம் டாலண்டுகள் (ஒரு டாலண்ட் 240, பவுன்களுக்கு சமம்) இவை உங்களுக்கு உரியது!"

பிலிப் திகைத்தார். "இவைகள் எப்படி எனக்கு உரியதாகும்?"

"அலெக்ஸாந்தரின் கல்லறையை

ஸைரீஷியாவில் கட்டுவதற்கு உதவி செய்தால், இந்தப் பெட்டி உங்களுக்கு உரியதாகும்"

பிலிப் திடுக்கிட்டான்: உடனே கொதித்தெழுந்தான்.

"பணத்திற்காக, என் நண்பனைக் கொல்வேனென்று எதிர்பார்க்கிறீர்களா?"

டேரயஸ் சிரித்தான்: "அவசரப்படாதீர்! பணம் மட்டும் வாழ்க்கையை இன்பமாக்காது என்பது எனக்குத் தெரியும். இந்தப் பெட்டியை, உங்கள் வீட்டுக்கு என் மகள் ஸெனோபியா கொண்டு வருவாள்!...இல்லையா மகளே?' என்று தன் பக்கத்திலிருந்தவளை நோக்கித் திரும்பினான்.

பவளப்பெட்டியைத்திறந்து முத்துக்களைக்காட்டுவதுபோல், ஸெனோபியா புன்முறுவல் பூத்தாள்.

மன்னன் பேச்சின் உட்கருத்தைப் புரிந்து கொண்ட பிலிப்பின் உடல் புல்லரித்தது.

"இந்தத் தங்கப்பாவை, எனக்கு மனைவி!"

அந்த அழகோவியத்தை மீண்டும் ஒருமுறை பார்த்தான்.

அதே சமயத்தில், கூடாரத்திற்கு வெளியில் ஒளிந்திருந்து, இன்னொரு ஜோடிக் கண்கள்—கிரேக்கக் கண்கள்——ஸெனோபியாவின் அழகில் கட்டுண்டு மயங்கியவாறு இருந்தன!

"நீங்கள் நன்றாக யோசித்து முடிவு செய்யுங்கள்! உங்களால் முடியாவிட்டாலும், வேறொருவரைச் செய்யச் சொன்னால் இந்தப் பணமும் பாவையும் அவருக்கே கொடுக்கிறேன். அலெக்ஸாந்தரின் மரணச் செய்தியை இங்கு வந்து முதலில் தெரிவிக்கும் கிரேக்கவீரனுக்கு ஸெனோபியா மனைவியாவாள்" என்று டேரயஸ் கூறியதும், பிலிப் சிந்தனையில் ஈடுபட்டான்.

மறுநாள் முடிவு கூறுவதாக பிலிப் சொன்னதும், அவனை மறுபடியும் கிரேக்கக் கூடாரத்துக்கு அனுப்பி வைத்தான் டேரயஸ்,

* * *

மறுநாள். அலெக்ஸாந்தர் படுக்கையில் உட்கார்ந்திருந்தான். அவனுடைய தளபதியும் நண்பனுமான பார்மினியோ, கையில் மருந்துக்கோப்பையுடன் வந்தான்.

"பார்மினியோ! பிலிப் கொடுத்தனுப்பிய மருந்துதானே இது? அவனிடம் மருந்து சாப்பிட்டதிலிருந்து எனக்குக் கொஞ்சம் குணமாவதுபோலிருக்கிறதே!"

"மன்னரே! பிலிப் கொடுக்கும் மருந்துகளால் உங்களுக்கு ஏதாவது

ஆபத்து ஏற்படுமோ என்று அஞ்சுகிறேன்''

அலெக்ஸாந்தர் சிரித்தான்:''நண்பா! எனக்கு இப்பொழுது விஷங் கொடுத்தால்கூட சாகமாட்டேன்: டெல்பியிலுள்ள அபோலா தெய்வம் கூறிய சோதிடத்தை மறந்துவிட்டாயா? அலெக்ஸாந்தரின் கால்களுக்கிடையில் சிக்கி, பாரசீக சாம்ராஜ்யம் அழியும் வரை, அபோலாகூட அலெக்ஸாந்தரை அழிக்க முடியாது!''

''மன்னவா!நேற்று. பிலிப் டேரயஸின் கூடாரத்திற்குச் சென்றிருந்தான்''

''என்ன உண்மையாகவா?''-திகைத்தான் அலெக்ஸாந்தர்.

''ஆமாம். பாரசீக வீரர்கள் அவனை டேரயஸிடம் தூக்கிச் சென்றார்கள், உங்களைக் கொன்றால் ஆயிரம் டாலண்டுகள் லஞ்சம் தருவதாக, டேரயஸ் பிலிப்பிடம் சொன்னான்!'

அப்பொழுது, உள்ளே நுழையவந்த பிலிப், தன் பெயர் பேச்சிலடிபடுவதைக் கேட்டதும், மறைவிலே நின்றுகொண்டான்.

அலெக்ஸாந்தர் புன்முறுவலித்தான். ''கணக்கில்லாத செல்வமுள்ள என் கஜானாவின் சாவியையே பிலிப்பிடம் பலமுறை கொடுத்திருக்கிறேனே, பார்மினியோ!''

பார்மினியோ சிறிதுநேரம் தயங்கினான்: ''பணம் மட்டுமல்ல, அரசே! பணத்தைவிட அதிக சக்தியுள்ள இன்னொரு பரிசும் தருவதாக டேரயஸ் சொன்னான்-டேரயஸின் மகள் ஸெனோபியா, பிலிப்பின் மனைவியாவாளாம்!''

''ஓகோ, ஸெனோபியா அவ்வளவு அழகானவளா?''

'பாரசீகப் பெண்கள் உலகத்திலேயே அழகானவர்களென்பது தெரியாதா, அரசே?''

''அலெக்ஸாந்தர் உயிரோடிருந்தால் ஆயிரம் ஸெனோபியாக்களைப் பரிசளிப்பான் என்பது என் நண்பனுக்குத் தெரியும்! அதிருக்கட்டும், பார்மினியோ! ஸெனோபியாவின் அழகு உனக்கு எப்படித் தெரியும்?''

முதல் நாள், மலைப்பக்கம் தற்செயலாகச்சென்ற பார்மினியோ, பிலிப்பை பாரசீக வீரர்கள் தூக்கிச்செல்வதைக் கண்டு, அவர்களைப் பின்தொடர்ந்து மறைவாகவே சென்று டேரயஸின் கூடாரத்திற்கு வெளியிலிருந்து உள்ளே நிகழ்ந்ததைக் கண்டதை, அலெக்ஸாந்தரிடம் விவரித்தான்.

''அரசே! எனக்கென்னவோ பிலிப்பிடம் நம்பிக்கையில்லை!''

''பார்மினியோ! என் நண்பர்களைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். புதிதாக வரப்போகும் அழகிய மனைவிக்காக, பழைய அருமை நண்பனைக் கொல்ல, பிலிப்புக்கு மனம் வருமா? 'உங்களை பார்மினியோ கொல்லப் போகிறான்' என்று ஒருவன் சொன்னால், நான் அதை நம்பலாமா? நம்புவேனா?...பிலிப்பிடம் சந்தேகப்படுகிறேன் என்று இனிமேல் சொல்லாதே! அவன் உண்மையிலேயே விஷம் கொடுத்தால்கூட, அவன் சினேகிதத் துரோகி என்று சொல்லி அவன் மனதைப் புண்படுத்துவதைவிட, அவன் கொடுக்கும் விஷத்தைச் சாப்பிட்டு நிம்மதியாக உயிர் விடுவேன், பார்மினியோ!''

மறைவிலிருந்து, பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த பிலிப் கண்ணீர் சொரிந்தான்.

'இத்தகைய நண்பனுக்கா நான் துரோகம் செய்ய நினைத்தேன்!'

தான் நினைத்த பாவத்தைக் கண்ணீரால் கழுவி, அலெச்ஸாந்தரிடம் மன்னிப்புக் கேட்க, உள்ளே நுழைந்தான் பிலிப்.

பக்கத்திலிருந்த மருந்தை எடுத்துச் சாப்பிடப்போனான் அலெக்ஸாந்தர்.

"சாப்பிடாதீர்கள்!—அது விஷம்!" என்று அலறினான் பார்மினியோ.

"விஷமா?"—அலெக்ஸாந்தர் திடுக்கிட்டான்.

"ஆம் அரசே! கொடிய விஷம். உதட்டில் பட்டதும் உயிரைப்போக்கி விடும்!" என்று சொல்லி அதை வாங்கிய பார்மினியோ, அதைக் குடித்து விட்டான்!

"பார்மினியோ!"—பிலிப்பும்அலெக்ஸாந்தரும் திடுக்கிட்டு அலறினார்கள்.

விஷம் சாப்பிட்ட சில விநாடிகளிலே, தள்ளாடிக் கீழே விழுந்தான் பார்மினியோ. விழிகளிலே நீலம் படர்ந்துகொண்டிருந்தது.

"கேவலம் ஆயிரம் டாலண்டுகளுக்காகவும் ஒரு பாரசீக அழகிக்காகவும் உத்தம நண்பன்—நாட்டு மன்னனைக் கொல்லச் சதி செய்த பாவி நான்! அரசே! இந்தக் கொடிய துரோகியைக்கூட நீங்கள் மன்னித்துவிடுவீர்கள்—ஆனால் என் மனச்சாட்சி என்னை ஒருபோதும் மன்னிக்காது!...பிலிப்! நீ கொடுத்த நல்ல மருந்தில் விஷத்தைக்கலந்து, பழியை உன் மீது போடத் திட்டமிட்டேன், என்னை மன்னித்துவிடு"

பார்மினியோ விழியிலே பூத்த நீலத்திரை, அதிலே பதிந்திருந்த ஸெனோபியாவின் உருவத்தை அழித்தது. அவனுடைய இதயத்திலிருந்த பெண்ணாசையை கடைசிமூச்சு வெளியேற்றியது!

தந்தி: குமரன்

டெலிபோன்: { ஆபீஸ் : 2933, மில் : 3296 }

குமரன் மில்ஸ் லிமிடெட்,

பீளமேடு, P. O.: கோயமுத்தூர்-4.

இயங்கும் கதிர்கள் 24,924

நாங்கள் உயர்தரமான 40s 60s 80s நீர். பருத்தி நூல் தயார் செய்கிறோம். ஷ நூல்கள் கோன்களிலும் கிடைக்கும்.

Managing Agents :

M/s. P. S. G. VENKATASWAMY NAIDU & CO.

'கல்யாணி, இதோ பார்த்தாயா? இந்த சண்பகமரமொன்றுதான் இந்த ஊருக்கு அழகு என்பது என் அபிப்பிராயம். சுத்தப்பட்டிக்காடு உங்கள் கிராமம் என்று கேலி செய்வாயே! இயற்கையின் எழில்கொழிக்கும் இந்த வனப்பும் பசுமையும் உங்கள் நகரத்தில் வருமா?'

"ஆமாம், போங்கள்! எப்பவோ ஏதோ கேலிக்காகப்பேசினுல் இப்படித்தான் தப்பர்த்தம் செய்துகொள்வார்

தெளிவு

'சிரோநாதன்'

களாக்கும்! அழகான ஆறும், கண்களைக்கவரும் மலைத்தொடர்களும் சூழ்ந்துள்ள இந்தக் கிராமத்தின் அருமை இப்பொழுதுதான் எனக்குப் புரிகிறது. வாழ்நாள் முழுவதும் இப்படியே இந்தச் சண்பகமரத்தடியிலேயே நாமிருவரும்...'

'ம்...சொல்லேன் நாமிருவரும்...அய்யய்ய இந்தப் பெண்களுக்குத்தான் எத்தனை வெட்கம்? உண்மையாகச் சொல்கிறேன் கல்யாணி! எனக்கு இந்த இடத்திற்கு வரும்பொழுதெல்லாம் பழைய நினைவுகள் அப்படிப் புரண்டு வருகின்றன. நான் ஐந்து வருடங்களுக்கு முன்னுல் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபொழுது நடந்த நிகழ்ச்சிகள் இன்னும் என் மனத்தில் நேற்றுத்தான் நடந்தவைபோல்'பளிச்' சிடுகின்றன'

'என்ன அந்த நிகழ்ச்சிகள்? எனக்குச் சொல்லக்கூடாதா? சண்பகமரம் எத்தனையோ கதைகள் சொல்லியதாக்கும்? எனக்கும்தான் சொல்லுங்களேன். கொஞ்ச நேரம் நிம்மதியாகக் கேட்கிறேன்'

'அய்யய்யோ, வேண்டாம் கல்யாணி, நான் ஏதோ தப்பாக உளறிவிட்டேன். அதெல்லாம் ஒன்றுமில்லை. நான் எதையோ நினைத்துக்கொண்டு என்னவோ பேசிக் கொண்டிருக்கிறேன். போன வாரத்தில் பார் கல்யாணி...'

'போங்கள். எனக்கு ஒன்றும் வேண்டாம் உங்கள் கதையும், கற்பனையும்! பேச்சை இப்படித் திடீரென்று மாற்றி

நீங்களொன்றும் எனக்குக் கூறவேண்டியதில்லை! நான் யார்? அப்படித் தெரிந்துகொள்ளக் கூடாததற்கு? உங்கள் மனைவியான எனக்கு உரிமையில்லை, உங்களோடு மனம்விட்டுப் பேசுவதற்கு!'

'பார்த்தாயா கல்யாணி? இந்தச் சின்ன விஷயத்திற்கெல்லாம் கோபித்துக் கொள்கிறாயே! நான்தான் ஒன்றுமில்லை என்று சொல்லிவிட்டேனே. என் பேரில் நம்பிக்கையில்லையா? இங்கே பார். பாரேன் இந்தக் கோபத்தில்கூட உன் முகம்...'

'ஆமாம். என் முகமும் நானும்! எனக்கு ஒன்றும் வேண்டியதில்லை உங்கள் வருணனை! ஒன்றுமில்லாமல்தான் சண்பகமரம் பழைய நினைவுகளைக் கிளறிவிட்டதாக்கும்! எனக்கு அதைச் சொல்லாதவரையில் நானும் போகப் போகிறதில்லை...!'

'நிஜமாகவே கோபமா கல்யாணி? வேண்டாம். நான் சொல்லிவிடுகிறேன். இளமையில் ஏதோ அர்த்தமில்லாமல் நடந்துபோன சுண்டைக்காய் நிகழ்ச்சியை நீ அவசியம் தெரிந்துகொள்ளத்தான் வேண்டுமா? வீணாக உன் மனம் புண்பட்டுவிட்டால்..........வேண்டாம் நான்.சொல்வதைக்கேள்...கல்யாணி... கல்யாணி...'

'ஹூ.. ஹூம், எனக்கு ஒன்றும் கோபம்வராது. நான் வருத்தப்படவே மாட்டேன், சொல்லுங்கள்......கட்டாயம் சொல்லுங்கள்...'

கல்யாணி ராமனுஜனின் கைகளைப் பற்றிக்கொண்டு ஆவலுடன் கெஞ்சினாள். உணர்ச்சி வசப்பட்டுவிட்ட ராமனுஜனால் எண்ணங்களைத் தடை செய்ய முடியவில்லை. சண்பகமரத்தடியில் நிகழ்ந்துபோன பழைய நிகழ்ச்சிகளையெல்லாம் ஒன்றுதிரட்டி உருவகித்துத் தொடர்ச்சியாகக் கூறமுற்பட்டது அவன் மனம். இளமையின் பூரிப்பில் நின்றவாறு கல்யாணிக்கு எல்லாவற்றையும் கதைபோல் கூறிக் கொண்டிருந்தான்.

* * *

அப்பொழுது நான் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தேன். சென்னை இலயோலாக் கல்லூரியில் எப்படியோ இடம்பெற்று மாணவர் விடுதியிலும் சேர்ந்துவிட்ட பிறகுதான் எனக்கு நிம்மதி கிடைத்தது. பள்ளிக்கூடத்திலிருந்து கல்லூரி புகும் படலம் இத்தனை சுலபத்தில் வெற்றிகரமாக முடிந்ததில் எனக்கு அளவில்லாத மகிழ்ச்சி ஏற்பட்டது. இந்தப்புதிய உற்சாகத்தோடு மிகவும் கவனமாகப் படித்துக்கொண்டிருந்தேன். இடையில் அரைப்பரீட்சை விடுமுறை வந்தது. மூன்றுமாத காலமாகத் தாய் தந்தையரைப் பிரிந்திருந்த வேதனை தீர அவர்களைக் கண்டுமகிழ தேர்வுகள் முடிந்த அன்றே இந்தக் கிராமத்திற்குப் பயணமாகிவிட்டேன். அப்பொழுதுதான் நடந்தது அந்தச் சம்பவம்.

இளமையின் ஜீவத்துடிப்பு என்னுள் அப்பொழுது நிறைந்திருந்தது என்றுதான் சொல்லவேண்டும். அப்படியொன்றும் வனக்கு வயதும் அதிகமாகிவிடவில்லை. பதினேழுவயதுதான் நடந்துகொண்டிருந்தது. இருந்தாலும் பள்ளியிலிருந்து விடுதலைபெற்றுக் கல்லூரிப்படி மிதித்தவுடனேயே பெரிய மனிதனாகிவிட்ட பெருமிதம் என் இரத்தத்தோடு இரத்தமாகக் கலந்துவிட்டிருந்தது. துள்ளு நடைபோட்டுக் கொண்டு ஊருக்குள் நுழைந்தேன். அமோகமான வரவேற்பு எனக்கு அங்கே காத்திருந்தது. ஊருக்கு முதல் வனாக நான்தான் கல்லூரியில் நுழைந்திருந்தேன். அந்த அளவில் ஊரில் உள்ள அனைவரும் என்னைக் கொண்டாடினார்கள். பெரிய மேதையின் சம அளவில் என்னைவைத்துப் புகழ்ந்தார்கள்.

ஒருவழியாக இந்தச் சந்தடியெல்லாம் ஓய்ந்த பிறகு அன்று மாலை வாசற்புறத்திற்கு வந்தேன். அங்கேதான் அந்த அதிசயம் காத்திருந்தது. உருட்டி வெருட்டிவிழிக்கும் இருகண்களை எதிர்வீட்டு சன்னலில் கண்டேன். எனக்கே ஆச்சரியமாக இருந்தது. இதுவரை ஒருவருமே குடிவராத அந்த வீட்டில் ஒரு புதிய பெண்ணைக்கண்டபொழுதில் முதலில் எனக்குக்கொஞ்சம் கூச்சம்தான் ஏற்பட்டது. அவளோ வைத்தவிழி வாங்காமல் என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள். நான் கல்லூரி மாணவன் என்ற உண்மையை அவளும் தெரிந்து கொண்டாள்

போதும்! நானும் துணிவு பெற்றவனாக அவளைத் தைரியமாக ஏறிட்டு நோக்கினேன். சில வினாடிகள் தான்! தந்தப் பதுமை போன்று சிலையாகிவிட்டிருந்த அந்த யுவதி சட்டென்று தன் கண்களைத் தாழ்த்திக்கொண்டு வெட்கமேலீட்டினால் உள்ளே ஓடிவிட்டாள். எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. என்னுடைய ஆண்மையின் வெற்றியை நானே மெச்சிக் கொண்டேன்.

மறு நாளிலிருந்து என்னுடைய வாசஸ்தலம் வாசற் பக்கத்து அறையாய் விட்டது.

சாப்பிடும், தூங்கும் நேரங்களைத் தவிர அநேகமாக மற்றப் பொழுதிலெல்லாம் என் கண்கள் எதிர் வீட்டு சன்னலையே துழாவும். அடிக்கடி அங்கே தோன்றி மறையும் இரு கயல் விழிகளில் என் உள்ளம் இழுக்கப்பட்டு படாத பாடுபட்டது. "மாலை நேரங்களில்கூட ஏன் வீட்டிலேயே அடைந்து கிடக்கிறாய்? அதிகமாகப்

படித்தால் உடம்பு கெட்டுப் போகும். போய் ஆற்றங்கரைப் பக்கத்தில் காற்று வாங்கிவரக்கூடாதா?'' என்று என் அன்னை அன்பாகக் கடிந்துகொள்ள ஆரம்பிக்கவே மாலை நேரங்களில் ஆற்றங்கரைப் பக்கம் செல்லலானேன். இரண்டு மூன்று நாட்கள் நான் மட்டும்தான் இந்த இடத்தில் அமர்ந்து அவளைப்பற்றி என்னவெல்லாமோ கற்பனை செய்துகொண்டிருந்தேன். அவள் யார்? எப்பொழுது அந்த ஊருக்கு வந்தார்கள் என்பதையெல்லாம் பற்றிய விவரங்களை அறிந்துகொள்ள என் மனம் துடித்தது ஆனால் தைரியமாக யாரிடம் அதைப்பற்றிக் கேட்க எனக்குக் கூச்சமாக இருந்தது.

அன்று காலையில் வாசற்புறத்துத் தோட்டத்தில் ஏதோ விதை தெளித்துக் கொண்டிருந்தார் என் தந்தை. அவருக்கு அருகில் நின்று கவனிப்பவன் போல் எதிர் வீட்டு சன்னலைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது போலீஸ் உடுப்பில் ஒரு மனிதர் அந்த வீட்டிலிருந்து வெளிப்பட்டார். சட்டென்று அவரை நிமிர்ந்து நோக்கி முறுவலித்த என் தந்தை அவர் தலை மறைந்ததும், 'பார்த்தாயா, ஊரில் ஒருத்தரும் குடிபுகாத எதிர்மனைக்கட்டில் குடி வந்திருக்கும் மனிதரை! ஹூம்! அவர் ஒரு போலீஸ்புலி. அதனால்தான் இத்தனை தைரியமாக அந்த வீட்டில் குடும்பம் நடத்துகிறார்' என்றார். அங்குகுடிவருபவர்களுடைய குழந்தைகளில் ஒன்று கட்டாயம் மரித்துவிடுகிறது' என்பதைத்தான் என் தந்தை நினைத்துப் பேசுகிறார் என்பதைப்புரிந்துகொண்ட நான், 'ஏன் அப்பா, நீங்களொன்றும் அவரை எச்சரிக்கவில்லையா?' என்று கவலையோடு விசாரித்தேன். 'ஹூம். நான் என்ன சொல்லி என்ன? ஊரே ஒரு முகமாகச் சொல்லிய பொழுதும் அவர் கட்டாயமாக அந்த வீட்டிற்குக் குடி வந்துவிட்டார். வந்து இரண்டு மாதங்களாகியும் மனிதர் நன்றாகத்

தானிருக்கிறார். மனைவியும், ஒரு பெண்ணுமாக அவர்களுக்குக் குறை ஒன்றையும் காணவில்லை. மிகவும் நெஞ்சழுத்தக்காரர்; என்று என் தந்தை தன் வேலைகளுக்கு நடுவே கூறினார். எனக்கு அதற்குமேல் எப்படிப்பேச்சை வளர்ப்பது என்று தெரியவில்லை. கொஞ்ச நேரம் தயங்கித் தயங்கி எதையோமென்று விழுங்கிய என்னையே பார்த்துக்கொண்டிருந்த என் தந்தை திடீரென்று 'இந்தக் காலத்துப் போக்கைத் தெளிவாகக் காண்பிக்க நீ ஒருவன், அந்தப் பெண் ஒருத்தி இருவரே போதும்' என்று கூறிவைத்தார். என் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தன. 'ஏன் அப்பா அப்படிக் கூறுகிறீர்கள்?'என்று குழப்பத்தோடு வினவினேன். 'பின் என்ன? அந்தக் காலத்திலெல்லாம் ஹைஸ்கூல் படிப்புக்கே தாளம் போடவேண்டியிருந்தது. நம் ஊரிலேயே ஒருத்தரும் செய்யாத வழக்கமாக உன் மாமாவின் பிடிவாதத்தினால் உன்னைக் கல்லூரியில் சேர்த்தேன். அதுதான் போகட்டும். ஆண்பிள்ளை படித்தால் தான் வருங்காலத்தில் பிழைப்பு என்றாகிவிட்டது. பெண்ணுக்கு என்ன என்று கேட்கிறேன். எங்கள் காலத்திலெல்லாம் இரண்டு வகுப்புகள் படித்த பெண்களே அபூர்வம். தடங்கலில்லாமல் புத்தகம் படிக்கக்கூடிய பெண்களே அநேகமாக இல்லையென்று சொல்லிவிடலாம். இப்பொழுது ஏதோ சுமாராக ஐந்தாவது, ஆறாவது வரை பெண்கள் படிக்கிறார்கள். எல்லாவற்றையும் மிஞ்சி நம் டவுன் பள்ளியில் எதிர் வீட்டுப் பெண் ஐந்தாவது பாரத்தில் படிக்கிறாள் என்றால்... அதுதான் உலகம் வெகுவாக மாறிவிட்டது என்கிறேன்' என்று குட்டிப் பிரசங்கம் பண்ணிய என் தந்தை ஏதோ எடுத்துவர வீட்டிற்குள் போய்விட்டார். எனக்கு அந்தச் செய்தி மகிழ்ச்சியூட்டக்கூடியதாக இருந்தது. அழகு, இளமை எல்லா அம்சங்களுமே பொருந்திய அந்தப் பெண்ணிடம் என் மனம் கொஞ்சம்

கொஞ்சமாக ஈடுபட ஆரம்பித்தது.

விடுமுறை முடிய இன்னும் ஐந்தாறு நாட்கள் தான் எஞ்சியிருந்தன. எனக்கு அளவில்லாத மனக்குறை. மறுபடி போகவேண்டுமே என்ற வெறுப்பு மேலிட்டுவிட்டது. அன்றும் வழக்கம் போல மாலைவேளையில் ஆற்றங் கரைப்பக்கம் போனபோழுது அவ ளும் அங்கு வந்திருந்தாள். கண்களை அகல விரித்துப் பார்த்தேன். அவளே தான். ஒயில் நடை போட்டுக்கொண்டு குடத்திலிருந்து ஆற்று நீர் மொண்டு கொண்டிருந்தாள். என் உள்ளம் பர பரத்தது. ஆனால் கால்கள் அசைய வில்லை. சண்பக மரத்தடியிலேயே சிலையாகக் குத்திட்டு நின்று அவளையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந் தேன். தண்ணீர் மொண்டு திரும்பும் நேரத்தில் சண்பக மரத்தைக் கடந்து செல்லும் பொழுது அவள் கண்களை வெட்டி என்னை ஒருமுறை ஒரு முறுவ லுடன் நோக்கினாள். என் மனம் எல்லையில்லா வானில் தாவிப் பறக்க வாரம்பித்து விட்டது. அன்றிலிருந்து அந்த ஐந்தாறு தினங்களும் என் காதல் பசிக்குச் சரியான வேட்டை தான். அவள் கண்கள் வீச்சுக்காக மணிக்கணக்கில் காற்று வாங்கினேன். கையிலே விரித்தபடி புத்தகம் கிடப் பதை கவனிப்பவர்கள் பிள்ளை படிக் கிறது என்றுதான் எண்ணிக் கொண் டார்கள். ஏன். என்னுடைய தாயாரே என் படிப்பை உயர்வாகத்தான் எடை போட்டிருந்தார்கள். நானோ எதிர் வீட்டு அழகியின் கண்களில் காதல் தேம்படித்துக் கொண்டிருந்தேன்.

நிலைமை இப்படியே அதிகநாள் நீடிக் கத் தடைபோல் கல்லூரி திறக்கும் அந்த நாள் வந்தது. அதற்கு முதல் நாளே புத்தக மூட்டை முடிச்சுகளு டன் பலவந்தமாக என் உடலைச் சென்னைக்கு இழுத்து சென்றேன். படிப் பில் முதலிலிருந்த ஜோரைப்போல் துளிக்கூட மனம் ஈடுபட மறுத்தது. பகலும், இரவுமாய் எப்பொழுதும் சண்பகமரம் என் நினைவில் வந்து நிற் கும். வகுப்பறைகளில் பாடம் நடந்து கொண்டிருக்கும் பொழுது நான் இன்ப மான அந்த நாட்களிலொன்றை நினைவுபடுத்தி சிரித்துக்கொள்ளும் பொழுதெல்லாம் என்னுடைய புத்தி ஸ்வாதீனத்தைப் பற்றி ஆசிரியர் களுக்குச் சந்தேகம் கிளம்பிவிடும். உடனே ஏதாவது ஒரு கேள்விச் சரத்தை எய்துவார், என்னுடைய பரிதாபமான இரக்கப்பட வேண்டிய மௌன நிலையைக் கண்டு வகுப்பறை முழுவதும் 'கலீர்' என்ற சிரிப்பொலி யில் விநாடிக்காலம் நிறைந்து நிற்கும்.

நான் அதற்கெல்லாம் கவலைப்பட வில்லை. இரண்டு மூன்று நாட்கள் சேர்ந்தாற்போல் விடுமுறை கிடைத் தால் போதும், கிராமத்திற்குப் பயண மாகிவிடுவேன். அங்கே அந்த சமயங் களிலெல்லாம் அத்தனை நாட்களும் முகம் கூம்பியிருக்கும். அவளுடைய இதழ்க்கடையில் நான் மலர்ச்சியைக் காணத் தவறுவதேயில்லை. எல்லாம் எங்கள் கண்கள் பாஷையிலேயே நடந்துகொண்டிருந்தன. ஆரம்பத்தி லெல்லாம் என் தந்தைக்கு என் னுடைய இந்த திடீர் பயணங்களுக்கு அர்த்தமே விளங்கவில்லை. ஏன் கடைசி வரையில் ஒருவருக்குமே அது தெரிய வில்லை! என்னை மாசுபடுத்திப் பார்க்க அவர்களுக்கு எண்ணம் தோன்றினா லல்லவோ காரணங்களைக் குடைய அவசியம் ஏற்படும்! என்னை நல்ல பிள்ளையாக மதித்த என் தந்தையும் சரி, எப்பொழுதும் என்னைத் தன் அருகிலேயே காணவேண்டுமென்று விரும்பிய என் அன்னையும் சரி ஒன்றை யும் பற்றி என்னைக் கேட்கவில்லை! ஏன் நானும் அப்படிக் குற்றமுள்ள வனாக நடந்துகொள்ளவில்லை! ஏதோ இளமையின் உணர்ச்சிகளுக்குக்கொஞ் சம் நெகிழ்ந்து கொடுத்தேன்; அவ்வ ளவுதான்! சலசலப்பு என் மனதில் கொஞ்சநாட்கள் பிடித்து ஆட்டி வைத்தது.

வழக்கம்போல் ஐந்து நாட்கள் விடு முறை தொடர்ந்து வந்தபோது கிரா மத்திற்குப் போயிருந்தேன். அன்று என்னை ஒருவரும் எதிர்பார்க்கவில்லை. எதிர்பாராமல் நான் எல்லோர் முன் னும் போய்நின்றபொழுது ஆச்சரியத் தில் ஸ்தம்பித்துவிட்டனர் அனைவரும். ஆளுக்கொருவிதமாகக்கேள்விகள் கேட் டுக்குடைந்த அனைவரையும் சமாளித் துக்கொண்டு ஆற்றங்கரைக்கு விரைந் தேன். நான் வீட்டிற்குள் நுழையும்

பொழுதே கவனித்துவிட்ட அந்தப் பெண் பல நாட்களாக வெளியே எடுக்காது கருத்துப்போயிருந்த குடத்தைத் தேய்த்து மெருகு கொடுத்துக்கொண்டு ஆற்றங்கரையில் காத்திருந்தாள். இலைச்சருகுகள்மீது துடிதுடிப்புடன் நான் நெருங்கிய சப்தத்தைக்கேட்டு என்னையே வைத்தவிழிவாங்காமல் பார்த்துக்கொண்டிருந்த அவள் கையில் பிடித்திருந்த குடத்தை மறந்துவிட்டாள். ஆற்றில் வெள்ளம் நிறைந்திருந்தது. நானும் நிலைமையைச் சற்று மறந்து 'ஏது இப்படித் திடீர் விஜயம்?' என்று கேட்ட அவள் கண்கள் குறிப்பை அறிந்துகொண்டு முறுவலித்த சமயம் 'அய்யய்யோ குடம்!' என்று க்ரீச்சிட்டு அவள் அலறிய குரல் கேட்டுத் திடுக்கிட்டேன். சட்டென்று அவளுடைய உதவிக்குப் போகுமுன் வெள்ளத்தில் மிதந்துமிதந்து அப்பால் போய்க்கொண்டிருந்த குடத்தை எட்டிப்பிடிக்கமுயன்ற அவள் நிலை பெயர்ந்து தண்ணீரில் வீழ்ந்துவிட்டாள். கிட்டத்தில்தான் சுழல்! அதை நெருங்கி ஆறு அவளையும் குடத்தோடு அடித்துக்கொண்டு போவதைக்கண்டு என் மனம் பயங்கரமாக அலறியது. மறுகணம் ஒன்றும்புரியாமல் ஆற்று வெள்ளத்தில் குதித்துவிட்டேன். மெதுவாக அவளை ஆற்று வெள்ளத்தில் மூழ்கிவிடாமல் கைகளில் தாங்கிக் கொண்டு கரை சேர்த்துவிட்டு மீண்டும் தண்ணீரில் குதித்து சுழலில் அகப்பட்டு வட்டமிட்டுக்கொண்டிருந்த குடத்தையும் மீட்டுவந்தேன். உடுப்புகளெல்லாம் நனைந்து பயத்தில் நடுங்கிக்கொண்டிருந்த அவளை நெருங்கி எப்படிப்பேசுவது என்று புரியாமலே தவித்துக் கொண்டிருந்தேன். நிலைமையை அவள்தான் சமாளித்தாள். 'வாருங்கள் போகலாம். நல்லவேளையில் வந்து காப்பாற்றினீர்கள். நீங்களும் இல்லையென்ருல் இந்தப் பிராந்தியத்திலேயே கேட்பாரில்லாமல் நான் ஆற்ருேடு போயிருக்கவேண்டியதுதான்!' குயிலினும் இனிய குரலில் அவள் பேசிய மொழிகள் என் காதுகளில் பட்டு ரீங்கரித்துக் கொண்டிருந்தன. முன்னை அவள் செல்ல அவளைத் தொடர்ந்து நானும் சென்றேன்.

விஷயத்தை அறிந்தபொழுது ஊரில் ஒரே பரபரப்பு. எங்கே பார்த்தாலும் அந்த நிகழ்ச்சியைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். என்னைப்பாராட்டாதவர் ஒருவருமில்லை. அந்தப் போலீஸ் அதிகாரி நேராக எங்கள் வீட்டிற்குவந்து என்னை முதுகில்தட்டி உற்சாகப்படுத்தினுர். அவர் சென்ற பிறகு என் தந்தையும் பக்கத்து வீட்டுக்காரர்களும் பேசிக்கொண்டது தெளிவாக எனக்குக்கேட்டது. 'பார்த்தீர்களா, நாம் சொல்லிக் கேட்காமல் போனுரே அந்த மனிதர். அந்த வீட்டுச் சாபத்தின் விளைவுதான் இது. இன்று என் மகன் மாத்திரம் இல்லாவிட்டால் என்ன ஆகியிருக்கும்!' என்று விளக்கிக்கொண்டிருந்தார் என் தந்தை. சூழ்நிலையின் கோளாறு அவர்களையெல்லாம் அப்படித்தான் ஒருமுகமாக எண்ணத்தூண்டியது. அடுத்த இரண்டு நாட்கள் அவள் நான் ஆற்றங்கரையில் காணமுடியவில்லை. அன்று அவளைக் காப்பாற்றியதுதான் எங்களுடைய கடைசிச் சந்திப்பு. விடுமுறை முடிந்துவிட்ட காரணத்தால் நான் மீண்டும் சென்னைக்குத் திரும்பினேன்.

எப்படியோ இடையிலிருந்து நாட்களைக் கழித்துவிட்டுக் கோடை விடுமுறையில் கிராமத்திற்குத் திரும்பினேன். எனக்கு ஏமாற்றம்தான் காத்திருந்தது. எதிர்வீடு பழைய நிலையிலேயே பாழடைந்து கிடைந்து. அதன் ஜீவஒளி மறைந்துவிட்டது. தந்தையை எதிர்வீட்டு மனிதர்களைப் பற்றி விசாரித்தேன். அன்று நிகழ்ந்த அந்தச் சம்பவத்திற்குப் பிறகு ஊரில் அனைவரும் ஒருமுகமாக எடுத்துக் கூறியதின்பேரில் அந்தப்போலீஸ் அதிகாரி வேறு ஊருக்கு மாற்றல் வாங்கிக்கொண்டு போய்விட்டதாகக் கூறினுர். அவர் எனக்கு உலகமே வெறிச்சோடிவிட்டது, ஊரில் தங்கவே விரும்பவில்லை. சண்பகமரத்தைப் பார்க்கும் பொழுதெல்லாம் கண்கள் இரத்தக் கண்ணீரைச் சிந்தின. சில நாட்களுக்கு மனஅமைதியை இழந்துதவித்தேன். தனிமையில் சிந்தித்துசிந்தித்து மேலும் மேலும் என் எண்ணங்கள் குழம்பியது. முடிவில் ஒருநாள் பத்திரிகையைப் புரட்டிக்கொண்டிருந்த நான் அங்கே வெளியிடப்பட்டிருந்த புகைப்

படத்தைக் கண்ணுற்றபொழுது குதித் தெழுந்தேன். ஆம். அவள்தான்! அவளேதான் திருமணக்கோலத்தில் ஒரு ஆடவனுடன் மகிழ்ச்சிபொலியக் காட்சியளித்துக் கொண்டிருந்தாள். கீழே தெளிவாக அவர்கள் விலாசம் கொடுக்கப்பட்டிருந்தது. என் கற்பனை துகள் துகளாகியது சிந்தனைகள் தெளிந்தன. எண்ணக் கோட்டைகள் தவிடுபொடியாயின.

அந்தப் பேதமையை நினைத்துப் பார்த்தால் இப்பொழுதுகூட சிரிக்கத் தோன்றுகிறது. ஆனால் காலப்போக்கில் இப்பொழுது எல்லாம் நிறைவாகி இதோ...கல்யாணி, உன் எதிரில் முழு மனிதனாக உன் அன்பிற்காக ஏங்கி நிற்கிறேன்...என்னைப்பார்.. கல்யாணி!

* * *

ராமனுதன் தன் கதையைக்கூறி பெருமூச்சு விட்டான். உணர்ச்சிக் கொந்தளிப்பில் துடித்துக்கொண்டிருந்த அவன் சாதாரண நிலையை அடையக் கொஞ்ச நேரம் பிடித்தது. எங்கேயோ பார்த்துக்கொண்டிருந்த கல்யாணியின் மோவாயைத் திருப்பி 'இதோ பார் கல்யாணி, என்மேல் கோபமா? நான்தான் அப்பொழுதே சொன்னேனே? வேண்டாமென்றால் பிடிவாதம் பிடித்தாய்! ஆனால்... ஆனல்...இப்பொழுது எல்லாவற்றையும் உன்னிடம் கூறியபிறகு எனக்கு எத்தனை ஆறுதல் தெரியுமா...!'

'கலீர்' என்று சிரித்தாள் கல்யாணி. 'எனக்குக் கோபமில்லை. ஒன்றுமில்லை. நீங்கள் கூறிய கதையில் அப்படியே மெய்மறந்துவிட்டேன்'' என்று கூறியவள் அவன் முகத்தை ஏறிட்டு நோக்கினுள். முத்துமுத்தாக அங்கே நிரம்பியிருந்த வியர்வை முத்துக்களை அவள் கை தானாகவே புடவைத்தலைப்பினால் துடைத்து.அவள் தளிர்க்கரங்களை அப்படியே பற்றித் தழுவிக்கொண்டான் ராமனுதன். வானத்தில் வெகுதூரம் எழும்பிவிட்ட நிலா தன் பால்கிரகங்களை அள்ளி வீசிக்கொண்டிருந்தது. தெளிவுபெற்ற அவன் மனம் கல்யாணியின் இதய வீணைமீட்டும் இன்பநாதத்துடன் இழைந்துநின்றது. வீசும் தென்றலில் சண்பகமரம் அசைந்து அசைந்து புஷ்பங்களை அவர்கள்மீது பொழிந்துகொண்டிருந்தது.

புது வருஷ பஞ்சாங்கத்துலே என்ன போட்டிருக்கு?

அதேதான்! வருஷம், மாசம், தேதி, கிழமை, நட்சத்திரம், திதி... கொஞ்சம் மாறி இருக்கு! அவ்வளவுதான்!

மனைவி: நேற்று ராத்திரி நீங்க வாங்கி வந்த கூந்தல் தைலத்தைத் தேய்த்தேன்!

கணவன்: !!!...!

துயரக் குமிழி!

ஒரு குட்டிச்சுவர்!

அதன் கடந்தகால வாழ்க்கை, வெகு ரம்மியமாக இருந்தது. ஒருகாலத்தில், அது, மாளிகையைத் தாங்கும் மமதையோடும், பெருமையோடும், நெடுஞ் சுவராக வாழ்ந்ததுண்டு! அந்தச் சுவரை, பொங்கல் புதுநாளில், வெள்ளை நீலம் முதலிய வண்ணச்சுண்ணும்பால் அலங்கரித்ததை நினைத்தால்...! மணமாகவேண்டிய பருவப்பெண்ணை, மாப்பிள்ளை வீட்டார் பெண்பார்க்க வரும்போது அலங்காரம் செய்வதுபோல்... என்ன அலங்காரம்! எவ்வளவு அலங்காரம்!

இன்று, அது ஒரு வெறும் குட்டிச் சுவர்!

என்ன மாற்றம்! எவ்வளவு வேற்றுமை!

அன்று, சுண்ணும்பு பூசப்பட்டு சோபிதமாகத் திகழ்ந்த நெடுஞ்சுவர்! மாஜி அழகியான கிழவி, கடந்துபோன தன் இளமைப் பருவத்தின் வளமைகளையெல்லாம் எண்ணிப் பார்ப்பது போல, அதெல்லாம் இப்பொழுது காலதேவன் ஜீரணித்துவிட்ட கனவு-வெறுங்கனவு! நோயும், நலிவும், சிதைவும், மனிதனுக்கு மட்டுமல்ல, உலகப் பொருள் அனைத்திற்கும்தான் என்பது போல், ஏறெடுத்தும் பார்ப்பவர்களின்றி ஏங்கி நிற்கும் குட்டிச் சுவர்!

வெய்யிலில் காய்ந்து காய்ந்து, சுவரெங்கும் வெடிப்புகள். மழையில் நனைந்து நனைந்து, கரைந்து குறுகிவிட்டது. மேய்ச்சலுக்குப் போய்வரும் எருமைமாடு, எப்பொழுதாவதொரு சமயம் அந்தக் குட்டிச்சுவற்றில் தன் உடலை உரசித்தேய்த்துக் கொள்ளும். இடிந்து மடிந்து மண்ணுகி, மண்ணுன மூலப்பொருள்களுடன் ஐக்கியமாகிவிடத் துடித்து மௌனத் தவயோகம் செய்வதுபோல் நின்று கொண்டிருந்தது அந்தக் குட்டிச்சுவர்.

அதற்கு ஒரு நண்பன்; தன் சக்திக்கு மீறி உண்மையாக உழைத்த நண்பன்-கழுதை;

முதுமையின் முதிர்ச்சியாலும், பொதி சுமந்த காரணத்தாலும், முழங்காலிலும், முதுகிலும், விலாப்புறத்திலும் ரோமம் உதிர்ந்து காய்ப்புக்காய்த்துக்காணப்பட்டது. இந்தக் கழுதைக்கு, அன்று, நன்ருக உழைக்கத் திராணி இருந்தது. ஒரு சலவைத் தொழிலாளியிடம், தொண்டுசெய்தது. இன்று, இதனுல் தொண்டுசெய்ய இயலவில்லை. அடித்துத் துரத்திவிட்டான்; நன்றி கெட்டவன்!

'ஜீவகாருண்யச் சங்கம், மிருக ரட்சகக் கழகங்கள்' என்று, எத்தனை—எத்தனையோ இருக்கத்தான் செய்கின்றன. அவைகளினுல், மிருகங்களுக்கென்ன லாபம்? மனிதர்களுக்குத் தானே, லாபம்!

பகலெல்லாம் அந்தக் கழுதை, கட்டாந்தரைப் பொருகள்ளான காகிதம். குப்பைகூளம் இவற்றை மேய்ந்துவிட்டு இரவில், குட்டிச்சுவரருகில்தான் வாசம் செய்யும்; ஒவ்வொரு சமயம் மேய்ச்சலுக்குப் போகாமல், அங்கேயே தங்கி விடுவதும் உண்டு.

கழுதையும், குட்டிச்சுவரும், இணைந்திருந்தன நட்பில்; இணைபிரியாதிருந்தன—வாழ்க்கையில்! நாட்கள் விரைந்தன; ஓரிரு வருடங்கள் புரண்டன.

குட்டிச்சுவரின் மௌனத்தவயோகம் பலன்தரும் நாள் பூக்கப்போகிறது. குட்டிச்சுவற்றருகில், யாரோ நாலைந்து பேர், ஏதோ பேசிக்கொண்டிருந்தனர்; பிறகு, இருவர் அந்த இடத்தை அளந்தனர்; ஏட்டில், ஒருவர், ஏதோ எழுதிக் கொண்டார். அந்த இடத்தில், ஒரு பெரிய பங்களாகட்ட 'பிளான்' போடுகின்ருர்கள் என்பது

"புதுமைச்சித்தன்"

கழுதைக்குத் தெரியாது; தெரிந்தால், கழுதையின் பழுதடைந்த விழிகள் நீரைச்சிந்தும்.

அது, எங்கோ மேய்ச்சலுக்குப் போயிருந்த சமயம், குட்டிச்சுவரை இடித்துத் தரைமட்டமாக்கி விட்டார்கள். குட்டிச்சுவர், மூலப் பொருளான மண்ணுடன் ஐக்கியமாகி விட்டது. அந்தக் குட்டிச்சுவர், முதலில் மண்ணாக இருந்து, பின் மாளிகையின் நெடுஞ்சுவராகி, பிறகு குட்டிச்சுவராகி, திரும்பவும் மண்ணாகிவிட்டது. மீண்டும், மாளிகையின் நெடுஞ்சுவராகப் புனர்ஜென்மம் பெறப்போகிறது. எத்தனையெத்தனை ஜென்மங்கள்! மனிதப் பிறவியை, 'புல்லாகிப் பூண்டாகிப் புழுவாகி' என்று பாடுவதில்தான் எவ்வளவு உண்மை!

திரும்பி வந்துபார்த்தது, கழுதை. குட்டிச்சுவரைக் காணவில்லை. நட்பில் ஒரு மகத்தான இழப்பு! என்ன துரதிர்ஷ்டம்! அது, எல்லையற்றதுயரில் ஆழ்ந்தது. எங்கு பார்த்தாலும், எதைப் பார்த்தாலும், அதற்கு வெறுப்பாகவே பட்டது. அன்று மேய்ச்சலுக்குக்கூட போகவில்லை; எப்படிப் பசிக்கும்? நண்பனை இழந்த துயர், சாமான்யமானதா? சுமக்கமுடியாத பொதியையும், பாரத்தையும், தன்மீது சுமத்தப்பட்டபோது கூட, துக்கமோ, துயரமோ கொள்ளாத அந்தக்கழுதை, அன்றுதான் உண்மையாகத் துக்கத்தில் ஆழ்ந்தது!

அது, அழுதது; மனிதன் சகுனமாக உபயோகித்துக் கொண்டாலும் கொள்ளட்டுமென்று, வாய்விட்டுக் கத்தி அழுதது! துயரச்சுமையுடன், என்னென்னவோ எண்ணிக்கொண்டு, எங்கோ சென்றது, அது.

பல நாட்கள் விரைந்தன.

அன்றொரு நாள்; ஜனசந்தடி அதிகமான இடத்தில், நான் நடந்துகொண்டிருந்தேன்; மாலை நேரம்; அவசர இயக்கமும், ஆரவாரமும் மிகுந்த நகரங்களுக்கே உரித்தான பரபரப்பின் உச்சகட்ட நேரம். மனித மந்தையின் பரபரப்பும், 'நடந்துகொண்டிருக்கும்போதே மரணம் சம்பவிக்கலாம்' என்ற உண்மைக்கு நிதர்சனப் பிரமாணம்போல் மோட்டார் வாகனங்களின் மின்னல்வேக ஓட்டமும், சர்வ சாதாரணமாக இருந்தன. பெட்ரோல்

"தமிழ் வருஷம் என்னிக்குப் பிறக்கிறது?"

"சித்திரை மாசம் ஒண்ணாம் தேதி!"

வாடையும், புழுதித்துகளும் கலந்த நெடிநாற்றம், பரந்திருந்தது. இவைகளினின்றும் ஒதுங்கி, நகர அவசரச் சுழிப்புக்குள் மூழ்காமல், நான் நடந்துகொண்டிருந்தேன்.

"கிரீச்" என்ற ஒலி.

திரும்பிப்பார்த்தேன்; மின்னல் வேகத்தில் வந்த ஒரு பெட்ரோல் நாகரீக வாகனம், எதிரில்வந்த ஏதோ ஒன்றை அறைத்துக்கொன்று இரத்தச் சகதியில் தசைக்கூழாக்கிவிட்டு நின்றது. அதைச்சுற்றி, உடனே கும்பல் கூடிவிட்டது; கூட்டத்தில் புகுந்து சென்று பார்த்தேன்.

லாரியின் கனத்த சக்கரங்களுக்கிடையில், ஒரு கழுதை!

அடையாளம் தெரியாதபடி, அந்தக் கழுதையின் அங்கங்கள் சிதையுண்டிருந்தன. இது, எந்தக் கழுதை? குட்டிச்சுவரின் நண்பனோ! அதுவாகத்தான் இருக்கவேண்டும்!

நண்பனை இழந்துவிட்ட துயரில், உலக வாழ்க்கையில் வெறுப்படைந்து, தானும் செத்துவிட வேண்டுமென்னும் பிரக்ஞைத் தெளிவுடன், அது, தற்கொலை செய்துகொண்டதா? அல்லது, தற்செயலாக நேர்ந்த விபத்தா?

என்னால் தீர்மானிக்க இயலவில்லை; எனினும், என்மனத்தடாகத்தில் துயரக்குமிழி ஒன்று, ஏனோ தோன்றி மறைந்தது!



மஞேஹரமான அலங்காரம்

மயில், குயில் உருவங்களால் அலங்கரிக்கப்பட்ட பார்டருடன்கூடிய 'பீலோ'வை உடுத்திக்கொண்ட ராஜஸ்தானின் இந்த அழகிய இளமங்கை தண்ணீர் எடுத்துவரச் செல்லுகிருள். அவள் புடவையைப் பார்த்து கிராமத்தினர் சகலரும் பரவசமடைகின்றனர்.

கைத்தறிகள்

நம் நாட்டின் பொக்கிஷம்

DA 61/749

பாட்டு பட்ட பாடு

சி. இரா. சாரநாத்

கனகசபை முதலியார் அவர்கள் சிறந்த பக்திமான் அத்தோடு திருக்குறள் மீது நல்ல பற்றுள்ளவர். எப்படியோ அந்த பற்று ஏற்பட்டுவிட்டது, அதன் காரணம் அவருக்கே தெரியாது. இதைத்தான் பூர்வ ஜென்மத்தில் செய்த புண்ணியம் என்பார்களோ என்னவோ? அவரது குறள் பற்றை விளக்க ஒரே சான்று போதும். அது...

கனகசபை முதலியார் தினம் காலையில் ஐந்து மணிக்கெல்லாம் எழுந்து ஸ்னானபானங்களை முடித்துக்கொண்டு பூஜையில் அமருவார். பூஜை புனஸ்காரங்கள் முடிந்ததும் திருக்குறளை விரித்துவைத்து சுவாமிமுன் ஒரு அதிகாரத்தை உரையுடன் படிப்பார். ராமாயண, பாரதங்களைப் பாராயணம் செய்வதுபோல் குறளைப் பாராயணம் செய்துவருவதே போதுமே, அவரது குறள் பக்திக்குச் சான்று பகர!

கனகசபைக்கு முதலில் குறள் மீது உண்டான பக்தி வளர்ந்து பின்னர் குறள் பிறந்த குமரித்தமிழ் மீது பற்றிப் படர்ந்தது. அதன் பயனாகத் தன் ஒரே மகன் வளவனை மதுரைச் செந்தமிழ்க் கல்லூரியில் சேர்த்து வித்துவானுக்குப் படிக்கவைத்தார்.

இது அவரது மனைவி மரகதத்தம்மாளுக்கு ஒரு ஆற்றாமையே. "கருவப்பிலைக் கொத்துபோல ஒரே மகன். அவனை ஒரு டாக்டருக்கோ, வக்கீலுக்கோ, என்ஜீனியருக்கோ படிக்க அனுப்பாமே வாத்தியார் வேலைக்கு அதுவும் தமிழ் வாத்தியார் வேலைக்குப்படிக்க அனுப்புகிறாரே! மனுசனுக்குப் புத்தி இப்படியா போகணும்!'' என்று மரகதத்தம்மாள் முணுமுணுக்காத நாள் இல்லை.

ஆனாலும் மனைவியின் முணுமுணுப்பை அலட்சியப்படுத்திவிட்டார் முதலியார்.

தந்தைக்கேற்றதனயனாக வளவனும் ஆர்வமுடன் தமிழ் கற்று வந்தான். சுயமாகக் கவிதைகளை இயற்றும் அளவிற்கு காரிகை, தண்டி நூற் பயிற்சியும் பெற்றான்.

அந்த நேரத்தில்தான் கனகசபைக்கு அந்த ஆசை உண்டானது. அதை உடனே நிறைவேற்றத் துடித்தார். கல்லூரியிலிருந்து மகன் வந்ததும் அவனை அழைத்து, "டேய் வளவா! உனக்குக் கவிதை கட்ட வரும் இல்லே?.'–என்று கேட்டார். "ஓ! காரிகையைக் கரைத்துக்குடித்துவிட்டு தண்டியின் சாரத்தைப் பிழிந்து சட்டைப் பையில் போட்டுக்கொண்டு தொல்காப்பியத்தில் துருவி ஆய்ந்து கொண்டிருக்கும் என்னைப் பார்த்து இப்படிக் கேட்டுவிட்டீரே தந்தையாரே! இம் என்பதற்குள் எண்ணூறும் அம்மென்றால் ஆயிரமும் ஆகாதோ? ஐயமெனின் முதற்சீரோ கடைச்சீரோ தந்து எந்தப் பாவினத்தில் பாடவேண்டும் என்று சொல்லுங்கள். இப்போது அற்புதமாகக் கவிதை கட்டுகிறேன்!''

சவால் விடும் முறையில் பொரிந்து தள்ளினார் வருங்கால வித்துவான். மகனின் பேச்சைக் கேட்ட தந்தை பூரித்துப் போய்விட்டார்.

"பலே வளவா! எங்கே குறளைப் பற்றி ஒரு கவிதை கட்டுபார்ப்போம்!',

"நன்று தந்தாய்! அதைப் பாட யான் என்ன மாதவம் செய்தேனோ, ஆயின் தந்தையே! எப்பாவினத்தில் 'பாட வேண்டும் என்று விரும்புகிறீர்கள்!''

—வளவனார் பேசியது தந்தையாருக்குச் சரியாகப் புரியவில்லை. கடைசியில் சொன்னதுமட்டும் கொஞ்சம் புரிவது போல் தோன்றியது. என்றாலும் தன் மகன் இலக்கியத்தமிழில் பேசுவது குறித்து அவருக்கு மகிழ்வே. இராதா பின்?

"எப்படி வேணும்னாலும் பாடு. ஆனால் எனக்குப் புரியும்படி பாடு! ரொம்பப் பாடாமே கொஞ்சமா நாலு வரியோ ஆறுவரியோ பாடு போதும்!''

"நன்று தந்தையே! ஏற்றமான தமிழ் எனக்குத் தெரியும். என்றாலும் எளிய தமிழிலேயே பாடுவம். கேட்பீர். தேவையாயின் எழுதியும் கொள்வீர்!''–என்றபடி கவி கட்டத் தன்னை தயார் செய்துகொள்வதன் அடையாளமாய்

"நான் ஒன்று எழுதி வைத்திருக்கிறேன்! அதை எந்தப் பத்திரிகைக்கு அனுப்பினாலும் சந்தோஷமாக எடுத்துக்கொள்வார்கள்!"

"என்னது? கதையா, கட்டுரையா?"

"அதெல்லாமில்லை! ஒரு வருஷ சந்தாவுக்கு ஒரு 'செக்'!"

குரு: "அடடே! ராமுவா! எங்கே ஒரு வருஷமா ஆளையே காணோம்?"

சிடன்: "நான் அடிக்கடி பானையை உடைத்துவிடுவதாகக் குறைபட்டுக் கொண்டீர்களேயென்றுதான் 'வயிறு' வளர்க்கப் போயிருந்தேன் சார்!"

ஒரு கணைப்பு கணைத்துக்கொண்டான். கனகசபையும் பேனாவும் தாளுமாய்த் தயாரானார். மகன் பாடினான் கவிதை. தந்தை தாளில் எழுதிக்கொண்டார். அது, இது;

'எழுந்தவுடன் யேட்டை எடுத்திடு-
உந்தன்
இதயத்திற் குறளைப் பதித்திடு
நாளுக் கொருகுறள் கற்றிடு
நாளும் முயன்றதைப் போற்றிடு
வாழ்வுக் கதுவழி காட்டிடும்
தாழ்வுக் குறியெலா மோட்டிடும்"

—கனகசபை முதலியார் என்னவோ சீர் பிரிக்காமல் தான் எழுதிக்கொண்டார். எனினும் வளவன் அதைப் பார்வையிட்டு சீர் பிரித்துத் தந்தான்.

கனகசபைக்குக் கொள்ளை மகிழ்ச்சி, சொல்லி வாய்மூடுமுன் அழகாகக் குறளைப் பற்றித் தன் மகன் கவி பாடிவிட்டானே. 'பய பிறவிப் புலவன்தான்' என்று பெருமிதம் கொண்டார். பெருமிதத்தினூடே ஓர் ஐயமும் அவருக்கு எழுந்தது. அதை நிவர்த்தி செய்து கொள்ள எண்ணிய முதலியார் மகனிடம் கேட்டார், "எல்லாம் சரி வளவா, ஒருநாளைக்கு ஒரு குறள் படித்தாலே அது வாழ்க்கைக்கு வழி காட்டிடும்னு சொல்லியிருக்கியே நான் தினமும் ஒரு அதிகாரம்—பத்து குறள் படிக்கிறேனே! ஒண்ணுமே காட்டலியே!"—என்றார்.

இதைக்கேட்ட வளவன் தந்தையின் அறியாமையைக்கருதிச் சிரிப்பதா? அழுவதா என ஒருக்கணம் சிந்தித்து 'இது பெரிய ஆய்வு விடயம்' என எண்ணியவனாய் தற்சமயத்திற்கு அந்தச் சிந்தனையை ஒதுக்கிவைத்துவிட்டுச் சொன்னான், "தந்தையே! நன்று சொன்னீர்! ஒரு நாளைக்குப் பத்து குறள் படிக்க வேண்டுவதே இல்லை. ஒன்று படித்தால் போதும். ஆனால் படித்ததுடன் நிற்பின் பயனில்லை. அதன்படி நடக்கவும் செய்யவேண்டும். இதனை இறைப் புலவரே, "கற்றபின் நிற்க அதற்குத்தக என்று கூறுகிறார்" என்றார்.

"ஓகோ! அப்படியா?"—என்றமுதலியார் அடுத்து அதனைத் தொடர்ந்து எழுந்த ஐயத்தைக் கூறினார், "ஆம் வளவா! அப்படியானால் ஒரு குறள்படி-நடக்க ஒருநாள் போதுமா?"

"ஒன்று செய்யுங்கள் தந்தையே! ஒரு குறளைப் படியுங்கள், படித்ததி லிருந்து அதன்படி நடக்க ஆரம்பியுங் கள். அக்குறளில் உள்ளபடி முழுமை யும் நாம் நடந்தோம் என்று உங்கள் உள்ளத்தில் தெளிவான பின்னர் அடுத்த குறளுக்குப் போகலாம்!''

''இதுவும் யோசனை!''—என்று ஆமோதித்த முதலியார் நாளையில் இருந்து அதன்படியே நடப்பது என முடிவு செய்தார்.

* * *

மறுநாள்—

நேற்றையதினம் காலையில் முதலி யார் 'வெகுளாமை' அதிகாரத்தைப் படித்து முடித்துவிட்டாராதலின் இன்று 'இன்னா செய்யாமை' அதிகாரத் தைப் படிக்கவேண்டும்.

முதலில் அந்த அதிகாரத்துள்உள்ள பத்துக் குறளின் உரையையும் மேற் பார்வையிட்ட முதலியாருக்கு,

"இன்னாசெய் தாரைஒறுத்தல்
அவர் நாண,
நன்னயம் செய்து விடல்''—என்ற

குறள் மிகவும் பிடித்துப்போயிற்று; அதற்கு முக்கியமான காரணம் இக் குறட் கருத்தை ஒட்டி, 'ஒரு கன்னத் தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு'-என ஏசு மகான் கூறியுள்ள தாக ஒரு பொதுக்கூட்டத்தில் ஒருவர் கூறியது அவருக்கு நினைவிருந்தது. மேலும் காந்தி மகானுக்கு இக்கருத்து மிகவும் விருப்பம் எனவும் அவர் தொடர்ந்து கூறியதை முதலியார் மறக்கவில்லை. ஏசு, காந்திபோன்ற மகான்களும் வள்ளுவரின் இக்கருத்தை வலியுறுத்துவதால் இது மிக உயர்ந்த தாக இருத்தல்வேண்டும் என முடிவு செய்தார். தனது பாராயணத்தில் புதுத் திருப்பத்தை உண்டாக்கும் இம் முதல் நாளில் இவ் உயர்ந்த குறளைப் படித்து அதன்படியே நடப்பது என முடிவு செய்துகொண்டு, ''உனக்குத் தீங்குசெய்பவர்களை தண்டிக்கும்முறை என்னவென்றால் அப்படித் தீங்கு புரிந் தார்க்கு, நன்மை புரிதலேயாம்''-என்ற உரையையும் அதன்தெளிவிளக்கத்தை யும் பலமுறை படித்து மனதில் நிறுத் திக்கொண்டார். பின்னர் இக்குறள்படி நடக்க தமக்கு யாராவது தீங்கு செய்ய மாட்டார்களா என்று எண்ணத் துவங்கினார்!

* * *

கனகசபையின் வீட்டு வேலையாள் முனியனின் கை கொஞ்சம் நீளம். நீளம் என்றால் அளவில் அல்ல; செயலில். எங் காவது கண்ணில் காசு தட்டுப்பட்டால் இரண்டாம் பேருக்குத் தெரியாமல் சுருட்டிக்கொண்டு விடுவான். இப்படி கனகசபை முதலியாரின் பையில் இருந்து பலமுறை எடுத்திருப்பினும் ஒருமுறைதான் பிடிபட்டான். பிடி பட்ட அந்த முறையும் அவன் அதிக மாக எடுக்கமுடியவில்லை. காரணம் அப்போது முதலியாரின் பையில் எட் டணா நாணயம்தான் இருந்தது. முனி யன் எட்டணாவை எடுக்கும்போது தற் செயலாக அங்கு வந்த முதலியார் கண் கூடாகப் பார்த்ததுதான் தாமதம். உடனே சினம் கொண்டார். கையும் களவுமாகப் பிடித்த அவனை வேலையை விட்டே நீக்கினார். ஆனால் முனியனோ கண்ணீரும் கம்பலையுமாக இருந்து கெஞ்சியதன் விளைவாக அந்த மாதச் சம்பளத்தில் ஒரு ரூபாய் பிடித்துக் கொண்டு மறுபடியும் வேலைக்கு எடுத் துக்கொள்ள இசைந்தார்.

முதலியாரின் வீட்டில் பாத்திரம் துலக்கும் முனியம்மாவின் கதையும் இதேதான். ஆளோ அவள் மிகவும் அழகு. கணவனைப் போல குணமுள்ள மனைவி. ஆனால் அவள் காசு திருட மாட்டாள். பண்டம் பாத்திரம்தான்!

மதிய உணவை முடித்துக்கொண்ட முதலியார் 'ஹாவ்!' என்று பெரும் ஏப் பம் விட்டபடி தன் அறைக்குள் நுழை ந்தவர் அங்கே சுவரில் மாட்டியிருந்த தனது சட்டைப்பையில் கைவிட்டபடி நிற்கும் முனியனைக்கண்டார்.

கண்ட முதலியார் திகைக்கவில்லை. அவருக்குக் கோபம் வர இல்லை.

எசமானைக் கண்ட முனியனோ பீதி யும் கலவரம் உற்றான். இனித்தன்வேலை போய்விட்டது என்ற முடிவுக்கும் வந்துவிட்டான்.

இன்முகத்துடன் ''முனியா அப் படியே கையை எடு''—என்றார் முதலி யார்.

செய்வதை அறியாது திகைத்துக் கொண்டிருந்த முனியன் ஒன்றும் தோன்றாமல் கையை அப்படியே எடுத் தான். வெளியே வந்த முனியனின் கை—இரண்டு ரூபாய் சிகப்பு நோட்டு டன் வந்தது.

"எசமா!... தெரியாமே... இனிமே இல்லீங்க...'' உளறினான் முனியன்.

முதலியார் சிரித்தார். சிரித்தவர் இடுப்புச் சாவியை எடுத்தார். சாவியை எடுத்தவர் பீரோவைத் திறந்தார். பீரோவைத் திறந்தவர் மற்றும் இரண்டு ஒரு ரூபாய் நோட்டுகளை எடுத்து, "இந்தாப்பா முனியா இதையும் வச்சுக்க!"—என்று கூறியபடி அதையும் அவனது கையில் திணித்தார்.

முனியன் திகைத்து நின்றிருந்தான்!

* * *

மதிய உணவு உண்ட மயக்கம் தீர படுத்த முதலியார் எழுந்திருக்கும்போது மாலை மணி நாலரை.

அயர்வு நீங்கிய தெளிவுடன் எழுந்த முதலியார், கூடத்தில் மனைவியின் கூக்குரலைக் கேட்டு "என்னவோ ஏதோ?" என்று சென்று பார்த்தார். பார்த்தால்—?

முனியம்மா பாத்திரம் துலக்கும் போது ஒரு வெள்ளி டம்ளரை எடுத்து மடியில் சுருட்டிக்கொண்டாளாம். இதை மரகதத்தம்மாள் பார்த்துவிட்டாள். விடுவாளா? அதுதான் "ஏண்டி எத்தனை நாளா இந்த வேலே? அதுதானு வாரத்திற்கு ரெண்டு ஏனம் காணுமப் போகுது! திருட்டுக் கள்ளி!" என்று கோபத்துடன் கூச்சலிட்டுக் கொண்டிருந்தாள். விஷயத்தைத் தெரிந்துகொண்ட முதலியார், "ஏன் முனியம்மா! வெள்ளி டம்ளரை எடுத்தது உண்மைதானு?" என்று சமாதானமாகக் கேட்டார். "இனிமே இல்லீங்க எசமா!" என்றுள் விழிகளில் தெறிக்கும் நீர்த்திவலைகளுடன்.

"கேட்டதற்குப் பதில்! எடுத்தது உண்மைதானே!" முதலியார் 'கரைக்டாக'க் கேட்டார்.

தலையாட்டுதல் மூலம் 'ஆம்' எனத் தெரிவித்தாள் முனியம்மா. "சரி, இரு வர்றேன்!" என்றபடி உள்ளே சென்ருர் முதலியார்.

'என்ன செய்யப் போருரோ' எனப் பீதியுடன் இருந்தாள் முனியம்மா.

உள்ளே சென்றுவிட்டு வெளியே வந்த முதலியாரின் கைகளில் மற்றேர் வெள்ளி டம்ளர் இருந்தது. அதையும், மனைவியின் கையில் இருந்த முனியம்மா எடுத்த டம்ளரையும் சேர்த்து, 'இந்தா இந்த ரெண்டையும் வச்சுக்க" என்று கொடுத்தார்.

பேந்த, பேந்த விழித்தாள் முனியம்மா. ஸ்தம்பித்துவிட்டாள் மரகதத்தம்மாள்.

முதலியாரின் செய்கை, "இவருக்கும் இவளுக்கும் ஏதோ ரகசிய உறவு இருக்குமோ, அந்த தைரியத்திலே தான் இவள் கை அநியாயமாக நீளுகிறது!" என்ற தப்பபிப்பிராயத்தை மரகதத்தம்மாளின் உள்ளத்தில் ஏற்படுத்தும் அளவிற்கு இருந்தது!

மறுநாள் முதலியாரின் பத்து ரூபாய் காணேம். அதேபோல் வீட்டில் இருந்த நான்கு வெள்ளிப் பாத்திரங்களும், ஒரு பித்தளை ஏனமும் காணேம்!

இரண்டு ரூபாய் எடுத்தால் நான்கு ரூபாய் கிடைக்கும். பத்து ரூபாய் எடுத்தால் இருபது ரூபாய் கிடைக்கும். முனியனின் கணக்கு சரிதான். சதிபதிகள் சரியாகத்தான் திர்க்காலோசனை செய்து வேலை செய்திருக்கிருர்கள்.

* * *

இப்படியே தினமும் பெரும் நஷ்டத்துடன் பத்து நாட்களை ஓட்டிவிட்டார் முதலியார்.

முதலியாரின் ஒரே மகனுன வளவனின் தங்கையும் முதலியாரின் ஒரே மகளுமான பத்து வயதுச் சிறுமி அரசிக்கு அன்று காய்ச்சல் அடித்தது. முன் தினம் பெய்த மழையில் நனைந்துவிட்டதால் காய்ச்சல் பலமாகவே அடித்தது.

அரசியைப் பார்த்த டாக்டர் ஊசி

போட்டுவிட்டு பார்லி கஞ்சி மட்டும் தரவேண்டும். வேறு உணவே கூடாது என்று கூறிவிட்டார். பாவம் சிறு பெண்தானே!

மத்தியான நேரத்தில் தெருவில் ஐஸ்கிரீம்காரன் சென்ருன். பார்லி கஞ்சியே குடித்து மரத்துப்போன அரசியின் நாவில் நீர் சுரந்தது. பார்த்தாள். அம்மாவும் அப்பாவும் படுத்துவிட்டனர். அண்ணு கல்லூரிக்குப் போய்விட்டார். எனவே ஐஸ்கிரீம் சாப்பிட்டால் யாருக்குமே தெரியாது.

—இப்படி நினைத்தபடி எழுந்தவள் உள்ளே சமையலறைக்குச் சென்று அங்கே அப்பாவுக்குத் தெரியாமல் அம்மா சில்லரைகளைச் சேர்த்துவைக்கும் மிளகாய் டப்பாவைத் திறந்து ஒரணு எடுத்துக்கொண்டு வாசலுக்கு வந்தாள். ஐஸ்கிரீம்காரனை அழைத்து

ஓரணா ஐஸ்கிரீம் வாங்கினாள். இதற்குள் சந்தடி கேட்டு எழுந்த மரகதத்தம்மாள் ஐஸ்கிரீமும் வாயுமாக நிற்கும் மகளைப் பார்த்து "அடி பாவிப் பெண்ணே!" என இரைந்தாள். பாரியாளின் கூச்சலைக் கேட்டு எழுந்துவந்த முதலியார் சேதி அறிந்ததும் ஐஸ்கிரீம் காரனைப் பார்த்தார். அவனைக் காணோம், போய்விட்டான்.

உடனே சட்டையை மாட்டிக் கொண்டு வெளியே புறப்பட்டார் முதலியார், தன் கடமையைச் செய்ய. தெருக்கோடியில்இருந்தஐஸ்லாண்டில் ஒரு கோப்பை கிரீம் வாங்கிக்கொண்டு வந்து மகளிடம் தந்து "இம்... இதையும் சாப்பிடு!" என்றார்.

அவரது செய்கை மரகதத்தம்மாளுக்கு எரிச்சலை மூட்டியது. அவர் அவளை லட்சியம் செய்தார் இல்லை. அரசிக்கோ ஏகப்பட்ட குஷி. 'அப்பான்னா அப்பா லட்டு அப்பா!" என்றபடி காய்ச்சலையும் மறந்து ஐஸ்கிரீம் சாப்பிடுவதில் முனைந்தாள்.

கொடுமையான காய்ச்சலுடன் ஐஸ்கிரீம் சாப்பிட்டதின் விளைவாக அன்று இரவு ஜன்னி கண்டது அரசிக்கு. மரகதத்தம்மாள் துடித்தாள். அரசிக்கு ஊசி போட்ட டாக்டர், முதலியாரைக் கண்டித்தார். ஆனால் முதலியார் எதையும் லட்சியம் செய்யவில்லை. குறள் வழி நடக்கிறோம் என்ற திருப்தியே அவருக்குப் போதுமானது.

வளவன் எல்லா விஷயத்தையும் அறிந்துகொண்டான். என்றாலும் அவனுக்கு தந்தை இப்படிச் செய்வதற்கான காரணத்தைத்தான் அறியக்கூட இல்லை. ஈஸிசேரில் உட்கார்ந்திருந்த தந்தையை அண்டிக் கேட்டான். அவர் சொன்னார், "இன்னா செய்தாரை ஒறுத்தல் என்ற குறள்படி நடக்கிறேன் வளவா, அது தப்பா?" என்று. அப்போதுதான் அவனுக்குச் சிறிது சிறிதாக விஷயம் புரிபட்டது.

"அப்பா நீங்கள் பெரிய தவறு செய்துவிட்டீர்கள்; இன்னா செய்தாரை என்ற குறள்படி நடக்க முற்பட்ட நீங்கள் 'ஞாலம் கருதினும் கைகூடும்—காலம் கருதி இடத்தான் செயின்'— என்ற குறளை மறந்துவிட்டீர்கள். நாம் ஒரு காரியத்தைச் செய்யுமுன் அதற்கான காலம், இடம் முதலியவைகளை அறிந்தே செய்யவேண்டும். அப்படிச் செய்தால் உலகமே வேண்டுமானாலும் பெறமுடியும்.—இதையும் நீங்கள் படித்திருந்தால் அரசிக்கு ஐஸ்கிரீம் வாங்கித் தந்திருப்பீர்களா அப்பா? அவளுக்குக் காய்ச்சல் அதிகமாகி இருக்குமா?"

"அப்படியும் வள்ளுவர் சொல்லியிருக்காரா! அப்படின்னா முனியன் முனியம்மா செய்தது...?"

"சரிதான் என்பேன். காரணம் தவறு உங்களிடம் உள்ளது, எதையும் செய்யும்முன் உலகத்துடன் ஓட்டவே செல்லவேண்டும். இது ராமராஜ்யம் அல்ல என்பதை மறக்கக்கூடாது. "நாண நன்னயம் செய்தல்" என்பதன் பொருளைப் புரிந்துகொள்ளாமல் மேல் எழுத்துவாரியாக இப்படி நடப்பது பெருத்த தவறு. இதையும் வள்ளுவர்,

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல்
பலகற்றும்-கல்லார்
அறிவிலாதார்"—

என்று கூறியுள்ளார் என்றான்.

முதலியாருக்குத் தலை சுற்றியது.

என்ன ஆச்சரியம்!

"ஜடாயு"

தற்போது தமிழ்ப்பட உலகில் தங்கவேலு-எம். சரோஜா ஜோடி மோரும் சோறும் வடுமாங்காயும்போல ரஸிக்கப்படுகிறது! இருவருக்கும் அவ்வளவு பொருத்தம்! ஆனால் சரோஜா ஒரு ஹாஸ்ய நடிகை ஆவார் என்று—மற்றவர்கள் என்ன-அவர் கூட நினைத்ததேயில்லை என்பது ஆச்சரியமல்லவா?

அவர் சினிமாவில் நடிக்க வந்த புதிதில் பலவித உப பாத்திரங்களில் தோன்றி தோல்வியையே

கண்டு வந்தார். அந்தக் காலத்தில் ஹாஸ்ய சினிமா உலகுக்கும்—தமக்கும்

பிரபல நடிகை தேவிகா இதுபோல் புராதன அலங்காரத்துடன், தாட்சாயணி திருமணக் கோலத்தில் காட்சியளிப்பது ஸ்ரீராஜ ராஜேஸ்வரி பிலிம் கம்பெனியார் தயாரிக்கும் "தட்ச யக்ஞம்" தமிழ்ப் படத்தில்.

பொருத்தம் கிடையாது என்று கூட அவர் நினைத்திருக்கக்கூடும். கடைசியில் தங்கவேலுவுடன் சேர்ந்து ஹாஸ்ய பாங்களில் நடிக்கத்தொடங்கிய பின்னரே அவரது பெயர் பிரபலம் அடையத் தொடங்கியது.

* * *

சரோஜா சினிமாவுக்கு வருவதற்கு முன் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோது தாம் ஒரு டாக்டர் ஆக வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தார்! ஆனால், அந்த எண்ணம் ஈடேறவில்லை. இருந்த போதிலும், அவர் இப்பொழுது கூறக்கூடும், ''உடல் வியாதிக்கு இல்லையென்றாலும் உள்ளங்களின் வியாதிக்கு இப்பொழுது நான் மருந்து (சிரிப்பு) வழங்கிவருகிறேனே!'' என்று.

* * *

சமீபத் தேர்தலுக்குமுன், ''என் தலைவர் அண்ணாதுரை ஜெயிக்கும் வரையில் நான் மாலைகள் அணியமாட்டேன்'' என்று எம். ஜி. ராமச்சந்திரன் சபதம் செய்துகொண்டார்! ஆனால், அண்ணாதுரையே காஞ்சித் தேர்தலில் தோல்வியுற்றுவிட்டார். ஆகவே, தம்பி எம். ஜி. ஆர். தம் சபதத்தை நிறைவேற்றுபவராயிருந்தால், அடுத்த தேர்தலில் அண்ணா ஜெயிக்கும்வரையில் மாலையணியவேகூடாது. ஆனால், தி. மு. க. சபதமெல்லாம் நீர்மேல் எழுதப்படுபவைதானே!

* *

தற்போது எம். ஜி. ஆரும் சிவாஜி கணேசனும் உள்ள நிலையில் ஒருகாலத்தில் சின்னப்பாவும், எம். கே. டி. பாகவதரும் போட்டிக் கதாநாயகர்களாயிருந்தனர். பாகவதர் பூராவாக பாட்டையே நம்பியிருந்தவர். சின்னப்பாவோ 'பாட்டு,' நடிப்பு இரண்டிலும் தம் திறமையைக் காட்டி வந்தார். அப்படியிருக்க

மஹாதேவி பிலிம்ஸார் தயாரிக்கும் ''பெண்குலத்தின் பெருமை'' தமிழ்ப் படத்தில் சாவித்திரி இப்படி மலர்ந்த முகத்துடன் காட்சி அளிக்கிறார்.

காந்திஜியின் "இல்லறமும் பிரம்மச்சரியமும்" என்ற புத்தகம் எஸ். எஸ். ஆர். கையிலிருக்கிறது. ராஜம்மா சொல்ல விரும்புவது என்னவாக இருக்கும்?— ஏ. எல். எஸ். வெளியிட்டிருக்கும் "சாரதா" படத்தில் ஒரு காட்சி.

எம். கே. டி. பாகவதர் பி. யு. சின்னப்பாவுக்கு ஒரு படத்தில பின்னணி பாடியிருக்கிருர் என்ருல் நம்புவீர்களா? ஆனுல், அது உண்மையே. டைரெக்டர் கே. சுப்ரமண்யம் முன்னர் தயாரித்து வெளியிட்ட "விகடயோகி" படத்தில் பாகவதரின் ஒரு பாட்டு சின்னப்பாவின் நடிப்பிற்கு பின்னணியாக விளங்குகிறது!

* * *

'சினிமா' என்ருல் 'கேவலம்' என்று நினைக்கப்பட்டுவந்த காலம் ஒன்றுண்டு. பிரபல நாடக நடிகர்கள் சிலர் படங்களில் நடிக்க மறுத்திருக்கிருர்கள்! பிரபல பாடகர்கள் சினிமாவில் பின்னணி பாடுவது மதிப்பிற்குக் குறைவான செயல் என்று கருதியிருக்கின்றனர். இதற்கு உதாரணமாக பிரபல வங்கப் பாடகி ஜுதிகாராயைக் கூறலாம். பக்தி கீதங்களை அவர் புதுப்புது மெட்டுகளில் பாடி அகில இந்தியப் புகழ் பெற்றவர். இவரது பாடல்கள் கொண்ட அநேக இசைத்தட்டுகள் வெளிவந்திருக்கின்றன. அதி இனிய குரல் பெற்ற இவரை சினிமாவில் பின்னணி பாட வைத்துவிடவேண்டும் என்று அநேக படாதிபதிகள் சுமார் பத்துவருஷ காலம் முயன்றும் பலிக்கவில்லை. முடிவில், முன்னுள் பிரபல டைரக்டர் தேவகிபோஸ்தான் இந்த முயற்சியில் வெற்றி பெற்ருர். அவர் தயாரித்து வெளியிட்ட "ரத்ன தீபம்" படத்தில் (1952-ல்) ஜுதிகாராய் பின்னணி பாடியிருக்கிருர்.

மாதத்திற்கு ஒரு கணவரை மணந்து கொள்ளுவது ஹாலிவுட்டில் சகஜமான வழக்கம் என்பது தெரிந்ததே. இந்த வழக்கம் மெதுவாக இந்திய சினிமாவில்கூடப் புகுந்துகொண்டிருக்கிறது. ஜி. வரலக்ஷ்மி, எம். என். ராஜம், இரண்டாம் முறையாகத் திருமணம் செய்துகொண்டார்கள் அல்லவா? ஆனால், "அதிகப்படியான கணவர்களை மணந்துகொண்டவர்" என்ற "பெருமை" தென் இந்திய சினிமா உலகிற்கு கிடைக்கவில்லை. ஏனென்றால், மீனு என்ற (தற்போது பாகிஸ்தானில் இருக்கும்) பின்னணிப் பாடகி நான்கு முறை கல்யாணம் செய்துகொண்டு "ரிக்கார்டு" ஏற்படுத்தியிருக்கிறார்! சாஹுர் ராஜா, அல் நஹார், ராஸா மீர், ரூப் கே. ஷோரே ஆகியோர் மீனு ஒருவர்பின் ஒருவராக மணந்துகொண்ட கணவர்கள் ஆவர்! எல்லாம், தாம் ஒரு குழந்தைக்குத் தாய் ஆகவேண்டும் என்ற அவாவினால்தான்! அந்த அவா நான்காவது கணவரைப் பெற்றதும் பூர்த்தியாயிற்று! குர்ஷீத் என்ற அசல் பெயருடைய இந்த முஸ்லீம் பாடகியால் பாடப்பட்டதுதான் 'லாரலப்பா" என்ற 'டப்பா' பாட்டு!

* * *

எல்லோருக்கும் ஒரு வழி என்றால் கே. ஏ. அப்பாஸ் நேர் எதிர் வழியில் சென்று பார்த்தார். இவர் வடநாட்டைச் சேர்ந்த பிரபல எழுத்தாளர், கதாசிரியர், படாதிபதி, டைரெக்டர் ஆவார்.

படங்களின் ஷூட்டிங் ஆரம்ப

ராணி பிக்சர்ஸார் தயாரிக்கும் "கண்ணாடி மாளிகை" படத்தின் ஹாஸ்ய பாகத்தில் நடிக்கிறார் டி. ஆர். சரோஜா.

விழாக்கள் கொண்டாடப்படுவதுதான் சினிமா உலகில் வழக்கமாயிருந்து வருகிறது. ஆனால், அப்பாஸ் என்ன செய்தார் தெரியுமா? தம் படத்தின் ஷூட்டிங் முடிவு விழாவை விருந்து வைத்து விமரிசையாகக் கொண்டாடினார்! அவ்விழாவின்போது தயாரிக்கப்பட்டதோ ஒரு மரணக் காட்சி! அதில், "வக்கீலய்யா! என் கட்சி தோற்றுவிட்டதே!" என்று பிரபல நடிகை நர்கீஸ் கூறிக்கொண்டே கீழே விழுந்து இறக்கிறார்! அப்பாஸ் 1952-ல் வெளியிட்ட "அன்ஹோனி" என்ற படத்தில் இக்காட்சி சேர்க்கப்பட்டிருந்தது!

தேவி பிலிம்ஸாரின் "கொஞ்சும் சலங்கை" உன்னத டெக்னிக் கலர் படத்தில் ஜெமினி கணேசன் தோன்றும் ஓர் காட்சி.

* * *

என்னைக் கேட்டால் ஷூட்டிங் ஆரம்ப விழாவைக் கொண்டாடுவதைவிட ஷூட்டிங் முடிவு விழாவைக் கொண்டாடுவதில்தான் அதிக சந்தோஷம் இருக்கும். படத்தயாரிப்பு பகீரதப் பிரயத்தனம் ஆகிவிட்டிருக்கும் இக்காலத்தில், ஒரு படம் எத்தனையோ கண்டங்களுக்கும் பலியாகாமல் தப்பி ஷூட்டிங் முடிவுறுகிறது என்றால் உண்மையில் அதுதானே கொண்டாடப்படவேண்டிய சந்தர்ப்பம்? தினம் எழுந்தால் ஷூட்டிங் ஆரம்ப விழாக்கள் நடக்கின்றன. ஆனால், அதற்கு சில தினங்களுக்குப் பிறகு (பல கம்பெனிகளின்) மூடு விழாக்கள் நடந்துவிடுகின்றன அல்லவா?

"சகுனி"

அமெச்சூர்கள் நடித்த சிறந்த நாடகம்!

அமெச்சூர் நாட்கக் குழுவினர் சாதாரணமாக சரித்திர, புராணக் கதைகள் பக்கம் போவது வழக்கமில்லை. காரணம். வாடகைக்கு வாங்கும் திரைகள், உடைகள் இவற்றை உபயோகித்து அவர்கள் விரும்பிய அளவில் உயர்ந்த நாடகத்தை உருவாக்குவது கடினம் என்பதுதான். இதற்கு விதிவிலக்காக மித்ரா ஆர்ட்டிஸ்ட் குழுவினர் "சகுனி" என்ற மகாபாரதக் கதையை துணிந்த நாடகமாக நடித்துப் போற்றத்தக்க வெற்றி பெற்று வருகின்றனர்.

ராமாயணத்திற்கு கூனி; மகா பாரபாரதத்திற்கு சகுனி. இவ்விருவர் இல்லையேல் இவ்விரு சிரஞ்சீவிக் காவியங்களும் இல்லை.

சகுனி கெட்ட எண்ணம் படைத்தவர் என்பது சகஜமாகத் தெரிந்த விஷயம். இதற்கு மாறாக 'சகுனி உண்மையில் ஒரு நல்லவர்தான்; ஆனால். சில நல்ல காரியங்கள் நடைபெறுவதற்காகவே அவர் கருவியாக்கப்பட்டார்' என்ற கதாசிரியரின் கற்பனையை நிலை நாட்டுகிறது இந்த நாடகம்.

இம் முயற்சியில் கதை-வசன-டைரெக்டர் "கிஷன்" சிறந்த வெற்றி பெற்றுவிட்டார். அவர் புராண ரீதியிலேயே—மிகச் சாதுரியமாக-சகுனிக்கு ஒரு மனைவியையும். ஒரு மகனையும் சிருட்டித்துச் சேர்த்திருக்கிறார். ஒட்டு மாங்கனி எவ்வாறு தனித்து ருசிக்கிறதோ அதேபோல் இக் கற்பனைப் பாத்திரங்கள் அசல் கதையோடு பூரணமாகப் பொருந்தி நிற்கின்றன.

இந்த நாடகத்தில் அநேகமாக எல்லோருமே திறம்பட நடித்தனர். வி.

முத்துராமனும், தேவிகாவும் தோன்றும் இக் காட்சி சித்ராலயா தயாரித்துள்ள "நெஞ்சில் ஓர் ஆலயம்" படத்தில்.

எம். சுப்ரமண்யன் (கிருஷ்ணன்) எம். ராமகிருஷ்ணன் (சகுனி) இருவரும் தம் பாத்திரத்தை மிகப் பாராட்டத் தக்க படி நடித்தனர். மற்றும் என். ஸ்ரீநிவாசன் (விதுரர்) திருதராஷ்டிரன் (ஸ்ரீ ஸ்ரீரகு), ஏ. வெங்கடாசலம் (பீமன்), நாகூர் சீனு (சகாதேவன், காலதேவன்). பி. சுந்தரம் (துரியோதனன்)—ஆகியோர் நடிப்பும் நன்கு அமைந்தது.

நாரதராக நடித்த எஸ். சந்தானம் இனிய பாட்டுகள் விஷமச் சிரிப்பு, தந்திரப் பேச்சு இவை மூலம் சபையோரைக் கவர்ந்தார்.

சகுனியின் மனைவியாக நடித்த எஸ். சுப்புலக்ஷ்மி உணர்ச்சிக் கட்டங்களை அருமையாகப் பேசி நடித்தார்.

மாஸ்டர் டி. சேகரின் கணீரென்ற வசனமும், துடிதுடிப்பும் குறிப்பிடத் தக்கது.

காட்சி மாற்றங்கள் திருப்தியளித்தன. நாடகத்தில் விறுவிறுப்பு இருந்தது. வாத்தியக்குழுவினர் காட்சிகளின் உணர்ச்சிப் பாவங்களுக்கு ஏற்ற ஓசைகளை எழுப்பி நன்கு ஒத்துழைத்தனர்.

ஆனால், ஒளிவீச்சு திருப்தி அளிக்கவில்லை. மொத்தத்தில் பார்த்து ரஸிக்க வேண்டிய சிறந்த நாடகம் இது.

எதையும் தாங்கும் இதயம்

கதை:—வேலைக்காரி, ஓரிரவு போன்ற படங்களைப் பார்ப்பது போன்ற உணர்ச்சி நமக்கு இக்கதையைப் பார்க்கும்போது ஏற்படுகிறது.

அப்பாவி கிராமப் பெண்ணொருத்தி காமுகக் காதலன் ஒருவனைக் காதலிக்கிறாள். அவன் அவளோடு வாழ்ந்துவிட்டுப் போய்விடுகிறான். அவனால் அவளுக்கு ஒரு குழந்தை பிறக்கிறது. அவள் அவனைத் தேடி அலைகிறாள். அவன் அவளை மறுக்கிறான். இப்படி ஓடுகிறது கதை, இதுபோல் பலகதைகளை நாம்பார்த்து விட்டோம். எனவே இதில் புதுமை ஒன்றும் இல்லை.

வசனம்.— கதையில் சிறப்பியல்புகளை காண முடியாததால் வசனம் பல இடங்களில் இயற்கையாக இல்லை. ஆனாலும், சில இடங்களில் வசனம் கருத்தோடு உள்ளது.

பாடல்கள்:—மருதகாசி எழுதியுள்ள 'தங்கம் விளையும் திருநாடும்' 'ஆத்மநாதன் எழுதியுள்ள 'உனக்கும் எனக்கும் வெகு தூரமில்லை' 'காதல் கதை பேசிடுவோம்' என்ற பாடலும் திருப்தியாக இருந்தன.

இசை:—எப்பொழுதும் இனிமையாக ஒலித்துக்கொண்டே இருக்கும் இன்பகீதம் என்று சொல்ல முடியாவிட்டாலும் இசையமைப்பாளர். டி. ஆர். பாப்பா 'தங்கம்விளையும் திருநாடு' உனக்கும் எனக்கும் வெகு தூரமில்லை என்ற இரு பாடல்களையும் கேட்கும் படியாக இசை அமைத்திருக்கிறார்..

நடிப்பு:—நடிப்பின் அனுபவ முத்திரைகளை ராதாவிடம் நாம் பல இடங்களில் பார்க்க முடிகிறது என்றாலும் அவர் ஏன் இப்படி காட்டுக் கத்தல் கத்துகிறார்?

ராஜேந்திரனிடத்தில் சுறுசுறுப்பையும், வேகத்தையும் பார்க்கும் அதே நேரத்தில் கோபமாய்ப் பேசி முடிந்ததும் தலையை ஒரு வெட்டு வெட்டுகிறாரே அதுதான் பார்க்க சகிக்கவில்லை.

குழந்தைக்குப் பால் கொடுக்கும் காட்சியில் பி. எஸ். சரோஜாவின் முகத்தில் தாய்மையின் முகப்பொலிவைக் காண்கிறோம். அவருக்கு நமது பாராட்டுதல்கள்!

நல்ல குணமுள்ள ஒரு பணக்காரப் பெண்ணாக விஜயகுமாரி வந்து அப்படியே போய்விடுகிறார்.

சந்திரகாந்தா கிழவியாகவும், கௌரவ நடிகர் கே. ஆர். ராமசாமி அவள் காதலனாகவும் தோன்றுகிறார்கள். கௌரவ நடிகரைவிட சந்திரகாந்தாவுக்கு இதில் வெற்றிதான்.

காட்சியமைப்பு :— ஆரம்பத்தில் சில பாலைவனக் காடுகளை நாம் பார்க்கிறோம். நாட்டிலுள்ள 'பசி ஏப்பக்காரர்களைக் காட்டுவதில் வெற்றிபெற்றிருக்கிறார்கள்.

ஒளி-ஒலி:— பரவாயில்லை.

டயரக்ஷன்:— தலையைக் கொடுத்து விட்டு திண்டாடுகிறார் பாவம்!

பொதுவாக :— எதையும் தாங்கும் இதயம் படம் பார்க்க எதையும் தாங்கும் இதயம் தேவை!

—ஜே. ஜே. தாஸ்

தாய்மை

இந்திரா ராகவன்

"டக் டிடிக்...! டடக்...டிடிக்!" தறி ஓடிக்கொண்டிருந்தது.

காஞ்சீபுரம் சுண்ணும்புக்காரத் தெருவில் வறுமையோடு போராடும் ஒரு நெசவாளியின் வீட்டிலிருந்து தான் அந்த ஒலியெழுந்தது. இந்தியா மட்டுமல்லாது அகில உலகிலும் ஆட்சி புரியும் பட்டுக்கைத்தறிச் சேலைகளின் உருவகக் களம் ஏழ்மைக்குள் புதைந்து கிடக்கிறது. திறமையுடன் வறுமை போட்டியிடும் இடம்.

அவன் கைகளும் கால்களும் பரபரவென்று இயங்கின.

ஆரஞ்சு வர்ணப் பட்டுச் சேலையின் நடுநடுவே அநாயாசமாய் பச்சைப் பூக்களை அவன் கரங்கள் உருவாக்கின.

"அம்மாடி! எப்படியானும் சேலையை நாளைக்குள் முடிச்சுட்டா புண்யவான் தாராளமாய்க்கூலி கொடுப்பாரு! கொயந்தைங்களுக்கு வயிறார ரெண்டு நாளைக்கானும் கஞ்சியோட நல்லாக் கறியும் தொவையலும் வெக்கச் சொல்லலாம். ஏன்தான் சாமி என்னைப்போல எழைங்களுக்கு இத்தினி கொயந்தெங்களைக் குடுக்கணம்! ஐயாவைப் பாரு. லெச்சக் கணக்கிலே சொத்து இருந்தாலும் அவுங்களுக்கு ஒரு குருத்து மொளைக்கல்லே! இன்னும் வள்ளிவவுத்திலேயிருக்கறத்துக்கு மாசம ஏழோ...எட்டோ...... ம்ஹ்ம்!" அவன் சிந்தனை அறுந்தது. இழையில் ஓடிய நூல் அறுபட்டதைப் போல.

"ஏண்டா.. கோதண்டம்! எதுவரைக்கும்டா முடிச்சிருக்கே! நம்ம கடை வாடிக்கைக்காரங்க நெலைக்கணம்னு ஆர்டருங்களை ஒழுங்காக் குடுக்கவேண்டாம்?' பட்டை நாமத்துடன் மேல்துண்டு சகிதமாய் காட்சியளித்தார் ஜகன்னாதஞ் செட்டியார்.

கடைத்தெருவில் இரண்டு பெரிய ஜவுளிக்கடைகள் அவருக்கு சொந்தம். செட்டித்தெருவில் பிரம்மாண்டமான வீடு அவருடையது. சொந்தமாகத் தறியில் பட்டுப்புடவைகள் ஆர்டர் கொடுப்பவர்களுக்கு நெய்யச் செய்து கொடுப்பதில் பணம் கொழித்தது. தங்கள் திறமையை மட்டுமே நம்பியிருக்கும் ஏழை நெசவாளிகளுக்கு அவர் கண்கண்ட தெய்வம்.

அவர்களுக்கு நியாயமான கூலி கொடுப்பார், பரந்த மனமுடையவர். அவரிடம் வேலை பார்க்கும் தொழிலாளிகளுக்கு ஏதும் கஷ்டம் வந்தால் பார்க்கச் சகிக்கமாட்டார். ஐம்பத்தைந்து வயதை எட்டிப் பிடித்து விட்டார். உலகளந்த பெருமாளிடம் தன் சொத்துக்களை ஆள ஒரு வாரிசு ஏற்படுத்திக் கொடுக்குமாறு நித்தம் வேண்டுவார். மக்களில்லாக் குறையைத் தவிர வேறு குறை கிடையாது அவருக்கு.

"போங்கடா! கொழந்தை இல்லாமப் போனுத்தான் நான் தான, தருமம் செய்வேன்னுட்டுத்தான் அவன் என்னை இப்படி வெச்சிருக்கான்" என்பார். குறையையும் நிறைவாகப் பாவிக்கும் குணம் அவருடையது.

ஆனால் அவர் மனைவி ராஜாம்பாளோ பிள்ளையில்லாமற் போனால் "புத்" என்ற நரகத்திற்குப் போவோம் என்று திடமாய் நம்பினாள். இயல்பான அவள் பெண்மைக் குணம் தாய்மைக்குத் தவம் கிடந்தது. அவளுக்கும் வயது ஐம்பதாகிவிட்டது. இனியும் குழந்தை பிறக்கக்கூடும்



என்று நம்பிக்கை வைப்பதில் பயனில்லை. எனவே அவள் ஏதாவதொரு குழந்தையை தத்து எடுத்துக்கொள்ள விரும்பினாள். 'அம்மா'' என்று ஒரு சிறுகுழந்தையின் மழலையினால் அழைக்கப்படாவிட்டால் தன் ஜென்மம் வீணே என்றும் எண்ணினாள்.

ஒரு நாள் கோதண்டத்தின் மனைவி வாயும் வயிறுமாய் முதலாளியின் வீட்டுப் படியேறினாள். அவள் கையில் அவள் கணவன் முடித்துக் கொடுத்த பட்டுச் சேலை ஒன்று இருந்தது. அவன் கடைப்பக்கம் போயிருந்தபடியால் அவளே வர நேர்ந்தது. முதலாளியின் மனைவிதான் என்றாலும் ராஜம்மாள் வள்ளியுடன் தோழியைப்போல் பழகினாள். தன் வயிற்றில் ஒரு அரும்பு விடவில்லை என்றாலும், வள்ளி வயிற்றில் ஒன்றும் இடுப்பில் ஒன்றுமாய்ச் சுமந்து கொண்டிருப்பதைக் கண்டும் அவள் மனதில் பொறாமை கிளைத்ததில்லை.

'வா...வள்ளி!'' அன்புடன் அவளை வரவேற்றாள்.

“இதை அவுரு குடுத்துட்டு வரச் சொன்னாருங்க!'' கையிலிருந்தபொட்டணத்தைக் கொடுத்த வள்ளிக்கு நிறைமாதப் பாரத்துடன் படியேறிய சிரமத்தால் மூச்சு வாங்கியது.

''உக்கார்......வள்ளி! ஏன் நிற்கிறாய்...கொஞ்ச நாளாய் ஒன்னே ஒண்ணு கேக்கணும்னு நெனைச்சுண்டிருந்தேன் ''

"என்னம்மா? உத்தரவு குடுத்தீங்கன்னா தலையாலே செய்யக் காத்துகிட்டு இருக்கேன்.''

" ஒண்ணுமில்லே... வந்து ...ஒனக்கு ஏழு கொழந்தைங்க இருக்கு. இத்தோடே எட்டு இல்லே......?'' அவள் வயிற்றைச் சுட்டிக் காட்டினாள் எஜமானி.

''நீங்க என்னம்மா சொல்றீங்க?''

“இப்போ ஒன்... வயத்திலே.......... இருக்கறதை.....பொறந்ததும் எனக்குக்குடுத்துடறையா? நான் நல்லாப் பாத்துக்கறேன் ... புள்ளையை ...... வள்ளியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள் ராஜம்பாள்,

வள்ளி யோசித்தாள்.

சட்டென்று ''அதுக்கென்னம்மா? பிள்ளையாப் பொறந்தா ஒங்களுக்கே குடுத்துடறேன். ஒங்க குறையைத் தீத்த புண்ணியமும் எனக்குக் கெடைச்சுட்டுப்போறது...நான் வரேன்மா...! நேரமாவுது.'' புறப்பட்டுவிட்டாள் வள்ளி சிந்தனையுடன்.

அவளுக்கு இதுவரை ஏழு குழந்தைகள். தலைச்சன் பிள்ளை, அடுத்தது பெண். இதைப்போலவே ஒன்று மாற்றி ஒன்றாய்ப்பிள்ளையும் பெண்ணுமாய் பிறந்தன. கடைசியில் கையிலிருக்கும் குழந்தை பிள்ளைக் குழந்தை. வழக்கம்போல் பிள்ளைக்குப் பிறகு பெண்தான் பிறக்கும் என்ற நினைவில் பிள்ளையாய்ப் பிறந்தால் கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லிவிட்டாள். இப்போது குழம்பினாள்.

வேளை நெருங்கியது. முனிஸிபாலிட்டி ஆஸ்பத்திரியில் வள்ளி சுகமாய்ப் பிரசவித்து பிழைத்தாள். அவளுடைய குழந்தைகள் எல்லாமே கொழ



கொழுவென்று இருக்கும். கருப்பாய் இருந்தாலும் லக்ஷணமாய் இருக்கும். இந்தக் குழந்தையோ எல்லாவற்றையும் ஒரு தட்டில் வைத்து, தான் ஒரு தட்டில் சமமாய் உட்கார்வதுபோல் அவ்வளவு அழகாய் இருந்தது.

அந்தக் குழந்தையின் அழகு முகத்தை கண்டபோது வள்ளியின் நெஞ்சம் துணுக்குற்றது. இந்தச் செல்வத்தைக் எப்படி மனமுவந்து பிரிவது? கடவுள் தன் பக்கம் இருப்பார் என்ற எண்ணத்தில் தானே வாக்குக் கொடுத்தாள்! இந்த மாதிரி சோதனை ஏற்படுமென்று தோன்றியிருத்தால் சொல்லியிருக்க மாட்டாளே!

ஐயோ! இத்தனை நாட்கள் ஒரே மாதிரி ஆட்டம் ஆடிக்கொண்டிருந்த வரதராஜப் பெருமாள் இன்று மட்டும் ஏன் தவறிவிட்டார்? இல்லையில்லை .. அவர் தவறவில்லை. தன் விருப்பப்படி தான் எல்லாம் நடக்கும் என்ற நினைவில் செருக்கடைந்த அவளுக்குத் தண்டனையளித்துவிட்டார். அவள் தவித்துப் போனாள்.

ஆம்! அது பெண்ணாப் பிறக்காமல் பிள்ளையாய்ப் பிறந்து விட்டது!

அவள் அருகிலிருந்த கணவனை அழைத்து விஷயத்தைச் சொன்னாள். அவனும் தன் குழந்தையை முதலாளிக்குக் கொடுப்பதில் மகிழ்ச்சியே அடைந்தான். ஆனால் மனைவியின் கண்ணீரும் அந்தப் பச்சைஉடம்புக்காரியின் மனம் அதிர்ச்சியடையக் கூடாது என்ற எண்ணமும் அவன் மனதை மாற்றின. துணிந்துவிட்டான் பொய்கூற. தனக்குப் பெண் பிறந்திருப்பதாய் எஜமானிடம் கூறினான்.

அவர் மகிழ்ந்து வள்ளிக்குப் பழங்கள் வாங்கிக்கொடுக்கும்படியாய் ஐந்து ரூபாய் பணத்தை எடுத்துக் கொடுத்தபொழுது கோதண்டன் மனம் குன்றியவனாய் பணத்தைவாங்கிக் கொள்ள மறுத்துவிட்டுச் சென்றுவிட்டான்.

முதலாளிக்குத் தெரிவிக்கப்பட்ட விஷயம் அவர் மனைவிக்குத் தெரியாமல் இருக்குமா? அவளும் அப்போதுதான் தனக்கும் வள்ளிக்கும் நடந்த பேச்சையும் ஒப்பந்தத்தையும் அவரிடம் கூறினாள் குழந்தை தனக்குக் கிடைக்க முடியாமல் தெய்வம் சதி செய்துவிட்டதே என்று பெருமாளையே நொந்தாள். செட்டியாரும் வருந்தினார். ஆயினும் இருவருக்கும் கோதண்டம் தம்பதியின் மேல் கோபமே ஏற்படவில்லை.

ரரஜாம்பாள் வள்ளியையும் குழந்தையும் பார்த்துவர ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டாள், பிரபல வர்த்தகரின் மனைவி ஓர் ஏழைப் பார்க்க வந்ததில் அந்த வைத்தியசாலையே திமிலோகப்பட்டது. ஒரு கையில் பிளாஸ்கில் பாலுடனும் மற்றொன்றில் பழங்கள் நிரம்பிய பையுடனும் ஆஸ்பத்திரி வாயிற்படி ஏறும் போதே வள்ளி இருக்குமிடத்தை ஓர் நர்ஸிடம் கேட்டுத் தெரிந்து கொண்டாள். ஒரு நிமிடத் தயக்கத்துக்குள் உள்ளே நுழைந்தாள்.

அந்த வார்டின் கோடியில் தான் பாயில் படுத்திருந்தாள் வள்ளி. ராஜாம்பாள் அவளை நெருங்கியதும் வள்ளி பரபரவென்று குழந்தையைப் போர்த்தினாள்.

ராஜாம்பாள் சிரித்தாள்.

வள்ளி திகைத்தாள். ஒருவேளை...தெரிந்திருக்குமோ?"

"அம்மா...!" அவள் குரல் நெஞ்சிற்குள்ளேயே சுழன்றது.

"ஆமாம்...சும்மாயிரு...எனக்கெல்லாம் தெரியும். வாசலிலேயே நர்ஸம்மா சொல்லிட்டாங்க...எங்கே... என் ராஜாவைக் காட்டு...'உரிமை'யோடு அவளருகில் அமர்ந்து குழந்தையை எடுத்துக்கொண்டாள்.

வள்ளி திணறினாள். அவள் பதில் கண்ணீரும் கேவலுமாய் வெளிப்பட்டது.

"வள்ளி! அழாதேயம்மா...! நான் ஆசைப்பட்டது தவறுதான். ஏழுகுழந்தைகள் இருந்தபோதிலும் எட்டாவதை எனக்குக் கொடுத்துவிட நீ விரும்பவில்லை. தாய்மையின் பெருமையே அதுதான் அம்மா!...எனக்கு அது தெரிந்திருக்க நியாயமில்லை... பிள்ளையே பெறாத மலடியல்லவா நான்?'

"அப்படிச் சொல்லாதீங்கம்மா!" வள்ளி தொண்டையடைக்கக் கூறினாள்.

"இல்லை வள்ளி...! அது நிசந்தான்.. நீ எனக்கு இவனைக் கொடுக்க வேண்டாம்...நீயே வைத்துக் கொள்... ஆனால் தினமும் நான் அவனைக் கொஞ்ச

நேரமாவது வைத்துக்கொள்ள அனுமதி கொடு அம்மா...! நான் சொன்னாலும் சொல்லா விட்டாலும் எங்கள் எதிர்கால வாரிசுஇவன்தான் இது பொய்யல்ல...உறுதி" கண்களில் கண்ணீருடன் அவள்" என் ராஜாக் குட்டி...!" என்று கொஞ்சியவாறே குழந்தையின் கன்னக் கதுப்புக்களைத் தன் முத்தங்களால் சிவக்கடித்தாள். ஏதுமறியாமல் தூங்கிக் கொண்டிருந்த அச்சிசு தன் இதழ்களை அகற்றிச் சிரித்தது.

பலகணி

"புழுக்கமாக இருக்கிறது கதவைத் திறந்துவை! பலகணியைத் திற!''

வேனில் காலத்தின் ஏழை வீடுகளின் நியதிப் பேச்சு.

வீட்டுக்குப் பலகணி இருப்பதுபோல்—மன மாளிகைக்கும் பலவாயில்கள். ஆமாம்; ஏழையோ, ஏந்தலோ, குருடனோ அல்லது குரூபியோ எல்லோரும் மனங்களைப் படைத்தவர்களே. அந்த மனங்களுக்கு—சிறிது முயற்சி செய்தால்—நல்ல வாயில்களும், ஆரோக்கியமான பலகணிகளும் அமைக்க முடியும்.

வாயில்களும், ஜன்னல்களும், காற்றையும், வெளிச்சத்தையும் உள்ளே கொண்டுவரும் பொழுது இருளும், புழுக்கமும் தொலைகின்றன. மனமும் விரிவடைகிறது. விசாலமாகிறது; தன்னலம் தேய்கிறது; பிற்போக்கும், மூடநம்பிக்கையும் ஓட்டம் எடுக்கின்றன.

நெஞ்சம் — நல்ல மாளிகை ஆகின்றது.

மனமாளிகையின் பலகணிகளில்—கற்பனையின் அழகும், உணர்ச்சிகளின் அலைகளும், மொழியின் நயமும் கலந்து உருவாகும் கவிதைப்பலகணியைத் திறந்து, துய்க்க—உங்களை 'ரசிகன்' அழைக்கிறான்.

கொஞ்சம் சிரமமான வேலைதான். மனமாளிகையின் உயர்மட்டப்பலகணிகளில் ஒன்றல்லவா, 'கவிதா ரசிப்புச் சாளரம்?'

* * *

ரசிகனுக்குப் பல குறைகள் உண்டு. ஒப்புக்கொள்கிறான்.

ரொம்ப 'ஆழமான' உழைப்போ—இல்லை அழுத்தமான அநுபவங்களோ—இல்லை.

சிலரைப்போல—வேஷம்போடவும் மாட்டான். 'பெரிய விமர்சகன்' என்று பெருமை அடித்துக்கொள்ளவும் தகுதியும் கிடையாது.

கவிதைப்பலகணியை நெஞ்சம் சோர்வுற்றுத் துடிக்கும்பொழுதோ—இல்லை மகிழ்ச்சியின் சிகரத்தில் உலாவும் பொழுதோதான் திறப்பது பழக்கம். (நமது தமிழ் சினிமாக்களின் கதாநாயக, நாயகியர் சோக கட்டத்தில் தொகையறுவகையருப் பாட்டும்—காதல் சீன்களில் 'டூயட்' எக்ஸ்ட்ராவும் முழக்குகிறார்களே—அதுபோல!)

அதிலும்—கால அளவுகோலைக் கையில் கொண்டோ இல்லை மொழி, நாடு என்று பிரித்துக்கொண்டோ கவிதைச் செல்வங்களை ரசிப்பது இல்லை, ஏதோ — மனதிற்குப் பிடித்ததை—பொறுக்கிக்கொண்டு —அநுபவிப்பது.

இந்தக்குறைகளை எல்லாம் 'பலகணி'யிலே பார்க்கலாம்.

* * *

முன்னுரையை முடிக்குமுன்னர்—இன்னும் ஓர் வார்த்தை.

பிறமொழிக் கவிஞர்களின் படைப்புகள் உணர்ச்சி வடிவில் உரைநடையில் 'பலகணி'யில் தரப்படும். கவிதைப்படுத்தி வராது, 'ரசிகன்'தானே?

* * *

ஆங்கில இலக்கிய உலகின், சென்ற நூற்றாண்டில் ஆட்சி செய்த புலவர்களில் — தலைசிறந்த ஒருவன், லார்ட் ஆல்பிரட் டென்னிஸன். அவனுடைய 'யூலிஸஸ்' என்ற சின்னஞ்சிறு கவிதை—தளர்வுற்ற நெஞ்சுக்கு அமிர்தம். முதுமையை ஓட்டும் காயகல்பம்.

இதாகா என்ற சின்னஞ்சிறு கிரேக்கத் தீவின் அரசன் யூலிஸஸ். டிராய் நகர இளவரசன் பாரீஸ், கிரேக்கப் பேரழகி ஹெலனை தூக்கிச் சென்றதால்—மூண்ட பெரும் போரில் கிரேக்கர்கள் வெற்றி அடைய பெரும் உதவி செய்தவன் யூலிஸஸ்.

டிராய் வீழ்ச்சிக்குப் பிறகும்—மற்ற எல்லா கிரேக்க வீரர்களைப்போல யூலிஸஸும் அவன் தோழர்களும் நாடு திரும்பவில்லை. ஓயாது புதிய புதிய இடங்களுக்கு ஓடிக்கொண்டே இருந்தார்கள்; துயர்பட்டார்கள், பல பல அரக்கர்கள், மாயமோகினிகளால்.

இறுதியிலே தள்ளாத முதுமையில் தாயகத்திற்கு வந்தார்கள்.

ஆனால் — இதாகாவின் சம்பவங்க ளற்ற வாழ்க்கை—உப்பு, சப்பில்லாத ஆட்சி—யூலிஸஸிற்குப் பிடிக்கவில்லை. அவன் அத்தீவின் ஆட்சிப்பொறுப்பை தன் மகன் டெலமேகஸிடம் ஒப்படைத்து விட்டு—மீண்டும் கடலோடத் திட்ட மிடுகிறான்.

இதோ! முதுமை மூண்டுவரும்பொழு தும் தளராத யூலிஸஸ்— இதாகாவின் சலிப்புத்தட்டும் வாழ்வைப் பற்றிப் பேசுகிறான். * "என்ன வாழ்க்கை! பொருள் சேர்ப்பதும், உறங்குவதும், உண்பதுமாக உள்ள இந்தக் காட்டு மிராண்டி ஜனங்களை ஆட்டிப் படைக் கும் அரசன் நான்! என்னை உணராத வர்கள் இவர்கள்! மூப்பு முதிர்ந்துவிட்ட மனைவியுடன், இந்தச் சலனமற்ற மாளி கையில், பாறைகள் நிறைந்த வளமற்ற நாட்டை ஆட்சி செய்வதால், சோம் பேறி அரசனாகிய எனக்கு என்ன லாபம்?"

இப்படித் துவங்குகிறது பாடல். கொஞ்ச நாட்கள் இதாகாவில் ஆட்சி செய்து அலுத்துவிட்ட யூலிஸஸை அழகாக உருவகப்படுத்திவிட்டார் டென்னிஸன்.

பிறகு... யூலிஸஸின் நெஞ்சிலே பழைய நினைவுகள் குமுறுகின்றன; குளிர்ந்துவிட்ட எரிமலை பொங்கத் தொடங்குகிறது. 'நான் யார்?' என்று என்று கேள்வி பிறக்கிறது "திரைகட லோடாது ஓய்ந்து இருக்க என்னால் ஆகாது. வாழ்க்கையை முழுவதுமாக ரசித்துக் குடித்தாகவேண்டும்!"

மதுபானத்தில் ஓர் ஏடு படியுமாம், (சொல்லித்தான் கேள்வி!) அந்த ஏடு அல்லது ஆடை, குடிகாரர் குடிக்கக் குடிக்கக் குடிக்க — கீழே போய்க் கொண்டே இருக்குமாம். இறுதியில் கோப்பை அல்லது (பூப் போட்ட) கிளாஸின் அடியிலே தங்கி விடுமாம்..

ஒருவனுக்கு நல்ல பெரும் குடிகாரன் என்று சர்டிபிகேட் வழங்க வேண்டு மென்றால் — அவன் இறுதியிலே படியும் அந்த ஏடுவரை போதை ஏறிய நிலையிலும் குடித்தால் —தாராளமாக வழங்கிவிடலாம்!

அதைத்தான் யூலிஸஸ் சொல்கிறான்; "I will drink life to the lees" என்று! என்ன அழகிய உவமை!

இன்னும் பேசுகிறான், யூலிஸஸ்: "நான் என்ன சாதாரண மானவனா? என் பெயர் அறியாத இடத்தைத் தேடிவிட்டது. ("I am become a name.") பசி கொண்டலையும் இதயத் தோடு — எவ்வளவோ பார்த்துவிட் டேன்; தெரிந்துகொண்டேன். எத்தனை நகரங்கள்! எவ்வளவுவித கலாசாரங் கள்! எத்தனைவித நாடுகள்! ஆட்சி மன் றங்கள்! அரசாங்கங்கள்! சென்ற இடங் களிலெல்லாம் நான் கடையனாகவா இருந்தேன்! எல்லாரிலும், கௌரவத் துக்கு உரியவனாக! எனது வீரர்களு டன், தொலைவிலே உள்ள டிராய் நக ரின் ஓசைமிக்க போர்க்களங்களில் போர் அநுபவத்தின் மகிழ்வைக் குடித் தேன்; நான் அநுபவித்த எல்லாவற்றி லும் என் முத்திரையைப் பதித்துவிட் டேன்!"

வெற்றிப்பெருமிதமும், செருக்கும் கொண்டு பேசுகிற 'சுருதி' திடீரென்று குறைகிறது:

"என்றாலும் — எல்லா அநுபவங் களுமே அடிவானத்தைப்போல-நான் பார்க்காத உலகங்களெல்லாம் அதோ! தொலைவிலே நான் நெருங்க, நெருங்க இன்னும் தொலைவாகின்றனவே!"

"சே! கத்தி என்றால் உபயோகத் திலே பளபளப்பாக வேண்டும்! உறக் கத்திலே துருப்பிடித்து மாள்வதா?"

சலிப்பின் எதிரொலியில் மீண்டும் வீரப்பெருமிதம் மேலே எழுகிறது!

"வாழ்வு சிறிதுதான்; ஆனால் இனி மீதி இருக்கும் வாழ்வில் ஒவ்வொரு நிமிடமும், புதிய புதிய அநுபவங்களைச் சுமந்துவரும்!"

முடிவு எடுத்துவிட்டான், யூலிஸஸ். இதாகா மக்களை அழைத்து 'ஆட்சிவில கலை' அறிவித்து டெலமேகஸிற்கு முடி சூட்டுகிறான்.

ரசிகன்

'இதோ'! டெலமே கஸ். என் அருமை மகன். என் செங் கோலும், தீவும் அவனிடம் தருகி றேன். குற்றம் குறை கள் அற்றவன். உங்

* கவிதைக்கு நேர் மொழி பெயர்ப்பு அல்ல.

களை ஆளத் தகுந்தவன்'

சுருங்கிய அறிமுகத்தின் முடிவில் அன்புக்குரிய மகனாக இருந்தபோதிலும் தன்னையும், டெலமேகஸையும் ஒப்பிட்டு—'அவன் வேலை ஆட்சி செய்வது; செய்யட்டும். என் வேலை வேறு!' என்றும் சொல்கிறான்!

கவிதையின் மூன்றாவது கணு—தன்னுடன் பல, பல ஆண்டுகளாகத் தோளோடு தோள் நின்ற தோழர்களை அறைகூவும் யூலிஸஸின் பேச்சு!

"திறந்த இதயத்தினரே! நீங்களும், நானும் கிழவர்கள். ஆனால் கிழட்டுப் பருவத்திற்கும் அதனுடைய கவர்ச்சி இருக்கிறது. சாவு. அது எல்லாவற்றையும் முடித்துவிடுமே! டிராய் போர்க்களத்தில் தெய்வங்களோடு போராடுபவர்களே! இன்னும் நமக்குத் தகுந்த புகழ் வாய்ந்த செயல்களைச் செய்ய காலமிருக்கிறது!

"பூமியையும், வானத்தையும் ஆட்டிப் படைத்த நமது பழைய வலிமை போய்விட்டது, என்றாலும் நமக்கே உரிய சக்தி எங்கே?"

"புறப்படுங்கள்—முயல்வோம்! தேடுவோம்! கண்டு பிடிப்போம்! ஓயமாட்டோம்!" "To strive, to find and not to yield!" முடிந்து விட்டது கவிதை. தளர்ச்சியிலே, கிளர்ச்சியைக் காட்டி, முயற்சியிலே முடிகிறது.

சோர்ந்த நேரங்களில் நாடக பாணியிலே படிக்க வேண்டிய கவிதை இது—உரக்க—யூலிஸஸாக மாறி— முழங்க வேண்டிய அற்புதக் கவிதை!

தேர்தலிலே தோற்றவர்களும்—ராக்கெட்டிலே பறப்பவர்களும் கூட இப்பாடலைப் படித்தால் புதிய 'உயிர்' பெறுவார்கள்!

அன்புத் தமிழ்நேயர்களே! உங்களிலே ஒரு கவிஞராவது இல்லையா? இதைத் தமிழாக்கி தரமாகத் தரக்கூடாதா?

"என்னப்பா இது? எல்லாம் சில்லுனு ஆறிப் போய் இருக்கு? சூடா ஒண்ணுமில்லையா?

அதுக்கு நான் என்னங்க செய்யறது? இது "ஏர் கண்டிஷன் ரூம்" சார்!

டாக்டரின் பணிவு!" வீட்டிலே குழாய் ரிப்பேர். தண்ணி வரவில்லை. டிஸ் பென்ஸரியிலே இருக்கிற ஜாடியிலிருந்து ஒரு குடம் பிடிச்சிண்டு போகலாம்னு வந்தேன்.

".........!"

197859

த. பெ. நெ. 297

S. சந்தோஷ நாடார் லிமிடெட்

இறக்குமதியாளர்களும் மொத்த வியாபாரஸ்தர்களும்

8C-85, குமார வீதி :: கொழும்பு-11

●

அலுமினிய பாத்திரங்கள், சமையல் பாத்திரங்கள், எனுமல் பாத்திரங்கள், பீங்கான் வகைகள், போத்தல்கள், கடிகாரவகைகள், விளையாட்டுச் சாமான்கள், வாசனைத்திரவியங்கள், பவுண்டன் பேனு, சிலேட், பென்சில் வகைகள், ஷாப்பு சாமான்கள், மற்றும் உணவு சாமான்கள் மொத்தமாகவும் சில்லரையாகவும் விலே சகாயமாக எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பிராஞ்சு:

போன்: 333

19, கொட்மலே ரோடு,

நாவலப்பிட்டிய.

●

ஏஜன்ட்ஸ்:

போன்: 31752 த. பெ. நெ. 2345

S. சந்தோஷ நாடார் & சன்ஸ்

1/4, ஈவனிங் பஜார் :: P. T. மதருஸ்.

&

37, ஹைரோடு,

திருநெல்வேலி ஜங்ஷன்.

Regd. No. 6928 "Registered as a Newspaper in Ceylon" PUTHUMAI

பார்ஸலை குழந்தை போல்
அணைத்துச் செல்வோம்

எந்த லாரியும் சாமான்களைச் சுமந்து செல்லும். ஆனால் டி. வி. எஸ். லாரி தான் குறிப்பிட்ட நேரத்திற்கும். பாதுகாப்பீற்கும் பெயர் போன்றது. பதினான்கு வருட முதிர்ந்த தேர்சசியில் பண்படைந்த 2750 (எமது) சிபபந்திகள உங்கள் சாமான்களை கவனித்து காப்பாற்றிச செல்கிறார்கள். லாரி செலலும் இடங்களில். இடவசதிக்கு ஏற்றாப்போல். நமது பணடக சாலைகள் உங்கள சாமான்களை பாதுகாககின்றன.

ஸதர்ன் ரோட்வேஸ்
ப்ரைவேட் லிமிடெட், மதுரை

Edited and Published by K. T. Kosalram and Printed by J. Nadarajan Manager, Mohan Ram Press, at 101, Purasawalkam High Road, Madras 10